கல்கி



KALKI மே 13, 1956 4 அணா


ராமுவுக்கு வீடு
திரும்ப நடுக்கம்...
SUNLIGHT
ஸன்லைட் சோப்

மலர் 15 கல்கி துன்முகி ௵
இதழ் 41 சித்திரை 31

பொருளடக்கம்

மே. 13. 1956

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.




இப்பொழுது
நடைபெறுகிறது
சென்னை ஸ்ரீ கிருஷ்ணா
வெலிங்டன் · உமா
தென்னகமெங்கும்
அமோக வெற்றியுடன்
கூடிய 2 வது வாரம்
சாரதியின்
காலம் மாறிப்போச்சு
புதுமை உதயத்தின் விடி வெள்ளி
எமிழ ரிலீஸ்
ஸ்ரீ கிருஷ்ணா பிலிம்ஸ்



மலர் 15
இதழ் 41

தமிழ்த்திரு நாடு தன்னைப் - பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

துன்முகி ௵
சித்திரை ௴ 31

துன்பம் தீரத் தொழில்கள் பெருகுக!

சுதந்திர பாரதத்தின் சுபிட்சத்துக்கு இன்று இரண்டு பெரிய இடையூறுகள் முட்டுக்கட்டைகளாக இருக்கின்றன.

ஒன்று வறுமை, மற்றொன்று வேலையில்லாக் கஷ்டம்.

நாட்டில் செல்வம் பெருகி வறுமை ஒழிவதற்கும் வேலையில்லாக் கஷ்டம் தீருவதற்கும் கைத்தொழில்கள் முன்னேற்றம் அடைய வேண்டியது அவசியம் என்பதைச் சென்ற வாரம் புது தில்லியிலே நடந்த தேசிய அபிவிருத்தி சபையில் பண்டித ஜவாஹர்லால் நேரு வலியுறுத்திக் கூறினார்.

பாரத நாடு பெற்ற சுதந்திரத்தைப் பேணிப் பாதுகாப்பது கூடக் கைத்தொழில்கள் பெருகுவதையே பொறுத்திருக்கிறது என்றும் நேருஜி குறிப்பிட்டார்.

இவ்வளவு முக்கியமான கைத்தொழில்கள் விஷயத்தில் இந்திய சர்க்காரின் கொள்கை என்ன என்பது பற்றி இது வரையில் தெரியாமல் இருந்தது.

அதனால் தொழில் துறைகளில் ஏராளமான மூலதனம் போடும் விஷயத்தில் தனிப்பட்டோரிடையே நம்பிக்கையும் உற்சாகமும் ஊக்கமும் குன்றியிருந்தன.

ஆனால், சென்ற வாரம் மக்கள் சபையில் நேருஜி கைத்தொழில்கள் விஷயமாக இந்திய சர்க்காரின் கொள்கை என்ன என்பதை விவரித்துக் கூறினார்.

அதன்படி கைத்தொழில்கள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

1. போர்த் தளவாடங்கள், வெடி மருந்து போன்ற இராணுவ உபகரணங்கள், அணு சக்தி, இரும்பு, எஃகு உற்பத்தி செய்வதற்கான பெரும் யந்திரங்கள், மின்சார யந்திரங்கள், பலவகை உலோகக் கனிகள், தங்கம், வைரம், கந்தகம் முதலிய மற்றும் பல தொழில்கள் சர்க்காரின் பூரண நிர்வாகப் பொறுப்பில் இருந்து வரும்.

2. அலுமினியம் முதலிய உலோகங்கள், யந்திரக் கருவிகள், ஔஷதம் உற்பத்தி செய்வதற்கான சரக்குகள், செயற்கை ரப்பர், ரஸ்தா போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து முதலிய பல தொழில்களின் அபிவிருத்தியில் சர்க்கார் அதிகப் பொறுப்பு எடுத்துக் கொண்டு புதிய முயற்சிகளில் ஈடுபடுவார்கள். எனினும், அத் தொழில்களைத் தனிப்பட்டோர் தங்கள் சொந்தப் பொறுப்பிலோ, சர்க்காருடன் சேர்ந்தோ நடத்துவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

3. மேலே குறிப்பிட்டவற்றைத் தவிர மற்ற எல்லாத் தொழில்களும் தனிப்பட்டோரின் பூரண பொறுப்பில் விடப்படும்.

குறிப்பிட்ட தொழில்களின் நிர்வாகத்தைச் சர்க்கார் எடுத்துக் கொள்வது நியாயமா? குறிப்பிட்ட சில தொழில்களின் நிர்வாகத்தைத் தனிப்பட்டோரின் நிர்வாகத்தில் விடலாமா?—இக் கேள்விகள் சம்பந்தப்பட்டவரையில் கருத்துவேற்றுமை இருக்கத்தான் செய்யும்.

எனவே, அதன் சம்பந்தமான சர்ச்சையில் இறங்குவதால் யாதொரு உருவான பலனும் ஏற்படுவதற்கில்லை.

தொழில்களில் அமித லாபம் பெறுவதே இறுதி இலட்சியம் என்றிருந்த காலம் மலையேறிவிட்டது.

எந்தத் தொழிலாயினும் சரி, யாருடைய பொறுப்பில் இருந்தாலும் சரி, அது அமித லாபத்தைக் கருதாது, சமுதாய நலனை, நாட்டின் எதிர்கால க்ஷேமத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்கவேண்டும் என்பதுதான் மிகவும் முக்கியமாகும்.

பெரிய தொழில் துறைகளைத் தேசிய மயமாக்குவதன், அதாவது சர்க்கார் தங்கள் நிர்வாகப் பொறுப்பில் எடுத்துக் கொள்வதன் முக்கிய நோக்கமே அதுதான்.

எனவே, தனிப்பட்டோர் அவநம்பிக்கையை விட்டு, தற்போது தங்களுக்கு அளிக்கப்படும் சந்தர்ப்பத்தைப் பூரணமாக உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும்; திறமையுடனும் நேர்மையுடனும் நாட்டுக்குத் தங்கள் கடமையைச் செய்ய முன்வர வேண்டும்.

சர்க்காரும் தனிப்பட்டோரும் தொழில் துறை நிர்வாகத்தில் தங்கள் கடமையை ஒழுங்காக நிறைவேற்றுவார்களாயின், பத்து அல்லது 'பதினைந்து வருஷங்களில் வறுமை ஒழிவதற்கும் வேலையில்லாக் கஷ்டம் தீருவதற்கும் வழி பிறந்துவிடும் என்பதில் ஐயமில்லை.

* * *

தேசிய அபிவிருத்தி சபையில் நிகழ்ந்துள்ள மற்றொரு சம்பவம் குறிப்பாகத் தென்னாட்டில் உள்ளவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும் என்பது நிச்சயம்.

அதாவது முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னிந்தியாவுக்கு நீதி வழங்கப்படவில்லை என்ற அபிப்பிராயம் பொதுவாக நிலவி வருகிறது அல்லவா!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அந்தக் குறை தீரும் என்று இந்திய சர்க்கார் பிரதம மந்திரி, உணவு மந்திரி, கைத்தொழில் வர்த்தக மந்திரி எல்லோரும் தேசிய அபிவிருத்தி சபையில் உறுதி கூறியிருக்கிறார்கள்.

உதாரணமாக, தென்னிந்தியாவில் சர்க்கரைத் தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்குச் சகல வசதிகளும் அளிக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள்.

ஏற்றத் தாழ்வில்லாமல் எல்லா ராஜ்யங்களிலும் சமமாகப் பொருளாதார அபிவிருத்தி முறைகளைக் கைக்கொள்ள வேண்டிய அவசியத்தைச் சென்னை நிதி மந்திரியும் அச் சபையில் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

எனவே, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்படி தமிழ் நாட்டில் பல புதிய தொழிற்சாலைகள் ஏற்பட்டு, பொருளாதார முன்னேற்றத்துக்கு வழி பிறக்குமென்று நம்புகிறோம்.

ஆதரவு பெருகுகிறது

காங்கிரஸ் தலைவர்கள் அமிருதசரஸ் காங்கிரஸ் மகாநாட்டில் ஓர் அரிய தீர்மானம் நிறைவேற்றினார்கள். பல மொழி ராஜ்யங்கள் ஏற்பட்டால் தேசத்தின் பெருந் திட்டங்கள் நல்லபடியாக உருவாக்க முடியும் என்று அந்தத் தீர்மானம் கூறுகிறது. இப்படி இன்னும் பல நற்பயன்கள் உண்டு என்று கூறுகிறது. இவ்வுண்மைகளையெல்லாம் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவர்கள் பொதுமக்கள் முன்னிலையில் பிரசாரம் செய்து விழிப்படையச் செய்திருக்க வேண்டும்.

ஆனால் அவ்விதம் செய்யாமல் சும்மா இருந்ததோடன்றி சட்ட சபையில் ராஜ்யச் சீரமைப்பு மசோதா நிறைவேற்றி விட்டுத் தங்கள் கடமை முடிந்து விட்டதாக இருந்து விட்டார்கள். ஆனாலும் சென்ற வாரம் மக்கள் சபையில் மந்திரி திரு பந்த் அவர்கள் தட்சிணைப் பிரதேசக் கொள்கையை ஆதரித்துப் பேசியிருக்கிறார்.



பண்டித பந்த்

"தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம் ஆகிய மூன்று ராஜ்யங்களும் சேர்ந்து ஒரு பெரிய தட்சிணப் பிரதேச ராஜ்யமாக்க வேண்டும் என்றுதான் இப்பொழுதுகூட நாம் மனப்பூர்வமாக விரும்புகிறோம். மூன்று அல்லது இரண்டு ராஜ்யங்கள் இணைவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி ஆராய்ந்து நல்ல முடிவுக்கு வர வேண்டும் என்றுதான் நாம் விரும்புகிறோம்!" என்று கூறியிருக்கிறார்.

தில்லியில் அவர் அப்படிக் கூறினார் என்றால் கோவைக்கு வந்த தந்தி தபால் இலாகா மந்திரி திரு ஜகஜீவன்ராம் தற்போதுள்ள இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட பிரதேசங்களை இணைத்துப் பெரிய ராஜ்யங்கள் அமைக்கும் விஷயத்தில் தேசத்துக்கே வழி காட்டுமாறு தமிழ்நாட்டு மக்களைக் கேட்டுக் கொண்டார். "தெற்கு ராஜ்யங்கள் ஒன்று சேர்ந்து தட்சிணைப் பிரதேசம் அமைப்பதைக் காங்கிரஸ் காரியக் கமிட்டியும் சர்க்காரும் வரவேற்கும்" என்று கூறியிருக்கிறார்.

ஏன்! தமிழ் நாட்டு காங்கிரஸ் கமிட்டியின் உபதலைவர் திரு வெங்கடகிருஷ்ண ரெட்டியார் தட்சிணைப் பிரதேசத்தை ஆதரித்துக் காங்கிரஸ் ஊழியர்களுக்கு ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார்:


"சென்னை சட்டசபையில் ராஜ்யச் சீரமைப்பு மசோதா நிறைவேற்றப் பட்டதற்கும் தட்சிணைப் பிரதேச அமைப்பு யோசனைக்கும் தொடர்பு இல்லை. ராஜ்யச் சீரமைப்புக் கமிஷன் அறிக்கை பேரில் சீரமைப்பு மசோதா ஏற்பட்டது. சட்டசபையில் சீரமைப்பு மசோதா நிறைவேற்றப்பட்ட காரணத்தினால் அமிருதசரஸ் தீர்மானப்படி காங்கிரஸ்காரர்கள் நடந்து கொள்வதற்குத் தடை இடையாது. எல்லாக் காங்கிரஸ்காரர்களும் முக்கியமாக, தென்னாட்டு காங்கிரஸ்காரர்கள் பல மொழி ராஜ்ய அமைப்புக்குப் பிரசாரம் செய்ய வேண்டும்" என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்.



திரு ஜகஜீவன்ராம்

தமிழ்நாட்டில் சென்றவாரம் மதுரையில் தட்சிணப் பிரதேசத்தை ஆதரித்துப் பிரசாரம் செய்வதற்கு என்று ஒரு சங்கமே நிறுவப்பட்டிருக்கிறது என்று அறிகிறோம்.

குரங்கும் தூக்கணாங் குருவியும்!



டாக்டர் அம்பேத்கர் டில்லி மக்கள் சபையில் பெரிய ராஜ்யங்களை யெல்லாம் துண்டு துண்டாகப் பிரிக்க வேண்டும் என்றார்!

இப்படித் தட்சிணப் பிரதேசக் கொள்கையின் நன்மைகளை மக்கள் உணர ஆரம்பித்து வருகிறார்கள்.

நாட்டு மக்கள் சுபிட்ச மடையவும் நீர் வளமும், நிலவளமும் கனரகத் தொழில் வளமும் பெருகவும் அகில இந்திய அடிப்படையில் செல்வாக்குப் பெற்றவர்களாகத் திகழவும் தென்னாட்டில் பேர் இராஜ்யம் நிலவ வேண்டியது மிக அவசியம். இதற்குத் தட்சிணப் பிரதேச அமைப்பு ஒன்றுதான் வழி.

தமிழ் நாட்டு நலனில் அக்கறையுள்ள ஒவ்வொரு தேச பக்தரும் தட்சிணப் பிரதேசக் கொள்கையை எல்லாருக்கும் எடுத்து உணர்த்த வேண்டும். காங்கிரஸ்காரர்கள் இப்பொழுதாகிலும் விழிப்படைந்து தங்கள் கடமையைச் செய்வார்கள் என்று நம்புகிறோம்!

வாபஸ் வாங்கிய வங்கப் பிரதமர்

சென்ற ஜனவரி மாதம் அமிருதசரஸில் காங்கிரஸ் மகாசபை கூடியிருந்த சமயம் வங்க முதல் மந்திரியும், பிகார் முதல் மந்திரியும் சேர்ந்து ஓர் அற்புதமான யோசனையை வெளியிட்டுத் தேசத்தின் முழு கவனத்தையும் கவர்ந்தார்கள். அது ராஜ்யச் சீரமைப்புக் கமிட்டியின் ஆலோசனை பற்றித் தலைவர்களுக்குள்ளேயும் பொது மக்களிடையேயும் உஷ்ணமான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம். நாட்டில் ஆங்காங்கே குழப்ப நிலை தோன்றியிருந்த தருணம். இந்தச் சமயம் பார்த்துப் பிகாரும் வங்காளமும் சேர்ந்து தங்களுக்குள் இணைப்பு ஆலோசனையை வெளியிட்டது. பூஜை வேளையில் கரடியை விட்ட மாதிரி இருந்த இந்தத் திடீர் யோசனையானது அப்போது தோன்றியிருந்த உஷ்ணத்தையும் குழப்பத்தையும் அடக்கி அமுக்கி விட்டது என்றே கூற வேண்டும்.

பிறகு, ராஜ்யங்களுக்குள்ளே, ஐக்யங்களோ, இணைப்புகளோ, கூட்டுறவுகளோ ஏற்பட வேண்டிய அவசியத்தைப் பற்றிப் பலரும் வற்புறுத்தினார்கள். வங்காளம்-பிகார்; இதற்கு வழிகாட்டியிருப்பதைச் சுட்டிக்காட்டினார்கள்.

வங்க முதல் மந்திரி ஸ்ரீ பி. ஸி. ராய் பிகாருடன் இணைவதற்கு முன்வந்த தீரத்தைப் பாராட்டினார்கள். மேலிடத்திலிருந்து பலத்த ஆதரவும் பாராட்டுதலும் அவருக்குக் கிடைத்தன.

இவ்வளவெல்லாம் நடந்த பிறகு வங்க—பிகார் இணைப்பு தினத்தைப் பொதுமக்கள்

அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த நேரத்தில் மேற்கு வங்காள முதல் மந்திரி ஸ்ரீ ராய் 'ராபணு' என்று ஒரு செய்தியை வெளியிட்டு மீண்டும் நம்மை யெல்லாம் ஆச்சரியத்தில் மூழ்கடித்திருக்கிறார்.

“வங்க–பிகார் இணைப்பு யோசனையை வாபஸ் வாங்கிக் கொள்கிறேன். இதற்கு முக்கிய காரணம் சமீபத்தில் வடமேற்கு கல்கத்தா தொகுதியில் நிலவி பார்லிமெண்டுக்கு நடைபெற்ற உபதேர்தலின் முடிவேயாகும். இதே உப தேர்தலில் பிகார்–வங்காளம் இணைப்புக்கு எதிரான கருத்துடைய ஸ்ரீ எம். கே. மித்ரா பெருவாரியான வோட்டுகளைப் பெற்று வெற்றி பெற்றிருக்கிறார். எனவே, முடிவானது என் இணைப்பு யோசனைக்குப் பொதுமக்களிடையே ஆதரவு இல்லை என்பதையே காட்டுகிறது” என்று ஸ்ரீ பி. ஸி. ராய் கூறுகிறார். ஆனால், அதே மூச்சில் ஸ்ரீ ராய் இந்தத் தேர்தலின் முடிவே பொது மக்களின் முடிவாக ஆகிவிடாது என்றும் கூறுகிறார்.

இவ்வளவு தூரம் விஷயத்தைத் தெளிவாகப் புரிந்து கொண்டிருக்கும் ஸ்ரீ ராய் தமது இணைப்பு யோசனையை வாபஸ் வாங்கிக் கொண்டிருப்பதுதான் ஆச்சரியத்திலும் ஆச்சரியமாகும். இணைப்பு யோசனையைக் கைவிடாமலிருந்தால் ஒருவேளை வரப்போகும் பொதுத் தேர்தலில் தாம் தோல்வி அடைய நேரிடும் என்று கருதி ஸ்ரீ பி.ஸி. ராய் பயந்து விட்டாரா என்று தெரியவில்லை.

இங்கே, நமது நிதி மந்திரி “கட்சிக்குள் பிளவு ஏற்படும்” என்று ஒரு சாக்கைச்சொல்லி, சென்னை—திருவாங்கூர் கொச்சி இணைப்பு யோசனையைக் கைவிடுவதாகக் கூறினார்.

அங்கே பொதுமக்கள் அபிப்பிராயம் வேறு விதமா யிருக்கிறது என்று பி. ஸி. ராய் தம் யோசனையை வாபஸ் வாங்கிவிட்டார்.

இராஜ்யங்கள் இணைந்து வாழ்வதிலுள்ள நன்மைகளை விளக்கி அமிருதசரசில் கூடிய காங்கிரசில் தெளிவாகத் தீர்மானம் நிறைவேற்றி யிருக்கிறார்கள்.

காங்கிரஸின் லட்சியங்களுக்காகவே தம் வாழ்நாள் முழுதும் பாடுபட்டு வந்திருக்கும் ஸ்ரீ ராய் இப்போது காங்கிரஸின் லட்சியமான இணைப்பு யோசனையைக் கை விட்டிருக்க வேண்டிய அவசியமில்லை. பொது மக்களிடையே இணைப்பின் அவசியத்தை வற்புறுத்தி அதன் நன்மைகளை எடுத்துப் பிரசாரம் செய்ய வேண்டியது அவர் கடமையாகும். அதற்குப் பின்னரும் பொதுமக்கள் அந்த யோசனையை ஒப்புக் கொள்ளவில்லையென்றால் அப்போது மீண்டும் வழி வகைகள் என்ன என்று ஆலோசிக்கலாம். பொதுவாகப் பதவிகளை யெல்லாம் விடக் காங்கிரஸின் உன்னத லட்சியமே பெரிதல்லவா!

விவசாயத்தைப் பெருக்குவோம்!

கடந்த சில மாதங்களாக உணவுப் பொருள்களின் விலைவாசி உயர்ந்து அதன் பயனைப் பொதுமக்கள் அனுபவித்து வரும் கஷ்டம் யாவரும் அறிந்ததே.

பொது மக்களின் வாழ்க்கைச் செலவில் அறுபது சத விகிதம் உணவுக்காகச் செலவழிக்கப்படுகிறது என்று கணக்கெடுத்திருக்கிறார்கள். இந்த விலைவாசி உயர்வு காரணமாக உணவுச் செலவின் விகிதம் இன்னும் அதிகமாகி யிருக்க வேண்டும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

இந்த விவரங்களை நன்குணர்ந்துள்ள நமது நிதி மந்திரி அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்திருப்பது பற்றி மகிழ்ச்சி அடைகிறோம்.

மத்திய சர்க்கார் கையிருப்பிலுள்ள முதல் தரமான அரிசியைப் படி 0-11-6 வீதம் டி. யு. ஸி. எஸ். மளிகைக் கடைகளின் மூலம் விற்றும் வருகிறார்கள். இந்த ஏற்பாட்டைப் பலரும் வரவேற்பார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

உணவு உற்பத்தி விஷயத்தில் டில்லி சர்க்காரும் மிகவும் உஷாராகவே இருக்கிறார்கள் என்று தெரிகிறது.


நமது தேசம் மாபெரும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பிரவேசிக்கப் போகும் இந்தச் சந்தர்ப்பத்தில் நமது திட்டங்கள் யாவும் வெற்றியடைவது உணவு உற்பத்தியைப் பொறுத்தே இருக்கின்றன. உணவு உற்பத்தி குறைந்து விலைவாசிகள் உயர்ந்தால் அதன் காரணமாக எல்லாத் திட்டங்களும் குட்டிச் சுவராகிவிடும் என்பதைப் பண்டித நேரு தேசிய அபிவிருத்தி சபையில் விளக்கியிருக்கிறார்.

ஆகவேதான் ஏற்கனவே பதினைந்து சத விகிதம் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று இருந்த திட்டத்தை நாற்பது சத விகிதமாக உயர்த்த வேண்டுமென்று இப்போது மாற்றி யிருக்கிறார்கள்.

போகப் போக ஜனத் தொகையும் பெருகி, ஐந்தாண்டுத் திட்டம் காரணமாக நாணயப் பெருக்கமும் ஏற்பட்டால் அதன் பயனாக எதிர்காலத்தில் பயங்கரச் சூழ்நிலைகள் தோன்றக் கூடும். கள்ள மார்க்கெட்டும், கொள்ளை லாப ஆசையும் தலைவிரித்தாடும். விலைவாசி உயர்வு தடுக்க முடியாத அளவுக்கு வளர்ந்து பெரிய அனர்த்தங்கள் ஏற்படும். ஆகவே இப்போதே வேண்டிய உணவுக்குத் திட்டங்கள் வகுத்துக் காரியத்தில் இறங்குவது மிகவும் அவசியமல்லவா! அதற்கு என்ன வழி என்பதைப் பார்ப்போம். நமது கிராமங்களில் உள்ள விளைச்சல் நிலங்களையும், தரிசு பூமிகளையும் மேலும் பண்படுத்தி, பாசன வசதிகளைப் பெருக்கினால் உற்பத்தி அதிகரிக்கும்.

விவசாயத் தொழில் நுட்பத் திறமையை வளர்ப்பது, உர உற்பத்தியைப் பெருக்குவது, பூசாரங்களை அதிகமாகக் காப்பாற்றுவது, விவசாயக் கருவிகளில் முன்னேற்ற முறைகளைக் கண்டு பிடித்து உதவுவது, இவை யாவும் உணவு உற்பத்தியைப் பெருக்க விரிவான அளவில் பயன்படும்.

ஜப்பானிய விவசாய முறையை நமது தேசம் முழுதும் விஸ்தரிப்பதும் ஒரு வழியாகும். எப்படியும் அடுத்த ஐந்தாண்டுக்குள் விவசாயத்தைப் பெருக்கி விலைவாசியைக் குறைக்க வழிவகை செய்தாக வேண்டும்.



கஸ்தூரி குடும்பத் திருமணம்

ஹிந்துப் பத்திரிகையின் அதிபரும், ஆசிரியருமான ஸ்ரீ கஸ்தூரி சீனிவாசன் அவர்களின் செல்வக் குமாரர் ஸ்ரீ ரங்கராஜன் அவர்களின் திருமணம் ஏப்ரல் மாதம் 25-ந் தேதி ராஜமன்னார்குடியில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மணமகள் சௌபாக்கியவதி சம்பகலக்ஷ்மி பிரபலமான ராஜமன்னார்குடி மிராசுதார் ஸ்ரீ ஏ. சீனிவாச ஐயங்கார் அவர்களின் செல்வக்குமாரி.

மன்னார்குடியில் நடைபெற்ற திருமணத்துக்கும், சென்னையில் நடந்த வரவேற்பு வைபவத்துக்கும் சென்னை ராஜ்ய மந்திரிகளும், பிரமுகர்களும், உயர்நீதி மன்றத்து நீதிபதிகளும், சர்க்கார் உத்தியோகஸ்தர்களும், பத்திரிகையாசிரியர்களும், நண்பர்களும், உறவினர்களும் திரளாக விஜயம் செய்து சிறப்பித்தனர்.

சீரும் சிறப்புடன் திருமணம் புரிந்துகொண்ட இளந் தம்பதிகள் நீடூழி காலம் வாழ்ந்து இல்லறம் இனிது நடத்திச் சகல சௌபாக்கியங்களும் பெற்றுப் பெருமையுடன் வாழப் பிரார்த்திக்கிறோம்.

என்ன சேதி?

நட்பைப் பெற ஒரே வழி

இலங்கையில் பதிவு செய்யப்பட்ட இந்தியப் பிரஜைகளுக்கு இலங்கைப் பார்லிமெண்டில் நாலு ஸ்தானங்கள் ஒதுக்கி வைத்துப் பல மாதங்கள் ஆகி விட்டன. அப்படி யிருந்தும் சமீபத்தில் நடந்த தேர்தலில் அந்த ஸ்தானங்களில் ஒன்றுகூடப் பூர்த்தியாகவில்லை. இவ் விஷயமாக அச் சபையில் சென்ற வாரம் இலங்கைப் பிரதமர் கூறியுள்ள விவரங்கள் இலங்கை இந்தியர்களுக்குச் சிறிது நம்பிக் கையைக் கொடுக்கலாம். இந்தியர்களின் பிரஜா உரிமை மனுக்களை விசாரித்து ஒரு வருஷ காலத்துக்குள் துரிதமாக முடிவு செய்ய உத்தேசித்திருப்பதாக ஸ்ரீ பண்டார நாயகா அறிவித்துள்ளார். பதிவு வேலை முடிந்ததும் அந்த நாலு ஸ்தானங்களுக்கும் தேர்தல் நடைபெறுமென்றும், இப்போது தேர்தலை நடத்தினால் இன்னும் சில மாதங் களில் இலங்கைப் பிரஜைகளாகப் போகும் இந்தியர்கள் தங்கள் வாக்குரிமையை உப யோகிக்க முடியாமற் போய் விடுமென்றும் அவர் கூறி யிருக்கிறார். இலங்கை இந்தியர் களின் வாக்குரிமையில் இவ்வளவு அக்கறை கொண்ட இலங்கைப் பிரதமர், அவர்களில் பெரும்பாலோர் இலங்கைப் பிரஜைக ளாகும் விஷயத்தில் அநுதாபம் காட்டுவார் என்று நம்புகிறோம். பாரத நாட்டின் நட்பையும் நல்லுறவையும் கோரும் ஸ்ரீ பண்டார நாயகா, அதைப் பெறுவதற் குற்ற ஒரே வழி இலங்கை இந்தியர்களில் பெரும்பாலோருக்குப் பிரஜா உரிமை அளிப்பதுதான் என்பதை உணருவார் என்று எதிர்பார்க்கிறோம்.

பொறி இயல் துறை

"தமிழர்களுக்கு நல்ல காலம் பிறக் குது! நல்லகாலம் பிறக்குது!" என்று கூறி சொல்ல வேண்டும் என்று தீவிர உணர்ச்சி எழுகிறது. பொறி இயல் கல்விக் குழுவி லுள்ள தமிழ் அங்கத்தினர்களின் குரல் ஓங்கி யிருப்பதோடன்றி அவர்கள் கோரிக்கை நியாயமானது என்று ஏகமன தாக நிறைவேறி யிருக்கிறது என்பதைக் கண்டு ஒவ்வொரு தமிழனும் மகிழ்ச்சி யடைய வேண்டும்.

அதாவது, அகில இந்திய பொறி இயல் கல்விக் குழுவின், தென் பிராந்திய கமிட்டி சென்னையில் கூடியது. ஹைதராபாத், ஆந்திரம், மைசூர், திருவாங்கூர் கொச்சி ஆகிய பல ராஜ்யத்தைச் சேர்ந்தவர்கள் கொண்ட கமிட்டி இது. இக் கமிட்டி அங்கத்தினர்கள் தங்கள் தங்கள் ராஜ்யங் களிலேயே மேற்கண்ட பொறி இயல் ஆராய்ச்சிக் கழகம் நிறுவ வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். என்றாலும் முடிவில் தமிழ் நாட்டில் சென்னையிலேயே இக் கழகம் ஏற்படுத்த வேண்டும் என்றுஏக மனதாக முடிவு செய்திருக்கிறார்கள். இந்த வெற்றிக்குக் காரணமா யிருந்த தமிழ் அங்கத்தினர்களைப் பாராட்டுகிறோம்.

பொறி இயல் துறையில் தேசம் ஐந் தாண்டுகளில் வெகு வேகமாக முன்னேறி விடப் போகிறது. அதற்கேற்பத் தென் தேசத்தவர்களும் பொறி இயல் கல்வியில் உயர்தர ஞானம் பெற வேண்டும். இதற்கு இக் கழகம் பெரிதும் உதவியாக இருக்கும்.

சென்னை சர்க்காரிடமிருந்து, கிண்டி பொறி இயல் கல்லூரியையும் மத்திய சர்க்கார் ஏற்று நடத்தப்போகிறது. ஆகவே பொறி இயல் கல்லூரி அதிக வளர்ச்சியும் வசதிகளும் பெறும். தமிழர்கள் பொறி இயல் துறையிலும் முன்னேறுவதற்குத் தக்க வாய்ப்புகள் பாரத சர்க்கார் ஏற்படுத் திக் கொடுத்து வருகிறார்கள் என்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விஷயம் அல்லவா?

வேண்டாம் கமிட்டி!

இப்பொழுதெல்லாம் மக்கள் தங்கள் குறைகளைச் சொல்லிக் கொள்ளவே பயப் படுகிறார்கள்! குறைகளைச் சொன்னால் நிவர்த்தி செய்ய முயற்சி எடுப்பதில்லை; அதற்குப் பதிலாக் ஒரு கமிட்டியைக் கொடுக்கிறார்கள்! அக் கமிட்டி, இருக்

<u>அட்டைப் படம்</u>

சிறைச்சாலையிலே!

இந்த வாரத்து அட்டையில் மின்னும் நட்சத்திரங்கள் யார் என்று தெரிகிறதா! இந்துமதியும் ரங்கதுரையும்தான். சிறைச்சாலையில் இந்துமதியை ரங்கதுரை சந்திக் கிறான். அவளுடன் பேசும் போது அவன் எண்ணமெல்லாம் எங்கோ சென்று விடுகிறது. இந்துமதியின் தைரியத்தை எண்ணி எண்ணிப் பார்க்கிறான். அவனுக்கு ஒன்றும் புரிய வில்லை. இந்தக் காட்சியைத்தான் இந்த இதழின் அட்டையிலே வண்ண ஓவியமாக வரைந்திருக்கிறார் ஓவியர் "மணியம்".



நேபாள மன்னர் முடி சூட்டு விழா

இமயமலைச் சாரலில் தவழும் பண்டையப் பெருமை வாய்ந்த நேப்பாள ராஜ்யத்தின் முடிசூட்டு விழா புராதன அரச நெறிப்படி சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ மகேந்திர வீர விக்கிரம ஷாதேவா நேப்பாள மன்னராக ஹிந்து முறைப்படி முடிசூட்டிக் கொண்டார். ஹநுமான் தோகா அரண்மனையில் நடைபெற்ற முடிசூட்டு விழா வைபவத்துக்கு மேனாடுகளிலிருந்தும், ஆசிய நாடுகளிலிருந்தும் பிரதிநிதிகள் வந்து கலந்து கொண்டு, தத்தம் அரசாங்க, மக்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர். பட்டாபிஷேகக் காட்சிகளைப் படத்தில் காணலாம்.

இற கஷ்டத்தைவிட அதிக தொல்லைகளைக் கொடுக்கும் அற்புத யோசனைகளைச் சொல்லி வைக்கிறது! ஆகவே, மக்கள் 'கமிட்டி'களுக்குப் பயந்து கொண்டு குறைகளை வெளியே சொல்லிக் கொள்ளாமல் இருப்பதே மேல் என்ற முடிவுக்கு வந்து விட்டார்கள்!

சென்னை, பம்பாய், கல்கத்தா போன்ற பெரிய நகரங்களிலிருந்து சிறிது தூரம் போகும் 'லோக்கல்' ரயில்களில் இடநெருக்கடியும், நெரிசல்களும் அதிகமாக இருக்கின்றன என்று குறைப்பட்டுக் கொண்டது விபரீதமாகப் போய் விட்டது. இந்தப் பிரச்னையைப் பரிசீலனைசெய்ய ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. அந்தக் கமிட்டி சில அபூர்வ யோசனைகள் சொல்லியிருக்கிறது! அவற்றைப் பற்றி என்னவென்று சொல்ல! ரயில்களிலுள்ள கக்கூஸ்களை எடுத்துவிட வேண்டுமாம். பெண்களுக்குத் தனிப் பெட்டிகள் ஒதுக்குவதை நிறுத்திவிட வேண்டுமாம். பெட்டிகளில் உட்காரும் பலகைகளை அப்புறப்படுத்திப் பிரயாணிகளை நின்று கொண்டு போகச் செய்ய வேண்டுமாம்—இப்படிச் சில அதியற்புதமான யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள்.

இந்த யோசனைகளில் ஒன்றாவது நேர்மையானதல்ல; சரியானதல்ல என்பது சொல்லாமலே விளங்கும். ஆகவே கமிட்டியின் சிபாரிசுகளைக் குப்பைக் கூடையில் போட்டு விட்டு ரயில்வே அதிகாரிகளே நெரிசல்களைச் சமாளிக்க அதிக ரயில்களை விட ஏற்பாடு செய்வார்களாக!

இலவசப் படிப்பு

விலைவாசிகள் ஏறிவரும் இந்காட்களில் சொற்ப வசதி யார் செய்து கொடுத்தாலும் சொற்ப வருவாயுள்ளவர்கள் யாரும் மிகவும் மகிழ்ச்சியடைவார்கள். அதிலும் கிராம அதிகாரிகள், ஆரம்ப ஆசிரியர்கள், கான்ஸ்டேபிள்கள், கடைநிலை சர்க்கார் ஊழியர்கள் இவர்கள் சர்க்காரின் சமுதாயத்தின் அஸ்திவாரம் போன்றவர்கள். இவர்கள் எல்லோருமே வருவாய்க்கும் செலவுக்கும் எப்படி முடிபோடுவது என்று எப்போதுமே திணறிக் கொண்டிருப்பவர்கள். இவர்களுடைய குழந்தைகளுக்கு ஸ்கூல் பைனல் வகுப்பு வரை இலவசப் படிப்பு அளிக்கச் சர்க்கார் தீர்மானித்திருக்கிறார்கள். இந்த வருஷம் ஜூன் மாதத்திலேயே இச்சலுகை அமுலுக்கு வருகிறது. இது உண்மையிலேயே அவர்களுக்கு அளிக்கப்படும் பெரிய வசதியாகும்.

இந்த உத்தியோகஸ்தர்கள் நிலையை விட உயர்ந்த பொருளாதார நிலையில் என். ஜி. ஓ.க்கள் இல்லை. ஆகவே அவர்களுக்கும் சர்க்கார் விரைவில் இந்த உதவியை அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.



கடல் கண்ட கனவு

ஐந்தாம் அத்தியாயம்

கரைசேர்ந்த காவலன்

வலம்புரித் தீவிலிருந்து மரக்கலத்திலே புறப்பட்ட சித்திராங்கன், மாமல்லபுரம் கடற்கரையை வந்து சேர, ஓர் அமாவாசை கழிந்து அடுத்த பௌர்ணமி ஆயிற்று. இந்த முப்பது நாட்களும் வாழ்வில் இதுவரை கண்டிராத காட்சிகளையும், இதுவரை கேட்டிராத பேச்சுகளையும், கண்டுகேட்டு அநுபவப்பட்டான் சித்திராங்கன்.

அரச வாழ்க்கை என்பது, எத்தனையோ சட்ட திட்டங்களுக்கு உட்பட்ட வாழ்க்கை முறை. இப்பொழுது அந்தச் சட்ட திட்டங்களை யெல்லாம் உதறி எறிந்து விட்டு, ஒரு சாதாரண வாலிபனைப் போல, நூறு, ஆயிரம், பதினாயிரம் என்ற மக்கள் தொகுதியில் தானும் ஒருவனாகப் பழக வேண்டும் அல்லவா? அரச வாழ்வின் தனிமையையும் சலுகைகளையும் மறந்து விட்டுப் பழக வேண்டும் அல்லவா? அந்த அநுபவங்கள் எல்லாம் முற்றிலும் புதுமையாக இருந்தன பூபதிக்கு.

சோமு



மந்திர நாயகமும், வலம்புரித் தீவின் அரசியல் நிர்வாகத்தில் முக்கிய பொறுப்பு வகித்து வந்த பிரகிருதியாரும், மற்றும் அங்குள்ள பிரதானிகளும் சொன்ன யோசனையின் பேரில், சித்திராங்கன் காஞ்சிமா நகரிலே யுள்ள 'காஞ்சி கடிகை' என்ற சர்வ கலாசாலையிலே சேர்ந்து படிக்கச் செல்லும் ஒரு மாணவனாகவே தன்னைக் கூறிக் கொண்டான். இதற்கேற்பவே வலம்புரித் தீவிலிருந்து அவன் மரக்கலத்திலே புறப்பட்டபோது, எந்த விதமான வழியனுப்பு சம்பிரதாயமோ, ராஜ



மரியாதைகளோ ஏதுமின்றி ஒரு சாதாரண மனிதனாகவே புறப்பட்டான். இதெல்லாம் அவனுக்குப் புத்தம் புதிய அநுபவங்கள்.

அது இலங்கைத் தீவிலிருந்து எங்கெங்கோ சுற்றிக் கொண்டு மாமல்லபுரம் செல்கிற மரக்கலம். இலங்கைக்கு அப்பாலுள்ள தீவுகளிலிருந்தும் பலர் அதில் யாத்திரை செய்தார்கள். சிங்களம், புட்பகம், சாவகம், மங்கலம் முதலிய தொலை தூரங்களிலிருந்தும் பலர், காஞ்சிமா நகரத்துக்குச் சென்று கொண்டிருந்தார்கள். அந்த மரக்கலத்தில் வியாபாரிகள் இருந்தார்கள். அயல் நாட்டுத் தூதுவர்கள் இருந்தார்கள். உலகம்முழுதும் சுற்றிப் பார்க்க வேண்டும் என்ற நோக்கத்தோடு புறப்பட்ட யாத்திரிகர்களும் இருந்தார்கள். இத்தனை பேருடனும் சித்திராங்க பூபதி முப்பது நாட்கள் நெருங்கிப் பழக நேர்ந்தது. அந்த அநுபவத்தில் இதுவரை அவன் பெற்றிராத பல புதுமைகள் இருந்தன. காஞ்சி கடிகையிலே சென்று பயிற்சி பெறுகிறானோ இல்லையோ, நிச்சயம் அந்த முப்பது நாள் கடல் யாத்திரை, அவனுக்கு முப்பது ஆண்டுப் படிப்பைவிட ஒரு பெரிய வாழ்க்கைப் பயிற்சியாக விளங்கியது.

சித்திராங்க பூபதியோடு யாத்திரை செய்த பிரயாணிகளில் இருவர் முக்கியமாகக் குறிப்பிட வேண்டியவர்கள். ஒருவர் இலங்கைத் தீவில் யாழ்ப்பாணம் என்ற குடியிருப்பைச் சேர்ந்தவர். கையிலே காப்பும், காதிலே பெரிய கடுக்கனும் அணிந்திருந்தார். தலையில் அரக்கு வர்ணப் பட்டுத் துணியினால் ஒரு பாகை சுற்றி யிருந்தார். அவருடைய நெற்றி அகலமாக இருந்தது. அவருடைய பேச்சு மாசுமறுவற்ற தூய தமிழாக இருந்தது. முதலில் சித்திராங்க பூபதிக்கு அந்தப் பேச்சு சற்று விநோதமாக இருந்தது. சிறிது நேரத்திற் கெல்லாம் அவனுக்கு மிகவும் பிடித்துப் போயிற்று அந்தப் பேச்சு. ஆரம்பத்தில் எழுத்தாணியினால் எழுதப்பட்ட ஓர் ஏடு தன் முன்னே நின்று பேசுவது போல இருந்த பேச்சு, காதிலே அடிக்கடி கேட்கக் கேட்க அதன் இனிமையும் பரிசுத்தமும் பூபதியைக் கவர்ந்தன. 'பேசினால் இப்படி யல்லவா பேச வேண்டும்! நம்மை யெல்லாம் போலச் சொற்களைச் சிதைப்பது எத்தனை பிசகு!' என்று மனத்தில் எண்ணிக் கொண்டான். மரக்கலத்தில் கூட இருந்தவர்கள் எல்லாரும் அவரைப் 'புலவரையா' என்று அழைத்ததைக் கேட்டு, இவனும் அவரை ஆரம்பத்தில் அப்படியே அழைத்தான். பிறகு கொஞ்சம் பழகியதும் அவருடைய தூய குணமும், சைவ ஆசாரமும், அவருடைய பேச்சிலே இருந்த பளிங்குத் தன்மையும் அவனை அவரிடம் நெருங்கி உறவாடச் செய்தன. அதன் பின்னர் அவன் அவரைப்

'புலவரையா' என்று கூப்பிடுவதற்குப் பதில், 'ஐயா' என்று மிக்க மரியாதையோடு அழைக்க ஆரம்பித்தான். அவர் அவனுக்குத் திருமுருகாற்றுப் படையிலிருந்து அடிக்கடி பல பாடல்கள் எடுத்துச் சொல்லுவார். திருமூலருடைய திருமந்திரத்திலிருந்து பல பாடல்கள் கூறுவார். இவற்றையெல்லாம் விட அடிக்கடி அவர் ஞான சம்பந்தப் பெருமானின் தேவாரப் பதிகங்களை இனிமையான பண்களிலே பக்தியோடு பாடுவார்.

"தம்பி! சென்ற நூற்றாண்டில் தமிழ் நாட்டு மண்ணிலே நடமாடிய ஒரு தெய்வக் கவிஞன் ஞானசம்பந்தப் பெருமான். 'பாலரு வாயன்' என்று பாராட்டப்படும் அந்தப் பெம்மானுடைய பதிகங்கள், தமிழ் நாட்டில் தமிழர்களுடைய பூர்வமான சமயமும், நம்பிக்கைகளும், கோட்பாடுகளும் மீண்டும் நிலை பெறுவதற்குக் காரணமாக அமைந்தன. சொல்லுக்குச் சொல் பால் ஊறும் பாடல்கள் இவை!" என்று ஒரே பேரானந்தத்தோடு சொல்லுவார். பதிகங்களைப் பாடிக் கொண்டே தாளம் தட்டிக் கூத்தாட ஆரம்பித்துவிடுவார் புலவர். அப்பொழுதெல்லாம் சித்திராங்கன் ஒரே பணிவோடும் அன்போடும் அவரையே பார்த்துக் கொண்டிருப்பான்.



"தம்பி! நீ சிறு பிள்ளை. ஏதோ காஞ்சிமா நகரத்திலே போய்ப் படிக்க வேண்டும் என்று நிர்மாணித்திருக்கிறாய். நல்லதுதான். ஆனாலும் இன்று தமிழ்நாடு பல குழப்பங்களுக்கு மத்தியிலே சுழன்று கொண்டிருக்கிறது. அப்பரும் ஞானசம்பந்தப் பெருமானும் சென்ற நூற்றாண்டிலே தோன்றியபின், ஒருவகையாகச் சமயச் சண்டைகள் அமைதி பெற்றன. ஆனால் இப்பொழுது மொழி சம்பந்தமான கிளர்ச்சி வலுத்துக் கொண்டிருக்கிறது. வடமொழியும் தென்மொழியும் ஒரு நூதனமான முறையிலே தங்களுக்குள் மோதிக் கொண்டிருக்கின்றன. அரசியல் மாறுபாட்டுக்காகத் தமிழ் மன்னர்கள் கிளர்ச்சி செய்து வருகிறார்கள். அந்தக் கிளர்ச்சியோடு மொழிக் கிளர்ச்சியும் ஒரு பக்கம் தீவிரமாகிக் கொண்டு வருகிறது. இந்தச் சூழ்நிலையிலேதான் அரச அழைப்பு வந்து நான் காஞ்சிமாநகரம் செல்கிறேன். புதிதாகப் பட்டம் சூடியிருக்கும் நந்திவர்ம பல்லவன் சிறுவனும். அவனோடு அவனுடைய தந்தை இரணியவர்மரும், படைத் தலைவர் உதய சந்திரரும் துணையாக இருந்து அரச காரியங்களை நிர்வகித்து வருகிறார்களாம். தரணிகொண்ட போசர் என்ற ஒரு பெரியார், காஞ்சிக் கடிகையிலேயே கற்றுத் தேர்ந்த ஒரு வைஷ்ணவ பண்டிதர், அரசனுக்குப் பக்கபலமாக நிற்கிறார். அவருடைய அழைப்புக்கு இணங்கித்தான் நான் காஞ்சி நகரம் செல்கிறேன். வைணவப் பெரியார்கள் இந்த நூற்றாண்டில் தமிழுக்குச் செய்திருக்கிற, செய்து வருகிற, செய்யப் போகிற தொண்டு, தமிழ் நாட்டின் சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும் என்பது உறுதி. இதெல்லாம் உனக்கு எதற்காகச் சொல்கிறேன் என்றால், நீ தமிழ் நாட்டுக்குப் புதியவன். காஞ்சிக்கடிகையிலே கற்கப் போகிற உனக்கு இன்றைய அரசியல் நிலையும், மொழி நிலையும், பண்பாட்டுச் சூழ்நிலையும் முன்னதாகவே தெரிந்திருக்க வேண்டியது மிகவும் அவசியம். எந்தச் சண்டையிலும் சேராமல், நீ நன்றாகப் படித்துப் பெரும் புலவனாக விளங்க வேண்டும் என்பதே என்னுடைய வாழ்த்து. எப்பொழுதாவது நீ இடையூறு ஒன்றில் சிக்கிக் கொண்டால், ஞானசம்பந்தப் பெருமானுடைய இந்தப் பதிகத்தைச் சொல்லு. இடையூறுகள் எல்லாம் நீங்கும்" என்று சொல்லி அந்தப் புலவர், திருஞானசம்பந்தரின் 'வேயுறு தோளி பங்கன்' என்ற பதிகத்தைப் பாடினார். அதை மனனம்

செய்து கொள்ளும்படி பூபதிக்கு ஒரு சுவடியிலே எழுதிக் கொடுத்தார்.

வலம்புரித்தீவை விட்டுப் புறப்பட்ட பிறகு அந்தப் பிரயாணத்தில், சித்திராங்க பூபதி ஏட்டுக் கல்வி என்று முதன் முதலாகப் படித்தது அந்தப் பதிகந்தான். ஒரு பூர்வமான இனிய பண்ணிலே அந்தப் பதிகத்தைப் புலவர் பாடினார். பூபதியும் அவரைப் போலவே அந்தப் பாடல்களைப் பாடக் கற்றுக் கொண்டான். கடலில் எப்பொழுதாவது அலைகள் அதிகமாகிப் புயல் வீசத் தொடங்கி விட்டால், புலவர் கீழ்க்கண்ட பாடலை இசையோடு பாடுவார். பூபதியும் சேர்ந்து பாடுவான்.





"பல பல வேடமாகும் பரன், நாரி பாகன்,
பசு ஏறும் எங்கள் பரமன்,
சலமக ளோடு எருக்கும் முடிமேல்அணிந்து,என்
உளமே புகுந்த அதனால்,
மலர்மிசை யோனும், மாலும், மறையோடு
தேவர்,
வருகால மான பலவும்,
அலைகடல், மேரு, நல்ல; அவை நல்ல நல்ல,
அடியா ரவர்க்கு மிகவே!"

புலவரையாவைத் தவிர, மரக்கலத்தில் பூபதியின் அன்பைக் கவர்ந்த மற்றொரு பிரயாணி, கொடும்பை என்றும் கொடும்பாளூர் என்றும் அழைக்கப்பட்ட வேளிர் நாட்டைச் சேர்ந்தவன். தமிழ் நாட்டில் பல்லவ சாம்ராஜ்யத்துக்கும், பாண்டியர் மண்டலத்துக்கும் நடுவே யிருந்த குறுநிலம் கோனாடு. அதன் தலைநகரம்



கொடும்பாளூர். அங்கே அரசாண்டு கொண்டிருந்த வேளிர் என்ற குறுநில மன்னர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவன் அவன். அவனும் பூபதியைப்போல ஒரு வாலிபன்தான். கடல் கடந்து சென்று, பல தேசங்களையும் சுற்றிப் பார்த்து விட்டுத் தன் ஊருக்குத் திரும்பிக் கொண்டிருந்த பிரயாணி அவன். அவனுடைய பேச்சும் பூபதிக்குப் பிடித்திருந்தது. அயல்நாடுகளில் தான் கண்ட காட்சிகள், அங்கேயுள்ள மக்களின் பழக்க வழக்கங்கள், அவர்களுடைய அரசியல் முறை, அவர்களின் ஆசாரம், முதலிய பல விஷயங்களைப் பற்றியும், சுவையோடு பேசினான் அந்த வேளிர் வாலிபன். அவனுடைய பெயர் ஆதிரையன்! பூபதியைத் தன்னுடைய ஊருக்கு நிச்சயம் வரவேண்டும் என்றும், தன்னோடு விடுமுறை நாட்களிலெல்லாம் தன் ஊரை வந்து பார்ப்பதோடு, தன்னுடைய முன்னோர்கள் செய்துள்ள பல கலை விந்தைகளையும் சுற்றிப் பார்த்துத் தெரிந்து கொள்ளவேண்டும் என்றும், கேட்டுக் கொண்டான் அவன். அவனிடத்திலுங் கூடச் சித்திராங்கன் தன்னைப் பற்றிய உண்மையான விவரங்களை முழுதும் வெளியிடவில்லை!

சித்திராங்க பூபதி தான் யார் என்பதைக் கடைசி வரை இரகசியமாகவே வைத்துக் கொண்டான். மந்திரநாயகரும், அவருடைய யோசனையின் பேரில் மகாராணியும், கண்டிப்பாகச் சொல்லியிருந்த விஷயம் இது. எனவே அந்த இரகசியத்தைக் கடமையுணர்ச்சியோடு காப்பாற்றினான் பூபதி. ஆனாலும் 'ஐயா' விடமும், ஆதிரையனிடமும் அந்த இரகசியத்தை ஒளிவு மறைவாக வைத்திருப்பதில், அவன் மனசாட்சி மிகவும் கஷ்டப் பட்டது. என்றாலும் மகாராணியின் கட்டளையை அவன் மீறவில்லை!

கட்டளையை மீறாத முறையிலேயே பூபதி மாமல்லபுரம் கடற்கரைக்கு வந்து சேர்ந்தான். மரக்கலம் கரையை அடைந்த போது மாலை நேரம். சூரியன் அஸ்தமித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு முன்பாகவே சந்திரன் உதித்து ஒளியோடு ஆயத்தமாகி நின்றான். அன்று பௌர்ணமி!

சித்திராங்க பூபதி தன்னுடைய சக யாத்திரிகர்களான பெரியவரிடமும் ஆதிரையினிடமும் சொல்லிக்கொண்டு, கடல்கரையைத் தாண்டிப் பட்டினத்துக்குள்ளே அடியெடுத்து வைத்த போது, சந்திரன் பூரணமாக வானத்திலே எழுந்து, செங்கோல் நடத்திக் கொண்டு நின்றான். அந்தப் பரிபூரண நிலவில் பட்டினத்தின் வாசலிலே நின்று பார்த்தால், மாமல்லபுரம் கடற்கரை ஒரு மாய புரியாகக் காட்சி தந்தது. மகேந்திர வர்மனும், நரசிம்ம பல்லவனும், அவர்களுக்குப் பின் தோன்றிய மற்ற அரசர்களும், ராஜசிம்மனும், அளவற்ற பக்தியோடும், கலைக் காதலோடும் நிர்மாணித்திருந்த மாமல்லச் சிற்பங்கள், நிலவிலே

மன்மதக் காட்சியாகவே உள்ளத்தை மயக்கிக் கொண்டு நின்றன.

'நாளைக் காலையில் இங்கே வந்து சூரிய வெளிச்சத்தில் இவற்றையெல்லாம் நன்றாகப் பார்க்க வேண்டும். அதற்கு முன்னால், முதலாவது காரியமாக, இப்பொழுதே அன்னையின் மற்றொரு கட்டளையை நிறைவேற்றி விடவேண்டும்' என்று தீர்மானித்தான் சித்திராங்கன்.

ஆமாம். தமிழ்நாட்டு மண்ணிலே அடியெடுத்து வைத்து விட்டான் அல்லவா? இனி அன்னை கொடுத்தனுப்பிய முக்கோணப் பேடகத்தைத் திறந்து பார்க்க வேண்டியது தானே. ஆனால் இரவு நேரம் ஆயிற்றே. எங்கே போய் உட்கார்ந்து இந்தக் காரியத்தைச் செய்வது? அதைப் பற்றி இன்னும் யோசிக்கவில்லையே!

இவ்வாறு நினைத்தவனாகப் பட்டினத்தின் முகப்பிலே நுழைந்து, வலது பக்கமாகத் திரும்பிப் பார்த்தான். பெரிய அரச மாளிகையைப் போலக் காட்சி தந்த யாத்திரிகர் விடுதி ஒன்று, கம்பீரமாக அவன் முன்னே நின்றது.

தன்னுடைய ராஜ்யமான வலம்புரித்தீவிலும், சென்ற நூற்றாண்டிலே மக்கள் ஏராளமாக வந்து தங்குவதற்கு என்று அமைக்கப்பட்டிருந்த இதுபோன்ற விடுதி ஒன்று உண்டு. அது இன்று பாழடைந்து கிடக்கிறது. என்றாலும், இந்த மாமல்லபுரத்து விடுதியின் கட்டட அமைப்பைப் பார்த்தால், அந்த வலம்புரி விடுதியைப் போலவே இருந்தது. ஆனால் அதைவிடப் பல மடங்கு விசாலமும் உயரமும் கொண்டு பெரும்பேர் விடுதியாக விளங்கியது இது!

சித்திராங்க பூபதி விடுதியைநோக்கி முன் நடந்தான். பின்னால் ஒரு சிறு பார வண்டியிலே அவனுடைய உடைமைப் பொருள்கள் வந்தன. வண்டி சிறு வண்டிதான். தள்ளு வண்டிதான். ஆனாலும் அதைச் செய்த மரத் தச்சன் அந்த வண்டியின் அமைப்பிலே தனது கை வலிமையோடு, தனது கைத் திறத்தையும் சேர்த்திருந்தான். தனது கையாற்றலோடு தனது இதயத்தையும் கொண்டு அதிலே பதித்திருந்தான் அந்தக் கலைஞன்.

சித்திராங்கன் அந்த வண்டியில் தோன்றிய கை வண்ணத்தை வியந்தவாறு நடந்தான். ஒரு சிறு தள்ளு வண்டியிலேகூடக் கலைமணம் கமழ்கிற நாடாக அல்லவா இருக்கிறது இது! இந்தத் தமிழ் நாட்டில் யாத்திரிகர்களுடைய வசதிகளைத் தான் எத்தனை அன்போடு கவனிக்கிறார்கள். மூடி விழிக்கும் நேரத்தில் என்னுடைய உடைமைப் பொருள்களை இந்த வண்டியிலே ஏற்றி என்னோடு அனுப்பி விட்டார்களே. நம்முடைய வலம்புரித்தீவிலும் ஒரு காலத்தில் இத்தனை நேர்த்தியாக நிர்வாகம் நடந்திருக்குமல்லவா! ஏதோ தமிழ் நாட்டு வானத்தில் மேகங்கள் சூழ்ந்து கொண்டிருக்கிற காலம் இது என்று சொன்னார்களே! இப்படிப்பட்ட காலத்திலுங் கூட, அயல் நாட்டு யாத்திரிகர்களின் சௌகரியத்தை இத்தனை தூரம் பாராட்டுகிறார்களா, இந்த நாட்டில்! நமது தீவிலும் நிச்சயம் இப்படித்



தான் இருந்திருப்பார்கள், சென்ற நூறு ஆண்டுகளுக்கு முன்பு வரை! இப்பொழுது அதெல்லாம் எங்கே போயிற்று? பேரியாறோடு மறைந்து போய் விட்டதா! நம்பவே முடியவில்லையே!"

இப்படியெல்லாம் சிந்தனை செய்து கொண்டே, சித்திராங்க பூபதி அந்த யாத்திரிகர் விடுதிக்குள்ளே நுழைந்தான்.

பூபதிக்கு அதிகமான தொல்லைகளே இல்லை. கடல் கடந்த தீவிலிருந்து வரும் ஒரு யாத்திரிகன் என்பதற்குச் சான்றாக, மரக்கலத்திலேயே ஒரு அடையாளச் சுருள் கொடுத்திருந்தார்கள். விடுதியிலே அவனுக்கு ஒரு

'தங்கும் இடம்' கிடைப்பதற்கு. அந்த அடையாளச் சுருளே போதுமானதாக இருந்தது. என்றாலும் மந்திர நாயகம் அவனிடம் சொல்லியனுப்பி யிருந்த முன் எச்சரிக்கையையும், கண்டிப்பையும் அவன் மறந்து விடவில்லை. 'ஒற்றன் என்று சந்தேகப்படுகிற ஒரு மனிதனையும் கூட, வெளிப்படையாக ஆசாரக் குறைவாக நடத்த மாட்டார்கள். ஆகையினால் உன்னை அன்போடு உபசரிக்கிறவர்களைப் பற்றியுமே நீ விழிப்பாகத்தான் இருக்க வேண்டும். கவனத்தோடுதான் நடந்து கொள்ள வேண்டும்' என்று மந்திர நாயகம் சொல்லியிருந்த வாசகம், பூபதிக்கு நன்றாக நினைவு இருந்தது.

மாமல்லபுரத்திலே நின்ற யாத்திரையாளர்களின் விடுதி மிகப் பெரிய விடுதி. மூன்றடுக்கு மேடையோடு கூடிய விடுதி. அதில் சித்திராங்கனுக்குக் கொடுக்கப் பட்டிருந்த இடம் மேடையில் இல்லை. கீழேயே இருந்தது.

விடுதிதான். போவோர் வருவோர் ஏதோ சில நாட்கள் அல்லது சில நாழிகைகள் தங்குவதற்காக அமைக்கப்பட்ட இடந்தான். ஆனாலும் தங்குபவர்களுக்காக எத்தனை வசதிகளைச் செய்திருந்தார்கள்! அவற்றையெல்லாம் சுற்றிப் பார்த்து அநுபவிக்கவே ஒருநாள் முழுதும் வேண்டும்போலும்!

சித்திராங்கன் தன்னுடைய அறையில்—அறையா அது, ஒரு பெரிய மாளிகையின் விசாலமான சூழல் அது. அந்தச் சூழலிலே—சென்று அமர்வதற்குள், பொங்கு புனலிலே நீராடுவதற்காக அவனை அழைத்துப் போக ஒரு பணியாளன் வந்தான்.

முப்பது நாள் பிரயாணத்தின் களைப்பு எப்படி யிருக்கும்! எத்தனை மன நிம்மதியான பிரயாணம் என்றாலும், உடலின் களைப்பை நீராடிக் கழுவிவிட வேண்டியதுதானே. சித்திராங்கன் எழுந்தான். உடனே திடீரென்று அவனுக்கு அன்னையின் கட்டளை நினைவு வந்தது. 'இந்த மண்ணிலே இப்பொழுதுதான் அடியெடுத்து வைத்திருக்கிறோம். அதற்குள் கட்டளையை மறந்து விட்டோமே' என்று மனத்துக்குள் எண்ணினவனாகப் பணியாளனிடம் 'இதோ வருகிறேன்' என்று சொல்லியனுப்பி விட்டு, அந்த விசாலமான பெரிய அறையின் கதவுகளை மூடினான் சித்திராங்கன். மூடி விட்டுச் சாளரத்தின் கதவுகளைத் திறந்தான். கண்ணுக்கு எட்டிய தொலை மட்டும் கடல், நீலக்கடல், அலைவீசிப் பொங்குகிற அழகான கருநீலக் கடல், காட்சி தந்தது. அதை அணைத்துக் கொண்டு நீலவானம் நின்றது. அந்த நீல வானத்தினுடைய ஒளி பொருந்திய முகத்தைப் போல, கடல் அலைகளையே பார்த்துப் பார்த்துக் கொஞ்சிக் கொண்டிருந்தது பூரண சந்திரன்.

'விடுதியின் கீழ் தளத்தில்தான் இருக்கிறோம். ஆனாலும் கடல் மட்டத்திலிருந்து இதை இத்தனை உயரத்தில் கட்டி யிருக்கிறார்களே!' என்று அதிசயித்தவனாகச் சித்திராங்க பூபதி தன்னுடைய உடைமைப் பொருள்களை வைத்திருந்த இடத்துக்கு வந்து, அவற்றிலே யிருந்த முக்கோணப் பேடகத்தைக் கையிலே எடுத்தான். அறையினுள் சாளரத்திலிருந்து சற்றுத் தள்ளி, பால் நிலவுபோல எரிந்து கொண்டிருந்தது பெரிய விளக்கு. அந்த விளக்கின் அருகிலே வந்து நின்றான். ஆவலோடு அந்தப் பெட்டியைத் திறந்தான் பூபதி.

அந்தச் சமயத்தில் அறைக்கு வெளியே ஏதோ ஓசை கேட்டது. 'டக் டக்' என்று தரையிலே கம்பைத் தட்டுவது போன்று வந்தது அந்த ஓசை. அதைத் தொடர்ந்து மரக் கட்டைகளின் 'கட் கட்' என்ற ஓசை. அதைத் தொடர்ந்து பல மனிதர்கள் ஏககாலத்தில் பரபரப்பாக நடக்கும் காலடி கேட்டது. விடுதியினுள்ளே யாரோ எதிர்பாராத விதமாகப் பிரவேசித்திருக்க வேண்டும். பிரவேசித்தவர் மிக மிக முக்கியமான மனிதராக இருக்க வேண்டும். சந்தேகமில்லை. ஒருவேளை யாராவது ஒற்றர்களின் தலைவனாக இருக்குமோ! இராது. அப்படியானால்? வேறு யார் முன்னறிவிப்பு இல்லாமல் இப்படி இங்கே திடீரென்று வருவார்கள்? அந்த மனிதருடைய வரவினால் ஏன் இத்தனை பரபரப்பு உண்டாக வேண்டும்? தான் நின்ற இடத்தில் நின்றுகொண்டே, கையில் முக்கோணப் பெட்டியோடு, அங்கிங்கு நகராமல் சாளரத்தின் திறப்பு வழியாக எம்பிக் கொண்டு பார்த்தான் சித்திராங்கன். நாலைந்து பணியாளர்கள் கையும் காலும் பதறியவர்களாய் ஒரே பரபரப்போடு அறைக்கு வெளியே இருந்த தாழ்வாரத்தில் ஓடிக் கொண்டிருந்தார்கள். (தொடரும்)

எப்பொழுதும் வெற்றி!



புஷ்டிதரும் சத்துக்களை நிறைந்த பார்லேஸ் க்ளூகோ பிஸ்கட்டுகளை உண்டு வளர்ந்த குழந்தைகள், போட்டி பந்தயங்களிலும், களியாட்டங்களிலும் வெற்றி பெற அத்யாவசியமான கட்டுமஸ்தான தேக நிலையை பெற்றிருக்கின்றனர்.

ஆம் அந்த ரகசியம் இதுதான்.

பார்லேயின் க்ளூகோ பிஸ்கட்டுகள்

புஷ்டிதரும்
விடமின்கள்
சேர்க்கையுடையவை



PG.56-5.79

நூறு கோடி வரதட்சிணை! சாவி

24, ஜனவரி, 1956

முதல் கட்டம்

அன்புள்ள ஸ்ரீமதி பிகாருக்கு, வங்காளம் எழுதிக் கொள்வது:

உன்னை நான் மனப்பூர்வமாக விரும்புகிறேன். நான் மணம் செய்து கொள்வதாயிருந்தால் உன்னையேதான் செய்து கொள்வேன், இது நிச்சயம். நமது டில்லிப் பெற்றோர்கள் இதை அவசியம் வரவேற்பார்கள். அமிர்தசரஸிலும் புதுடில்லியிலும் இதைப் பற்றி நமது பெற்றோர்கள் வெளிப்படையாகச் சொல்லியும் வற்புறுத்தியும் இருக்கிறார்கள். நீ என்ன நினைக்கிறாய்? உனக்கு இந்த விவாகத்துக்குச் சம்மதம் என்று சொன்னால் உடனே நம் அபிப்பிராயத்தைப் பெற்றோர்களுக்குப் பகிரங்கமாகத் தெரியப்படுத்தி மேற்கொண்டு ஆகவேண்டிய காரியத்தைக் கவனிக்கச் சொல்லலாம். கலியாண சீஸன் சீக்கிரமே ஆரம்பமாகப் போகிறது. உன் அன்பான பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

இப்படிக்கு,
உன் நினைவாகவே இருக்கும்,
வங்காளம்.

* * *

27, ஜனவரி, 1956

அன்புக்குரியவரே,

தங்கள் கடிதம் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி. தங்களுக்கு என்னிடம் எத்தனை அன்பும் பிரியமும் உண்டோ, அவ்வளவு எனக்கும் தங்களிடம் உண்டு என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை. நாம் இருவரும் காதலித்துக் கலியாணம் செய்து கொண்டு சந்தோஷமாகச் சேர்ந்து வாழ்வோம். நம்மைப் பார்த்து இன்னும் இந்நாட்டிலுள்ள சிலரும் ஒருவரையொருவர் நேசித்து மணம் புரிந்து கொள்ளட்டும். அதனால் நம் தேசத்துக்குப் பல நன்மைகள் உண்டாகும். நாம் அவர்களுக்கெல்லாம் உதாரணமாக நடந்து காண்பிப்போம். நாளைக்கே நமது காதல் மணத்தைப் பற்றி டில்லிப் பெற்றோர்களுக்குப் பகிரங்கமாகத் தெரியப்படுத்தி விடுவோம்.

இப்படிக்கு,
தங்கள் பிரியமுள்ள,
பிகார்.



29, ஜனவரி, 1956

புது டில்லிப் பெற்றோர்களுக்கு,

நாங்கள் இருவரும் ஒருவரை யொருவர் காதலித்துக் கலியாணம் செய்து கொள்ள முடிவு செய்திருக்கிறோம். உங்களுடைய ஆசிர்வாதத்துடன் எங்கள் திருமணம் சீக்கிரமே நடைபெறுவதற்குண்டான ஏற்பாட்டைச் செய்வீர்கள் என்று நம்புகிறோம்.

இப்படிக்கு,
வங்காளம் — பிகார்.
(காதலன் - காதலி)

* * *

இரண்டாவது கட்டம்

ஒரு பெரியவர்:—தம்பி இப்படி மேற்குப் பக்கம் யாரைப் பார்த்துக் கொண்டு நிற்கிறாய்? உன் மனத்தில் உள்ளதைச் சொல். உன்னைப் பார்த்தால் புத்திசாலி போல் தோன்றுகிறதே?


சென்னைத் தம்பி:— (தயக்கத்துடன்) திருமதி கொச்சியைத்தான் பார்க்கிறேன்.

பெரியவர்:—ஓகோ! அப்படியா? உன் மனதுக்குப் பிடித்தமாயிருந்தால் அவளையே நீ மணமும் செய்து கொள்ளலாம். கேரளப் பெண் ஆயிற்றே, கலப்பு மணம் செய்து கொள்ளலாமா என்று யோசிக்கிறாயா? அதில் தவறு ஒன்றும் இல்லை. உங்கள் இருவர் மனமும் ஒருமித்து ஒன்றுபட்டு நீங்கள் மணம் செய்து கொண்டால் அதனால் எத்தனையோ நன்மைகள் உண்டு.

சென்னைத் தம்பி:—நாங்கள் இருவரும் மணம் செய்து கொண்டு சேர்ந்து வாழ்வது உங்களுக்குப் பிடித்திருக்கிறது. எனக்கும் ஆசையாகத்தான் இருக்கிறது. ஆனால் எங்கள் மூத்த சகோதரர் இதற்குத் தடையாகக் குறுக்கே நிற்கிறாரே.

பெரியவர்:— அவரா? அவர்தான் ஒரு பிரம்மச்சாரியாயிற்றே! அவருக்குக் கலியாணத்தைப் பற்றி என்ன தெரியும்? அவர் தானும் கலியாணம் செய்து கொள்ள மாட்டார். பிறரையும் கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதிக்க மாட்டார். குடும்பத்தில் அடிபட்டவர்களுக்குத்தான் சேர்ந்து வாழ்வதிலுள்ள நன்மை தீமைகள் நன்கு புலப்படும்.

மற்றொரு சென்னைத் தம்பி:—எனக்குக் கூட அந்தக் கேரளப் பெண்ணை மணந்து



சென்ற ஏப்ரல் மாதம் 25-ந் தேதி ஓர் இனிய வைபவம் நிகழ்ந்தது. சென்னையிலிருந்து இருபத்தைந்து வயது நிரம்பப் பெற்ற இரண்டு மாணவர்கள் — திரு பார்போஸாவும், திரு நரோனாவும்—மேல் படிப்புக்காக இங்லேந்து சென்றார்கள். அவர்கள் சென்னையில் உற்பத்தி செய்யப்பட்ட ராயல் என்பீல்ட் மோட்டார் சைக்கிளிலேயே, இந்தியா-பாகிஸ்தான், இரான், இஸ்ரேல், துருக்கி, கிரீஸ், இதாலி, பிரான்ஸ் முதலிய நாடுகள் மார்க்கமாகச் சென்றார்கள். அவர்களுக்கு மதராஸ் மோட்டார்ஸ் லிமிடெட்டின் டைரக்டர்கள் சென்னை மேயர் தலைமையில் விருந்துபசாரம் நடத்தி வழியனுப்பி வைத்தார்கள். இவ்வைபவத்தின்போது மதராஸ் மோட்டார்ஸ் லிமிடெட்டின் டைரக்டரும், என்பீல்டு இந்தியா லிமிடெட்டின் டைரக்டர்களின் தலைவருமான ஸ்ரீ கே. ஆர். சுந்தரமய்யர் மாணவர்களுக்கு ஆசி கூறினார்.

மதராஸ் மோட்டார்ஸின் மானேஜிங் டைரக்டரான ஸ்ரீ எஸ். ஆர். சுப்பிரமணியம் மாணவர்களை விருந்தினர்களுக்கு மிக அழகான முறையில் அறிமுகப்படுத்தினார். மாணவர்கள் நன்றி செலுத்திய பிறகு, மற்றொரு டைரக்டரான திரு கே. சகவரன் விருந்துக்கு வந்திருந்தவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார். மேலே படத்தில் இங்லேந்து செல்லும் மாணவர்களையும், மேயரையும், ஸ்ரீ எஸ். ஆர். சுப்பிரமணியம் அவர்களையும் காணலாம்.

கொள்ள விருப்பம்தான். அவளை மணம் செய்து கொள்வதால், அநேக அனுகூலங்கள் உண்டு.

பெரியவர் :—அப்படியா? அது என்ன அனுகூலம் தம்பி!

சென்னைத் தம்பி :— முதலாவது நம் வீட்டுத் தண்ணீர்ப் பஞ்சம் தீரும்.

பெரியவர் :—இரண்டாவது?......

சென்னைத் தம்பி :— இரண்டாவது டில்லிப் பெற்றோர்கள் கேரளப் பெண்ணை மணம் செய்து கொண்டு வாழ்வதாயிருந்தால் நூறு கோடி ரூபாய் வரதட்சிணை தருவதாகச் சொல்கிறார்கள். இந்த இரண்டையும் கொண்டு என் குடும்பத்தை எவ்வளவோ வழிகளில் உயர்த்திக் கொள்ளலாம்.

பெரியவர் :—உனக்குச் சரியென்று தோன்றுவதைத் தைரியமாகச் சொல்லிக் கொண்டே இரு, தம்பி! ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாள் பலன் கிடைத்தே தீரும்.

மூன்றாவது கட்டம்

2, மே, 1956

ஸ்ரீமதி பிகாருக்கு வங்காளம் எழுதிக் கொள்வது:—

உனக்கு நான் ஏற்கனவே கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றச் சிறிது கால தாமதம் ஆகலாம் என்று தோன்றுகிறது. காதல் விவாகத்துக்கே எப்போதும் இடையூறுகள் அதிகம் போலும். இங்கே வங்காளத்தில் காதல் எதிர்ப்புச் சங்கம் என்பதாக ஒரு புதிய சங்கம் முளைத்திருக்கிறது. அதன் தலைவருக்குக் கொஞ்சம் செல்வாக்கும் ஏற்பட்டிருக்கிறது. பொது மக்களில் சிலர் மேற்படி சங்கத்தின் தலைவருக்கு ஆதரவு அளிப்பதாகவும் தெரிகிறது. இங்குள்ள சூழ்நிலை அவ்வளவாகச் சரியாயில்லை. ஆகவே நமது விவாகத்தைச் சிறிது காலத்துக்குத் தள்ளிப் போட்டு வைக்கலாம் என்று நினைக்கிறேன். நீயும் இதை ஆமோதிப்பாய் என்று நம்புகிறேன்.

இப்படிக்கு,
வங்காளம்.

* * *

நாலாவது கட்டம்

டில்லிப் பெற்றோர்கள் :—அட, அசடுகளே! கொஞ்சங்கூடத் தைரியமு இல்லாத பிள்ளைகள்! இந்தக் கலியாண சீஸனிலேயே முகூர்த்தத்தை நடத்தி விடலாம் என்று பார்த்தால் இந்தப் பிள்ளைகளுக்குக் கொஞ்சம்கூடத் தைரியத்தைக் காணுமே. உம், அவ்வளவுதான். இந்த வங்காளப் பிள்ளைக்குத்தான் தைரியமில்லை என்றால் சென்னை அசட்டுக்கும் துணிவில்லையே! இத்தனைக்கும் நூறு கோடி ரூபாய் வரதட்சிணை தருவதாகக்கூடச் சொன்னேன். அதைக்கொண்டே குடும்பத்தைக் கவலையில்லாமல் நடத்தி வரலாமே! வரதட்சிணைக்கு மட்டும் ஆசை இருந்தால் போதுமோ! தைரியமாக முன்வர வேண்டாமோ?

திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீ பெரியநாயகி சமேத ஸ்ரீ பாடலேசர்

துன்முகி வருஷ மகோற்சவ பத்திரிகை

நிகழ்ச்சி விவரம்

தேதி	திருவிழா	காலை	மாலை - இரவு
14-5-56	விநாயகர் திருவிழா		ஸ்ரீ விநாயகர் பூஜை
15-5-56	முதல் திருவிழா	**துவஜாரோஹணம்**	**இந்திர விமானம்**
16-5-56	இரண்டாம் திருவிழா	சூரிய பிரபை	**சிம்ம வாகனம்**
17-5-56	மூன்றாம் திருவிழா	பல்லக்கு	**பூத வாகனம்**
18-5-56	நான்காம் திருவிழா	காமதேனு கற்பக விருட்சம்	**நாக வாகனம்**
19-5-56	ஐந்தாம் திருவிழா	அதிகாரநந்தி **கோபுர தரிசனம்**	தெருவடைச்சான்
20-5-56	ஆறாம் திருவிழா	யானை வாகனம் நால்வர் புறப்பாடு	**வெள்ளி ரதம், நூதன வெள்ளி இந்திர விமானம்**
21-5-56	ஏழாம் திருவிழா	கைலாய வாகனம் **கோபுர தரிசனம்**	**திருக்கல்யாணம் வெள்ளிரிஷப வாகனத்தில், பரிவேட்டை**
22-5-56	எட்டாம் திருவிழா	குதிரை வாகனம்	**ஸ்ரீ பிக்ஷாடனர் புறப்பாடு தங்கக் கைலாய வாகனம்**
23-5-56	ஒன்பதாம் திருவிழா	**ரதா ரோஹணம்**	
24-5-56	பத்தாம் திருவிழா	**நடராஜர் தரிசனம்**	**ஐந்து புஷ்பப் பல்லக்கு**
25-5-56	தெப்ப உற்சவம்		**தெப்பக் காட்சி**
26-5-56	**திருமுலைப்பால் உற்சவம்**	**ரிஷபாருடக் காட்சி**	**ஸ்ரீ சம்பந்தர் திருக்கல்யாணம்**
27-5-56	**சண்டேஸ்வரர் உற்சவம்**		**ஸ்ரீ சண்டேஸ்வரர் உற்சவம்**

பக்தர்களனைவரும் விஜயம் செய்து கடவுளருளுக்குப் பாத்திரமாகும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்


E. S. ஆதித்யராமன், B.A.
நிர்வாக அதிகாரி
ஸ்ரீ பாடலீஸ்வரர் தேவஸ்தானம்
14-4-56

P. G. ரங்கநாதன்,
மிராஸ்தார், பாதூர்
T. P. முத்துசாமி
முனிசிபல் கவுன்சிலர்

தர்மகர்த்தாக்கள்

V. K. S. ஷண்முகசுந்தர நாடார்
மணிமேகலை மில்ஸ், கடலூர் O.T.
Chairman, Board of Trustees





ஆமாம்! காலம் மாறித்தான் போய்விட்டது.

சூட்டும் பூட்டுமாகப் பெரிய துரை மகன் மாதிரி அலுங்காமல் நடித்து, அலுக்காமல் காதலித்து, வெறுக்காமல் காதலியை மணந்து கொண்டு பழக்கப்பட்டுவிட்ட நடிகர்கள் வெற்றுடம்புடன் ஏர் பூட்டி உழுது, சேற்றில் இறங்கி நாற்று நட்டு உண்மையாகவே இந்தப் படத்தில் பாடுபட்டு நடித்திருக்கின்றனர்.

கத்திச் சண்டைகளிலிருந்தும், காதல் பிணைப்பிலிருந்தும், மாளிகை வாழ்விலிருந்தும் நம் திரைப்படம் சற்று விடுதலை பெற்றுத் திசை மாறியிருப்பதே காலம் மாறிப் போய்விட்டது என்பதற்கு நல்ல அடையாளம்தான்.

ஏற்கனவே தெலுங்கில் வெளியான ''ரோஜுலு மாராயி'' என்ற படத்தின் தமிழாக்கம்தான் ''காலம் மாறிப் போச்சு'' என்ற படம். திரைக்கதை கிராமச் சூழ்நிலையில் பிறந்திருக்கிறது. ஏழை விவசாயிகளைப் பணக்கார மிராசுதார் பல விதத்திலும் கொடுமைப் படுத்துகிறார். அவர்கள் நிலங்களைத் தம் உடைமையாக்கிக் கொண்டு அவர்களை ஒருவிதத்திலும் ஓடவிடாமல் ஆட்டி வைக்கிறார். அந்தக்



கொடுமைகளின் முழுப் பலனையும் ஏழைக் குடியானவன் வீராசாமி அனுபவிக்கிறான். அவன் கஷ்ட வாழ்க்கைக்கு உறுதுணையாகப் பெண் காவேரி நிற்கிறாள். கிராமச் சண்டை சச்சரவுகளையெல்லாம் தைரியமாகச் சமாளிக்க அவன் மகன் வேலு இருக்கிறான். வேலுவைக் காதலிக்க ராதா இருக்கிறாள். இயற்கைச் சூழ்நிலையில் பிறந்து தழைத்து வந்த காதலுக்குக் குறுக்கே நிற்க அண்ணாசாமி வந்து தொலைகிறான். மிராசுதாரின் அக்கிரமங்களுக்கு ஒத்து ஊதக் கிராமக் கர்ணம் சதா அவருடனேயே இருக்கிறான். காதலுக்கு ஏங்குகிறாள் காவேரி. காவேரியின் காதலை ஏற்கச் சுந்தரம் தயாராயிருக்கிறான்.

ஏழைக் குடியானவனாக நடிக்கும் எஸ். வி. சுப்பையா சிறந்த நடிகர் என்பது இந்தப் படத்தில் ருசுவாகிறது. மிராசுதாரிடம் குழைந்து குழைந்து பழகும் போது, கிராமத்துப் பெரிய தனக்காரர்களின் கொடூரமான மனப் போக்கு நன்கு புலனாகிறது. பெற்ற மகனோடு சண்டையிட்டுத் துரத்தும் போதும், மகள் காவேரியின் கல்யாணத்துக்காகக் கவலைப்பட்டு ஏங்கும் போதும் அவர் உணர்ச்சி வசமாகி நடிக்கிறார். பாத்திரத்துக்குத் தத்ரூபமான முறையில் அவருடைய நடிப்பும் தோற்றமும் சிறப்பாக விளங்குகின்றன. கோபத்திலும் சரி, சந்தோஷத்திலும் சரி, துக்கத்திலும் சரி அவர் முக பாவம் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு மாறிப் படத்துக்கு உயிர் ஊட்டுகிறது.

இந்தப் படத்தில் ஜெமினி கணேசனுக்கு, காதலிக்கவும், குடும்பத்தை வெறுத்து ஓடவும், ஏருழவும், சண்டை பிடிக்கவும் நல்ல வாய்ப்புகள் கிட்டியிருக்கின்றன. கிட்டிய வாய்ப்புகளை அசட்டை செய்து விடாமலும், சட்டையில்லாமலும் நடித்து அவர் நல்ல பெயர் வாங்கி விடுகிறார்—படத்தில் மாத்திரம் அல்ல; உண்மையிலுந்தான்!

நம் திரைப்பட நடிகைகளுக்குள் அஞ்சலி தேவிக்கு என்றும் ஒரு தனி இடம் உண்டு. எந்தப் பாத்திரமாயிருந்தாலும், அநாயாசமாக, இயல்பாக நடித்துத் தம்மைப் பொறுத்தவரையில் நல்ல பெயர் சம்பாதித்துக் கொள்ளும் திறமை இருக்கிறது அவரிடம். இந்தப் படத்திலும் அவர் நடிப்பு, கொடிப்பு, பேச்சு, மின்வெட்டுப் பார்வை ஆகிய எதுவும் சோடை போய் விடவில்லை.

மிராசுதாராக நடிக்கும் பாலையாவின் காலம்'மாறிப் போச்சு! வழக்கம் போல் பிறர் குடியைக் கெடுக்கும் பாகம்தான் அவர் ஏற்று நடிக்கிறார். ஆனால் காதலிக்கவும், காதலுக்காகச் சண்டை போடவும் இந்தப் படத்தில் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை அவருக்கு. நல்ல வேளையாக அதுவே அவர் நடிப்புக்கு நல்ல மாறுதலைத் தருகின்றது.

'மேக்கப்' மிகவும் நன்றாக அமைந்து அவர் தோற்றத்தை அடியோடு மாற்றி விட்டது.

கிராமக் கர்ணமாக நடிக்கும் தங்கவேலு திரைக் கதையின் இன்றியமையாத அம்சமாக விளங்குவதோடு, திரைப் படத்தின் ஹாஸ்ய பாகத்துக்கும் இன்றியமையாதவராக விளங்குகிறார். அவரது தோற்றம், நடிப்பு, பேச்சு எல்லாம் பிரமாதமாயிருக்கின்றன.

பணக்காரன் பட்டுடை உடுத்த, பாட்டாளி மகன் பட்டினி கிடக்கப் பார்த்துக் கொண்டிருக்கும் சமுதாயம் பறந்து போய் விட்டது என்பதைக் கூறுவதே சாரதியின் சித்திரமான இப்படத்தின் லட்சியம்.

ஆனால் அந்த லட்சியத்தைக் கூற வந்த படத் தயாரிப்பாளர்கள் படம் பார்க்க வரும் மக்களையும் மனதில் நினைத்திருக்க வேண்டும். நினைத்திருந்தால், சுமார் பத்தொன்பதாயிரம் அடிகள் வரையில் இந்தப் படத்தை நீட்டியிருக்க மாட்டார்கள். இந்தப் படத்துக்கு இடைவேளையே கிடையாதோ! ஒரு வேளை படத்தின் முடிவிலேயே 'இடைவேளை'யையும் சேர்த்து விட்டார்களோ என்றெல்லாம் சந்தேகம் எழ ஆரம்பித்தது. இந்தப் படத்தில் கணக்குக்குப் பத்துப் பாட்டுக்கள் இருக்கின்றன. ஆனால் ஒவ்வொரு பாட்டும் நாலு பாட்டுக்குச் சமம்! படத்தின் தலைப்பான 'காலம் மாறிப்போச்சு' என்பதைப் பட உற்பத்தியாளர் மனதிலும் ஏற்றுக் கொண்டிருந்தால், கொஞ்சம் தாராளமாகவே கத்தரிக் கோலை உபயோகித்து, படத்தை விறுவிறுப்பாக ஓடச் செய்திருப்பார்கள்.

படத்தின் புறக் காட்சிகளும், கிராம மக்கள் வயல் வரப்புகளில் வேலை செய்வதும், மிராசுதாரின் சதி வேலையினால் உடைப்பெடுத்துக் கொண்ட ஏரி ஜலத்தை மக்கள் கூட்டம் கூட்டமாகச் சென்று அடைப்பதும் தத்ரூபமாக இடம் பெற்றிருக்கின்றன. கிராம வாழ்க்கையைச் சித்திரிக்கும் வஹிதா ரெஹ்மானின் நடனம் மிகவும் கவர்ச்சியாயிருக்கிறது.



சைபால்

CIBOL


வெட்டுக்காயம், சொரி சிறங்கு, வேனல் கட்டி தீப்பட்ட புண், முகப்பரு கரப்பான், சேத்துப் புண் முதலிய வியாதிகளைப் போக்குவதில் கைகண்ட களிம்பு

★

தயாரிப்பவர்கள் :

தி சௌத் இந்தியன் மான்யுபாக்சரிங் கம்பெனி

மதுரை



காஸல்ஸ்

மின்சார விசிறிகள்

மிகக் குறைந்த விலையில் அதிகக் குளுமை.

நீரிழிவு

குணமாகும்

சிறு நீரில் சர்க்கரை காண்பது நீரிழிவு (DIABETES) நோயின் முக்கிய அறிகுறியாகும். உங்களுக்குப் பசியும் தாகமும் அதிகமாயிருந்தாலும், உடல் உருகிக் கொண்டு வந்தாலும், அடிக்கடி நீர் இறங்கினாலும் உங்களுக்கு நீரிழிவு நோய் இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. இக்கொடிய உடல் உருக்கி நோய், தான் பற்றினவர்களைக் கடைசி மூச்சு உள்ளவரையில் விடுவதில்லை; கொஞ்சம் கொஞ்சமாக அவர்களை மரண வாயிலுக்கு இழுத்துச் சென்று விடும். நீரிழிவு வியாதியைக் குணப்படுத்த இஞ்செக்ஷன்கள் போடப்படுகின்றன; ஆனால் அவற்றினால் வியாதி கொஞ்சமும் குணமாவதில்லை. மேற்படி இஞ்செக்ஷன்கள் நீரில் சர்க்கரையை குறைக்கின்றன — அதுவும் மருந்துச் சக்தி உள்ள வரையில்தான். ஆகவே, உபாதைகளைத் தடுக்க வாழ்நாள் முழுவதும் ஊசிகள் போட்டுக் கொள்ள வேண்டியதுதான். இதனால் அதிகச் செலவு ஏற்படுவது மட்டுமல்லாது உடலுக்கு கஷ்டம் உண்டாகிறது. நோய் குணப்படுத்தாது போனால் நீங்கள், புண்களினாலும், கண் நோய், பல்நோய், வயிற்றுக் கோளாறு முதலிய பலவித வேதனைகளால் சிரமப்பட நேருகிறது.

நீரிழிவு வியாதியை, வீனஸ் சார்ம் மாத்திரைகளை உபயோகித்து, சிக்கனமாகவும், சுலபமாகவும், நிச்சயமாகவும், பத்திரமாகவும் சிகிச்சை பெறுங்கள்.

பண்டைக்கால யுனானி வைத்திய முறைகளைக் கொண்டு, அரிய மூலிகைகளின் சேர்க்கையுடன் தயார் செய்யப்படும் வீனஸ் சார்ம் மாத்திரைகள், நோயை அடியோடு அகற்றுவதுடன், எத்தனையோ பேர்களை இஞ்செக்ஷன் அல்லது ஒருவிதமான பட்டினி இல்லாமல் குணமாக்கியிருக்கிறது. இதை உபயோகித்து பல ஆயிரக்கணக்கானவர்கள், இந்நோயின் மரணப் பிடியிலிருந்து தப்பியிருக்கிறார்கள். இம் மருந்தை உபயோகிக்கத் தொடங்கிய இரண்டு மூன்று நாட்களுக்கெல்லாம், நீரில் சர்க்கரை குறைகிறது; அத்துடன் அதிக நீர் இறங்குவதும் நிற்கிறது. சில நாட்கள் உபயோகித்தாலே நோய் தணிந்து திருப்தி ஏற்படுகிறது. வீட்டிலிருந்தபடி வீனஸ் சார்ம் சிகிச்சையைத் துவங்குங்கள். விசேஷ பத்தியம் எதுவும் இல்லை. நீங்களே அதன் குணத்தை அறிவீர்கள். இதுபற்றிய விரிவான இலவச ஆங்கிலப் பிரசுரத்தை வரவழைத்துப் பாருங்கள்.

50 மாத்திரைகள் கொண்ட புட்டி ஒன்றின் விலை 6-12-0

(பாக்கிங் தபால் செலவு இனாம்)

வீனஸ் ரிஸர்ச் லாபரேட்டரி (K. M.)

தபால் பெட்டி நெ. 587. கல்கத்தா

தமிழ் கூறும் நல்லுலகம்

கடந்த 24-3-56 அன்று கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கம், கம்பர் விழாவை யொட்டிப் புதியதொரு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது. பாரதத்தின் பல்வேறு மொழிகளில் உள்ள ராமாயணத்தைப் பற்றிய உரைக் கோவையில் ஸ்ரீ நரேந்திர தேவ் வங்க மொழியிலுள்ள கிருத்திவாஸர் ராமாயணம், ஸ்ரீ கே. பி. கெய்த்தான் ஹிந்தி மொழியிலுள்ள துளஸிதாஸர் ராமாயணம், ஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரியார் ஆதிகவி வான்மீகியின் ராமாயணம், ஸ்ரீ ஓ. எஸ். வி. மணியம் கம்பராமாயணம் ஆகியவை பற்றி ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்றினார்கள். கம்பனின் மேதையைத் தமிழரல்லாதவர்கள் அறிந்து கொள்ளவும், மற்ற மொழிகளிலுள்ள ராம கதையைப் பற்றித் தமிழர்கள் அறிந்து கொள்ளவும், இதுபோன்ற உரைக் கோவை பெரிதும் பயன்படும் என்பதில் ஐயமில்லை. தொடர்ந்து நடைபெற்ற இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் ஸ்ரீ கே. வி. சுந்தரம், ஸ்ரீ சிவ. ஜம்புநாதன், ஸ்ரீ இரா. சங்கரன், ஸ்ரீ ரங்கராஜன் ஆகிய மாணவர்களும், ஸ்ரீ ஆ. சு. கிருஷ்ணன், ஸ்ரீ ந. சிங்காரம், ஸ்ரீ வெங்குஸ்வாமி, ஸ்ரீ சித்தலிங்கம் போன்ற அறிஞர்களும் பல்வேறு கோணங்களில் நின்று கம்பனை ஆராய்ந்தது மிகவும் ரஸமாக இருந்தது.

கல்கத்தாவுக்கு அருகாமையிலுள்ள சிப்பூர் திருவள்ளுவர் கலைமன்றத்தாரும் 31-3-56 அன்று சிறந்த முறையில் கம்பன் விழாவைக் கொண்டாடினார்கள். இவ்விழாவில் ஸ்ரீ எஸ். ராமசுப்பன், ஸ்ரீ ஜம்புநாதன், ஸ்ரீ கே. வேங்கடராமன், ஸ்ரீ எஸ். கே. சாமி, ஸ்ரீ தி. ரா. சுப்பிரமணியம் ஆகியோர் கம்பன் படைத்த சிறு பாத்திரங்களைப் பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள்.—பநீ

★

பம்பாய், மாதுங்கா, தென் இந்திய கல்விச் சங்க உயர்நிலைப்பள்ளி மாணவிகள், மேற்படி பள்ளித் தலைமைத் தமிழ் ஆசிரியர் திரு நா. பிச்சமணி அய்யர் எழுதிய ''பக்த துருவன்'' என்னும் நாடகத்தை 31—3—56 சனிக்கிழமை இரவு பள்ளிக்கூட ஹாலில் வெகு திறமையாக நடித்தனர். இந் நாடகம், பள்ளிக்கூடத்தில் அநேக வருடங்களாக நடந்து வரும் ஆண்டு விழாவில் ஒரு அம்சமாகும். ஸ்ரீ க. நாராயணசாமி அவர்கள் நாடக விழாவுக்குத் தலைமை வகித்து, நடிகைகளுக்கு ஆசி கூறிப் பரிசுகள் வழங்கினார். பள்ளிக்கூடத் தலைமையாசிரியர் ஸ்ரீ பரமேஸ்வர அய்யர் தலைவருக்கு வந்தனம் கூறினார். நாடக ஆசிரியர் தம்மையும், நடிகைகளையும் ஊக்குவித்த பள்ளிக்கூட அதிகாரிகளுக்கு வந்தனம் கூறினார். வழக்கம் போலவே நாடகம் வெகு சிறப்பான முறையில் நடந்ததெனக் கூடி யிருந்த ஆயிரக்கணக்கானவரின் அபிப்பிராயம்.

★

வட நாட்டில் தேவலாலி என்ற ராணுவ முகாமுள்ள ஊரில் தென் இந்திய சங்கத்தினர் முதன் முறையாக ஸ்ரீராம நவமி உற்சவத்தை வெகு சிறப்பாகக் கொண்டாடினர். தோஞ்சலி ஹாலில் நிகழ்ந்த இந்த வைபவத்துக்கு ஸ்ரீ ஆர். எஸ். சுப்பிரமணியம் தலைமை தாங்கினார். ஸ்ரீ நாயக் விழாவைத் துவக்கி வைத்தார். ஸ்ரீமதி ஷீலா ஜோஷி இந்துஸ்தானி சங்கீதமும், ஸ்ரீமதி செல்லம் சந்திரன் கர்நாடக சங்கீதமும் வழங்கி ராமநவமி விழாவைச் சிறப்பித்தார்கள்.

★

சென்ற மாதம் 22-4-56ம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஹைதராபாத் நகர் பாரதி சங்கத்தின் சார்பில் ஸ்ரீமான் பூர்ணம் விசுவநாதன் எழுதிய 'ஆபீஸர் விஜயம்' என்ற நாடகம் அகில இந்திய ரேடியோ நிலைய டைரக்டர் ஸ்ரீ இராஜகோபால் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

ஸ்ரீ இராஜகோபால் அவர்கள் சங்கத்துக்கு வாழ்த்துக்கள் கூறி, நாடகத்தில் பங்கு எடுத்துக் கொண்டவர்களையும் பாராட்டிப் பேசினார்.

ஸ்ரீ மாத்ருபூதம் அவர்கள் பாரதி சங்கத்தின் சார்பாக வந்தனோபசாரம் கூறினார்.

★

ஜபல்பூர் தென்னிந்தியர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் இவ்வருடம் ஸ்ரீ ராமநவமி உற்சவத்தை விசேஷ முறையில் கொண்டாடினர். இவ் வைபவம், டிவிஷனல் இஞ்சினியர் ஸ்ரீ அப்பாராஜன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. ஏப்ரல் 22ம் தேதி ஞாயிறு மாலை ஸ்ரீமதி திரிபுரசுந்தரி நடராஜன் அவர்களும், ஸ்ரீ வாஞ்சிமணி அய்யர் அவர்களும் இன்னிசைக் கச்சேரிகள் செய்தனர். மேற்படி இரு கச்சேரிகளுக்கும், சங்கீத பூஷணம் திருவண்ணாமலை ஸ்ரீ ராமமூர்த்தி (வயலின்) அவர்களும், பாலக்காடு ஸ்ரீ ராமநாதன் (மிருதங்கம்) அவர்களும் அருமையாகப் பக்க வாத்தியம் வாசித்துச் சபையோரின் பாராட்டுதலைப் பெற்றனர்.

இம்மாதிரி கச்சேரிகளுக்கும், நடன நிகழ்ச்சிகளுக்கும் அடிக்கடி ஏற்பாடு

செய்து ஜபல்பூரில் வசிக்கும் தென்னிந்தியர்களை ஒன்று கூட்டி ஒற்றுமை உணர்ச்சியைப் பெருக்கச் சென்ற இருபத்திநான்கு ஆண்டுகளாகப் பாடுபட்டு வருகிறது இவ்வூர் தென்னிந்தியர் சங்கம்.

✱

புது டில்லி 'ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்த சபை'யின் பதின்மூன்றாவது வருஷாந்திரக் கொண்டாட்டம் சென்ற 14—4—56 சனிக்கிழமையன்று சிறப்பாக நடந்தேறியது. அச்சமயம் "லோக் சபா" தலைவர் ஸ்ரீ அனந்தசயனம் ஐயங்கார் அவர்கள் தலைமை தாங்கினார். அன்று நடந்த 'ஆட்சிக் குழு' தேர்தலில் டாக்டர் கே. எஸ். கிருஷ்ணனும் ஸ்ரீ எம். எஸ். வேணுகோபாலனும், மீண்டும் முறையே தலைவராகவும், காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். மேற்படி சபையில் மூன்று தினங்கள் ஸ்ரீ ராமானுஜ ஜயந்தி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

✱

கண்ட்லா துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின் உள்ளடங்கிய காந்திதாம் நகரின் பஜனை ஸமாஜத்தின் நான்காவது ஆண்டு நிறைவு விழா சென்ற ஏப்ரல் மாதம் 1உ ஞாயிறன்று வெகு விமரிசையாக நடைபெற்றது. அவ்வமயம் கண்ட்லா துறைமுக அபிவிருத்தியாளர் திரு பி. என். ஸாக்ஸேனா தலைமை வகித்தார். அன்றைய விழாவை முன்னிட்டு, சமாஜத்தின் அங்கத்தினர்களால் "இரு பீஷ்மர்கள்" என்ற சிறு நாடகம் நடிக்கப்பட்டது.

தலை நகரிலே

அழகான கல்யாணமாம்! ஆனைமேலே ஊர்வலமாம்!

சப்புடு

டாக்டர் கிருஷ்ணன் அவர்களைத் தலைவராகக் கொண்ட டில்லி பஜனை சமாஜத்தார் ராமநவமி உற்சவத்தை இதுவரை கண்டும், கேட்டுமிராத முறையில் கொண்டாடினார்கள். உபன்யாசங்களும், சங்கீதக் கச்சேரிகளும் ஒருபுறமிருக்க, ஊர்வலத்துக்கு ஒரு யானையே வந்துவிட்டது. இந்த ஊர்வல



டில்லியில் நடைபெற்ற ராமநவமி மஹோத்சவ ஊர்வலக் காட்சி

ங்களுக்குப் புதிதாக உள்ள இந்த வாகனம் திரளான கூட்டத்தைச் சேர்த்து விட்டது. தங்க முகபடாம் தகதகவென்று மின்ன, தொண்டர் குழாம் துதிபாட, செண்டை முரசுகள் முன்னின்று ஒலிக்க, என்னப்பன் — ரகுராமன் பவனி வந்தான். சீதா கல்யாண மஹோத்சவம் சாங்கோபாங்கமாய் நடந்தேறியது. தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் கும்மி, கோலாட்டம் ரம்மியமாய் அமைந்தன. ஏதோ மாம்பலத்திலோ திருவல்லிக்கேணியிலோ வாழ்வது போன்ற பிரமை தட்டும் அளவுக்கு அமைத்து விட்டார்கள் கரோல்பாக் பக்தர்கள். இரண்டு பந்தியில் இரண்டாயிரம் பேருக்கு அன்னதான கைங்கர்யம் செய்தார்களே, அதைப் பொன் எழுத்துக்களில் பொறிக்க வேண்டும். பஞ்ச பரமான்னம் என்று வெறும் சம்பிரதாயத்துக்குச் சொல்லவில்லை.

"உனக்கு நான் சளைக்கவில்லை" என்று விநயநகர் தென்னிந்தியா சமாஜத்தார் ராமநவமியைச் செவிக்குணவு உற்சவமாய்க் கொண்டாடினார்கள். வானிலை ஆராய்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த திரு நாகசுப்பிரமணியம் அவர்களின் ராமாயணப் பேருரையைக் கேட்டவர்கள் அதைக் கிடைத்தற்கரிய பாக்கியம் என்று ஒப்புக் கொள்வார்கள். அனந்தராம தீக்ஷிதரின் பாணி; அற்புதமான சாரீரம்; எல்லாம் நிரம்ப நன்றாய் அமைந்தன. செவிக்குணவு என்றேனல்லவா! பிடியுங்கள். முதல் நாள் ஸ்ரீமதி கோமதியின் இன்னிசைக் கச்சேரி. பஞ்சாமி பிடில், பி. டி. ஐ. ராமகிருஷ்ணன் மிருதங்கம், கோமதியின் பாட்டு. மறுநாள் வி. எஸ். ராமய்யங்கார் பாட்டு. தீக்ஷிதரின் பல பிராசீன உருப்படிகள் இவருக்கு அத்துபடி. நல்ல சாரீரம் உழைத்து உழைத்து உருப்படியான வகை. பல ஆண்டுகளுக்குமுன் தமிழிலே "கான வித்யா பிரகாசினி" என்ற நூல் வெளியிடத் தைரியமிருந்த பெருங்குளம் சீனிவாசய்யங்காரின் புதல்வர் என்று சொன்னாலே போதும். அனுசரணையாக அவருடன் ஆர்மோனியம் வாசித்த அவர் தமையனார் ஸ்ரீ வி. எஸ். பார்த்தசாரதி அய்யங்கார், சிறந்த சங்கீத வித்வான். மாதிரிமங்கலம் ராமச்சந்திரனின் பலமான கச்சேரியை அடுத்து திவ்ய நாமமும், சீதா கல்யாணமும் இனிது முடிந்தன.

தேவியின் கடிதம்

வசுமதி ராமசாமி

அன்புக்குரிய சகோதரி சுஜாதா,

பெண் கல்யாணத்தை எப்படிக் குழப்பமின்றிச் சந்தோஷமாகச் செய்து முடிக்கலாமெனக் கேட்டிருக்கிறாய்.

வரன் தேடுவதில் எவ்வளவு சிக்கல்கள் இருக்கின்றனவோ அதைவிடப் பன்மடங்கு சிரமம் நடத்தி வைப்பதில் இருக்கிறது. அழைப்புகள் அனுப்புவதில்தான் என்ன கஷ்டம்! சில கல்யாண அழைப்புகளைப் பார்க்கும்போது சிரிப்புத்தான் வருகிறது. கீழே கையொப்பம் செய்யுமிடத்தில் "தங்கள் மேலான வரவைக் கோரும் நண்பர்களும் உறவினர்களும்" என எழுதுகிறார்கள். எல்லா நண்பர்களும், உறவினர்களும் அழைப்பவர்களாயிருந்தால், யாரை அழைக்கின்றார்கள்? விரோதிகளை அழைக்கின்றார்கள் போலும்! ஒருவர் செய்வதைப் பார்த்து அர்த்தம் தெரியாமல் மற்றவர்கள் செய்யும் விநோதத்தில் இது ஒன்று.

முன் காலத்தில் கிராமங்களில் கல்யாணங்கள் நடந்தால் தெருவிலுள்ளவர்களும் உறவினரும் மட்டும்தான் கலந்து கொள்ளுவார்கள். அழைப்பது சுலபமாக இருந்தது. தற்காலத்தில் காசியிலிருந்து கன்யாகுமரிவரை உறவினர்கள், நண்பர்கள் இருக்கிறார்கள். நான்கு நாட்கள் முன்னதாகவேயென அச்சிட்டிருப்பதற்கு அர்த்தமில்லை. ஒரு குடும்பத்தில் எவ்வளவு நபர்கள் இருந்தாலும், தனித் தனியாக அழைப்புகள் அனுப்பவேண்டியிருக்கிறது. இது தகுந்த மரியாதைதான். அத்துடன் கவனமாக மேல் கவரிலும் ஸ்ரீமதி, ஸ்ரீயென எழுதி அனுப்ப வேண்டியிருக்கிறது. நாம் வெளியூருக்கெல்லாம் அழைப்புக்களை ஞாபகமாக அனுப்புவோம். பக்கத்து வீட்டிலுள்ளவர்களை மறந்து விடுவோம்.

கல்யாணக் கும்பலில் நமக்குத் தெரியாதவர்களாக இருந்தால்கூடப் பெண்ணுக்குத் தாய் தந்தையர்கள் யாரென்று எளிதாக அறிந்து விடலாம். எங்கும் இல்லாத கலவரமும் பொறுப்பும், கவலையும் சேர்ந்து பிரமிப்புடன் பேசநாவெழாமல் இருப்பவர்கள்தான் பெற்றோர்கள். பிள்ளை வீட்டார் செய்யும் கெடுபிடி, திட்டத்தைவிட அதிகச் செலவு, உறவினர்களுடைய குறைபாடு எல்லாம் அவர்கள் முகத்தில் பிரதிபலிக்கும்.

பெண் கல்யாணத்துக்கு எவ்வளவோ சிரமப்பட்டு ஏற்பாடுகள் செய்கிறோம். செலவும் செய்கிறோம். அதை ஒரு சந்தோஷ அனுபவமாகச் செய்யத்தான் வேணும். பெற்றோர்களும் சில தொந்தரவுகளைச் சுலபமாக எடுத்துக்கொள்ள முயற்சி செய்வது நலம். பிள்ளை வீட்டார் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன், ஒருவருக்கொருவர் தேவைகளைக் கேட்டு சகஜபாவத்துடன் இருந்தால் அநேக கஷ்டங்கள் குறையும். சிநேகிதர்களுக்கு என்றுமில்லாத அவசரம் ஏனோ வருகிறது. தங்களைப் பன்முறை சாப்பிடும்படி உபசாரம் செய்ய வேணுமென்று எதிர்பார்க்க வேண்டாம்.

வெற்றிலை பாக்கு கொடுக்கப் பைகள் வைத்திருப்பது சிறந்த யோசனைதான். சிந்தாமல் சிதறாமல் எடுத்துப் போகிறவர்களுக்கும் சுலபமாகத்தான் இருக்கும். ஆனால் அதில் மூன்று நாட்களுக்கு முன் வெற்றிலையைப் போட்டு, பழத்தின் மேல் ஒரு தேங்காயையும் வைத்துப் பையைப் பார்க்காமல் கொடுக்கும்படி நேருகிறது. இதுவும் அற்ப விஷயமானாலும் அழகாகச் செய்யலாம். கல்யாண வீட்டிலிருந்து வந்து பையைப் பார்த்து எடுத்தால் அழுகிக் கருகின பழம், வாடின குப்பையாக ஒரு வெற்றிலைக் காம்பு; இந்தத் தோற்றம் பார்க்க அருவருப்பாக இருக்கிறது. இதைக் கவனமாகச் செய்யலாமல்லவா?

"நீ எல்லாம் எழுதி விடுகிறாய். செய்து பார்த்தால்தான் தெரியும். உன்னால் மட்டும் எல்லாம் சரியாகச் செய்துவிட முடியுமா?" என்றெல்லாம் நீ கேட்டு விடுவாய்.



பைரவி ராகம் பாடுவதைப் பற்றி விமர்சனம் செய்யலாம். ஆனால் அந்த விமர்சகரே அழகாகப் பைரவி ராகத்தைப் பாட முடியாது. அவசியமுமில்லை. சொல்வது எளிது; செய்வது அரிதுதான்.


ஒரு கல்யாணத்தில் பெண் வீட்டார் முறுக்கு மூன்று சுற்றில் வைத்து விட்டார்களென்று பிள்ளை வீட்டில் ஒரு அம்மாள் குற்றம் சொல்ல ஆரம்பித்தாள். அது கொஞ்சம் கொஞ்சமாய்ப் பூதாகாரமாய் உருப்பெற்றுக் கல்யாணமே நின்றுவிட்டது.

நாகரிகம், பண்பு என்பதெல்லாம் என்ன? ஆடை அலங்காரம் மட்டுமல்ல; ஒருவருக்கொருவர் ஒத்துப் போவது, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, திருமணத்தைப் போன்ற முக்கியமான காரியங்களில் அழகாகவும் அன்பாகவும் நடந்து கொள்வது, இவைதான் நாகரிகம். —பூமாதேவி

கவனமுடன் நெய்யப்பட்டு பெருமையுடன் அணியப்படுபவை

உங்களுடைய கம்பீரமான துணி பீரோவில் புதிய மாறுதலை ஏற்படுத்த விரும்பினால், கைத்தறி துணிகளில் மிக சமீபத்திய மோஸ்தர்களைக் காண்பிக்கச் சொல்லுங்கள்.

உங்கள் உடை தேசிய உடையாகவோ, அந்தந்த பிரதேச பாணியிலோ, இருக்க விரும்பினாலும், விசேஷ சந்தர்ப்பங்களுக்கு ஏற்றதாகவோ, அல்லது ஓய்வுநேர உடையாகவோ வேண்டுமாயினும் ஏராளமான கைத்தறி இரகங்களிலிருந்து பொறுக்கி எடுத்து கொள்ளலாம். குளிர்ச்சி பொருந்திய பருத்தி நூல் இழைகளிலிருந்து, மிக மிருதுவான பட்டுத் துணிகள், கம்பளித் திரைகள் மற்றும் கடும் குளிரிலும், கதகதப்பு உண்டாக்கக்கூடிய கனமான கம்பளி ரகங்கள் வரை சகல வகைகளும் கிடைக்கும். ஆடம்பரம் விரும்புவோருக்கு மஷ்ரூ, ஹிம்ரூ, கிங்காப் மற்றும் விசேஷ காலங்களுக்கேற்ற ஜரிகைத் துப்பட்டாக்கள் கிடைக்கும். எந்தத் துணி வாங்கினாலும் இந்தியாவின் கைத்தறி நெசவாளர்களின் இணையற்ற சிருஷ்டித்திறனும், பாரம்பரிய வேலைப்பாடும் பிரதிபலிப்பதான நேர்த்தியான தரம் உத்தரவாதமாகக் கிடைக்கிறது.



கைத்தறித் ☆ துணிகள்

நீடித்த நேர்த்திக்கு

DA/55-122TM

அகில இந்திய ஹாண்ட்லூம் போர்டு

98, மௌப்ரீஸ் ரோடு, சென்னை-18; ஜாஹிர்பாக் ஹவுஸ், விட்டட் ரோடு, பலார்ட் எஸ்டேட், பம்பாய், மற்றும் 7/192, ஸ்வரூப் நகர், கான்பூர்.

ரகுபதி  ராகவ

[அகமதாபாத் நவஜீவன் காரியாலயத்தினர் பிரசுரம் செய்திருக்கும் 'சத்தியமே தெய்வம்' என்னும் காந்தி வசன மஞ்சரியிலிருந்து ராஜாஜி எடுத்து எழுதியது]

26

"பிரார்த்தனை என்னத்திற்கு? ஆண்டவன் ஒருவன் இருந்தால் நம்முடைய விஷயம் அவனுக்குத் தெரியாதா? அவனுக்கு நாம் சொல்லித்தான் தெரிய வேண்டுமா? அவன் செய்ய வேண்டியதை நாம் அவனுக்குச் சொல்லிக் காட்ட வேண்டுமா?"

"இல்லை, ஆண்டவனுக்கு நாம் நினைவூட்ட வேண்டியதில்லை. அவன் வெகு தூரத்தில் இல்லை. நமக்குள்ளேயே இருக்கிறான். அவன் அநுமதியின்றி எதுவும் நடப்பதில்லை. நம்முடைய பிரார்த்தனை நம்முடைய உள்ளத்தைச் சோதிப்பதற்காகவேதான் அவசியமாகிறது. ஆண்டவனுடைய அருள் இன்றி நாம் ஒன்றுமே செய்து முடிக்க இயலாது என்பதைப் பிரார்த்தனையினால் நமக்கு நாம் நினைவூட்டிக் கொள்கிறோம்."

எந்த முயற்சியும், பிரார்த்தனையின்றிச் செய்தால், அது முயற்சியாகாது. ஆண்டவனுடைய அருள் கிட்டாமல், மனிதனுடைய எந்தப் பெருமுயற்சியும் ஒரு பயனும் பெறாது என்பதை நாம் உணர வேண்டும். இந்த அடக்கத்தைப் பெறுவதற்குப் பிரார்த்தனை செய்கிறோம். உள்ளத்தில் உள்ள அழுக்கைத் துடைப்பதற்காகவே இதைச் செய்ய வேண்டும். [ஹரிஜன் 8-6-35]

ராமன், ரஹிமான், அஹுரமஸ்தா, பகவான், கிருஷ்ணன், ஆங்கிலத்தில் GOD, இவை அனைத்தும் சக்திகளுக்குள் பராசக்தியான சக்திக்கு, மனிதன் ஒரு பெயர் வைத்து அழைக்கும் முயற்சியாகும். அவ்வளவே.

குறையும் குற்றமும் நிறைந்த மனிதன் தன் குறையை நீக்கிக் கொள்ள சதா முயல்கிறான். குழந்தை நடக்கப் பார்ப்பது போல் நடந்தும் விழுந்தும் எழுந்தும் நம்முடைய அறிவைக் கொண்டு பராசக்தியை உணர்ந்து கொள்ளப் பார்க்கிறோம். அறிவுக்கு எட்டாத ஒரு பொருளை அறிவைக் கொண்டு எட்டப் பார்க்கிறோம். குழந்தை நடக்கக் கற்றுக் கொள்வதற்கும் இதற்கும் பேதம் இல்லை. இப்படிச் சொல்வதில் மிகை ஒன்றும் இல்லை. மனிதன் வழங்கும் சொற்களில் ஈசன் அடங்குவானா? அடங்காமற் போனாலும் அடங்கியதாக வைத்துக் கொண்டு பேசுகிறோம். சொல்லைக் கடந்த அவனுக்கு நாம் சொல்லி விளக்க வேண்டிய அவசியமில்லை. நமக்குத்தான் வேண்டும், ஒருவாறு அவனைக் குறிக்கும் சொற்கள். இதை ஒப்புக் கொண்டால் பிரார்த்தனைச் சொற்கள் என்னத்திற்கு என்று கேட்க மாட்டீர்கள். நம்முடைய குறைபட்ட அறிவைக் கொண்டு முற்றுப் பொருளை உணரப் பார்க்கிறோம். ஈசனாகிய பெரும் பொருள் கடலைப் போன்றது. நம்முடைய அறிவு ஒரு நீர்த்துளி. சமுத்திரத்தை உணர வேண்டுமானால் அதில் விழுந்து மூழ்கித் தீர்ந்து போனால் தான் காண்போம். இது நம்மால் செய்ய முடியுமா? ஆனபடியினால் எந்த முறையில் பிரார்த்தனை செய்த போதிலும் நம்மை ஓரளவு சுத்தப் படுத்திக் கொண்டு பார்க்கிறோமே தவிர, உண்மையில் நாம் ஆண்டவன் தரிசனத்தை அடைவதில்லை என்று ஒரு காலத்தில் மதாம் ப்ளவாட்ஸ்கி சொன்னது உண்மை. நமக்குள் ஈசன் இருக்கிறான் என்பதை முற்றிலும் உணர்ந்து நிச்சய ஞானம் பெற்றால் தான் நம்முடைய பிரார்த்தனை பலன் பெறும். தனக்குள் ஈசன் இருப்பதை ஒப்புக் கொள்ளாதவன் பிரார்த்தனை செய்ய வேண்டியதே இல்லை. அதனால் ஆண்டவன் கோபித்துக்

கொள்ள மாட்டான். நமக்குத்தான் நஷ்டம். இதை என் அனுபவத்தில் கண்டு நான் சொல்கிறேன்.

நான் மேலே சொன்னதை எல்லாம் ஒப்புக் கொண்டால் ஆண்டவனை எந்த வடிவத்தில் தியானித்தாலும் சரியே ஆகும் என்பது விளங்கும். ஒருவன் ஆண்டவனைப் புருஷ வடிவத்தில் தியானிக்கலாம். மற்றொருவன் தாய் வடிவம் தந்து வணங்கலாம். வேறு சிலர் அவனை வடிவமற்ற ஒரு சக்தியாகவே வைத்துக் கொண்டு வழிபடலாம். அவரவர்களுக்கு அவரவர்களின் பாவனை சரியானதே யாகும். தத்தம் பாவனா சக்தியைக் கடந்து அதற்கு அப்பாற்பட்ட வழி ஒன்றைத் தேடுவதில் பயனில்லை. அப்பாற்பட்டது அப்பாற் பட்டே நிற்கும். அனைத்துக்கும் மேலான சக்தி என்று ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக் கொண்டால் போதும். அனைத்திலும் பரந்து அனைத்தையும் தன்னுள் அடக்கி, மனிதனுடைய அறிவைக் கடந்து, உயிருக்கு உயிராகியும் சக்திக்குச் சக்தியாகவும் இருக்கும் பரம் பொருளை ஈசன் என்று பெயர் வைத்து வழிபடுகிறோம்.

[ஹரிஜன் 18—8—46]

வகுப்புவாதமே! ஜாக்கிரதை!

காந்தி மகானைப் பலிகொண்ட கட்சி இந்து மகாசபை. அந்தக் கட்சியை விட்டு வந்தவர் டாக்டர் வரதராஜுலு நாயுடு. இப்பொழுது அவர் தேசத்தின் ஐக்கியத்தையே பலிகொள்ள முயலுகிறார். அவருக்குப் பாடம் கற்பிக்கப் போவது யார் என்று கேட்கிறார் ஸ்ரீ ஏ. கே. மாசிலாமணி செட்டியார் எம். எல். ஏ., அவர் கூறுவதைக் கேளுங்கள் :

தமிழ் பிரதானமாகப் பேசப்படும் பிரதேசங்கள் வேண்டும் என்ற பொருள் கொண்ட முடிவைச் சட்டசபை செய்திருப்பதாக டாக்டர் நாயுடு கூறுகிறார். அவர் சொல்லுகிறபடி சட்டசபை எதுவும் செய்யவில்லை. தமிழ் நாடு என்றுகூடப் பெயர் வைக்கவில்லை.

காங்கிரஸ் மேலிடத்திலிருந்து வந்த உத்தரவுக்கு இணங்க ராஜ்யச் சீரமைப்பு மசோதாவைக் காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள் கட்சிக் கூட்டத்திலும், சட்ட சபையிலும் எதிர்க்கவில்லை. அவ்வளவுதான்.

இதுவே தமிழ் பிரதானமாகப் பேசப்படும் பகுதி என்றால் தேவிகுளம், பீர்மேடு, சித்தூர், திருத்தணி என்ன! இவையெல்லாம் தமிழ் பிரதானமாகப் பேசப்படும் பகுதிகள் இல்லையா! இவையெல்லாம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றனவா! டாக்டர் வரதராஜுலு நாயுடு என்ன கூறுகிறார் என்பது எனக்குப் புரியவில்லை.

தட்சிணப் பிரதேச யோசனையும், இது போல் பல மொழி பேசும் பகுதிகளை இணைக்கும் யோசனையும் அமிர்தசரஸ் காங்கிரஸில் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது.

ராஜ்யச் சீரமைப்பு மசோதா மீது பார்லிமெண்டில் பேசிய உள்நாட்டு மந்திரி ஸ்ரீ பந்த் பல மொழி பேசும் பகுதிகளை இணைக்கும் சாத்தியக் கூறுகள் போய் விடவில்லை என்றும் அவ்வித இணைப்புகள் ஏற்படும் வகையிலேயே மசோதா தயாரிக்கப் பட்டிருப்பதாகவும் தெளிவாகக் கூறினார்.

அதனால் பல மொழிப் பிரதேச இணைப்பு யோசனையை உருவாக்க அனுமதிக்கப் பட்டிருப்பதாகவே கருதி, தட்சிணப் பிரதேச அமைப்பின் அவசியத்தை மக்களிடையே நாம் பிரசாரம் செய்ய வேண்டியது அவசியம்.

அதைத்தான் நிதி மந்திரி ஸ்ரீ சி. சுப்பிரமணியம் மிகவும் தைரியமாகச் செய்கிறார். மற்ற இரு மந்திரிகள் அவரை ஆதரித்துப் பேசி வருவது தட்சிணப் பிரதேச அமைப்புக்கு ஆதரவு வலுப்பதையே காட்டுகிறது.

காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ தேபர்கூட தட்சிணப் பிரதேச அமைப்பைப்பற்றி மக்களிடையே பிரசாரம் செய்யலாம் என்று அனுமதித்துள்ளார்.

மேலிடத்தினர் அனுமதித்துள்ளதை டாக்டர் வரதராஜுலு நாயுடு ஆட்சேபிப்பது விந்தையாக இருக்கிறது. ஆட்சேபிக்க வேண்டியவர்கள் மௌனமாக இருக்கும்பொழுது டாக்டர் வரதராஜுலு நாயுடு முன் வந்து அறிக்கை விட்டிருப்பது மந்திரி சபை நெருக்கடியை உண்டாக்குவதாகவும், கட்சிக்குள் வேற்றுமையை வளர்ப்பதாகவும் இருக்கிறது.

மொழி வெறியும், மாகாணப் பித்தும், இந்த நாட்டு முன்னேற்றத்தின் பொது எதிரிகள். டாக்டர் நாயுடு இந்து மகாசபையிலிருந்து வகுப்புவாதத்தை வளர்த்தவர். வகுப்புவாதம் தேசபிதா மகாத்மா காந்தியைப் பலிகொண்டவுடன் அதைவிட்டு ஓடி வந்தவர்.

அவரிடம் இன்னும் மன மாறுதல் ஏற்படவில்லை; மொழி வெறியையும், மாகாணப் பித்தையும் தூண்டிவிட்டு அரசியல் சதுரங்கம் ஆடும் எண்ணம்தான் இருந்துகொண்டே இருக்கிறது என்பது அவருடைய அறிக்கையிலிருந்து மிகத் தெளிவாகத் தெரிய வருகிறது.





அத்தியாயம் 16

இதயம் விரிந்தது

எவ்வளவு நேரம் இந்துவைப் பற்றிய சிந்தனைகளினால் உண்டான வேதனையையும், உண்மையிலேயே ஊசி குத்துவது போல் மார்பில் ஏற்பட்ட வலியையும் பொறுத்துக் கொண்டிருந்தேனோ தெரியாது.

டாக்டர் வந்து என்னைப் பரிசோதித்து விட்டு, "ஒன்றும் இல்லை! மனத்தில் ஏதோ அதிர்ச்சி ஏற்பட்டிருக்கும். ஓய்வு எடுத்துக் கொண்டு எங்கேயாவது ஒரு வாரம் போய் விட்டு வரலாமே. 'டார்ஜீலிங்' மிக அருமையான இடம். அங்கே போய் இருந்து விட்டு வாருங்களேன்" என்று கூறிவிட்டுத் தூக்க மருந்து கொடுத்து விட்டுப் போனார். அதைச் சாப்பிட்டு விட்டு நன்றாக அயர்ந்து தூங்கினேன்.

மறுநாள் பொழுது விடிந்து வெகு நேரம் சென்ற பின்தான் எழுந்தேன். ஒருவாறு மனம் தெளிவடைந்திருந்தது. கால்களில் ஒரு இலேசான நடுக்கம் இருந்தது. அதைத் தவிர நெஞ்சு வலியெல்லாம் சரியாகி யிருந்தது.

கோர்ட்டுக்குப் போய் விட்டு வந்த பிறகு உடை மாற்றிக் கொண்டு, பத்மநாபன் வீட்டுக்குச் சென்றேன். ஸுலோசனா சிவந்த ரோஜா மலர் ஒன்றைக் கையில் வைத்துக் கொண்டு சோகமே உருவாகத் தோட்டத்தில் நின்று கொண்டிருந்தாள். அவளுக்கு அருகில் ரோஜாச் செடிகள் பூத்துக் குலுங்கி யிருந்தன.

அந்தக் காட்சியை இன்னும் என்னால் மறக்க முடியவில்லை. ஸுலோசனாவின்

உள்ளத்தில் துயரத்தின் சாயை படியவே படியாதென்று எண்ணிக் கொண்டிருந்தேன். அவனை அந்த நிலையில் பார்த்ததும் எனக்கு ரொம்பக் கஷ்டமாக இருந்தது. அதை எண்ணும் பொழுதெல்லாம், என்னையே என்னால் மன்னித்துக் கொள்ள முடியவில்லை.

சுலோசனா என்னைப் பார்த்ததும் இரண்டு அடிகள் முன்னால் எடுத்து வைத்தாள். ரோஜா மலரை மறுபடியும் என் சட்டையில் பொருத்த வேண்டுமென்று வருகிறாளோ என்று எனக்குத் தோன்றியது. சடாரென்று சுலோசனா திரும்பினாள். ஒரே ஓட்டமாக ஓடித் தோட்டத்தின் பின் பக்கத்தில் மறைந்து போய் விட்டாள்.

அவளைத் தொடர்ந்து சென்று சமாதானமாக இரண்டு வார்த்தைகள் சொல்லலாமென்று நான் நடந்தேன்.



காலடியில் ஏதோ மெத்தென்று மிதிபட்டது. அந்தச் சிவப்பு ரோஜா என் பூட்ஸின் அடியில் அகப்பட்டுக் கசங்கிப் போயிருந்தது.

குனிந்து ரோஜாவை எடுத்துப் பைக்குள் வைத்துக் கொண்டு வீட்டுக்குள் சென்றேன். சுலோசனாவைச் சந்திக்க எனக்கு மனம் வரவில்லை. பார்த்தால் என்ன கூறிச் சமாதானப் படுத்துவது? பார்க்காமலேயே இருந்தால் நாளாக மறந்து விடுவாளென்று நினைத்துக் கொண்டு புறப்பட்டு விட்டேன். ரமேஷிடம் நான் சென்னை சென்று விட்டுச் சில நாட்களில் திரும்புவேனென்று கூறி விட்டு வீட்டுக்குத் திரும்பினேன்.

காலையில் எழுந்ததும் எனக்கு இரண்டு அதிசயங்கள் காத்துக் கொண்டிருந்தன. மேஜையின் மீது கிண்ணத்தில் புதிய ரோஜா மலர்கள் வைக்கப்பட்டிருந்தன. மஞ்சளும், சிவப்புமாக அவை மிக அழகாக இருந்தன.

அருகில் சென்றேன். கிண்ணத்துக்கு அடியில் ஒரு கடிதம் இருந்தது. அதை எடுத்துப் பிரித்தேன். ஆங்கிலத்தில் முத்து முத்தான எழுத்தில், எழுதப்பட்டிருந்தது. "உங்களிடம் விடைபெறுவதற்கு முன்னால், உங்கள் இதயத்துக்காகச் சிவப்பு ரோஜாவையும், அறிவுக்காக மஞ்சள் ரோஜாவையும் பரிசாக அளிக்கிறேன். நமஸ்காரம். -சுலோ" என்று எழுதியிருந்தது. என் கண்களில் நீர் நிரையிட்டது.

ஸ்நானம் செய்து விட்டு வந்ததும் இன்னொரு கடிதம் வந்தது. எனக்கு மாற்றல் உத்தரவு வந்திருப்பதையும், அதிலும் சென்னைக்கு அருகில் என்னை மாற்றி இருக்கிறார்கள் என்பதையும் பார்த்த போது ரொம்ப மகிழ்ச்சி உண்டாயிற்று. அதுவே ஒரு நல்ல சகுனம் என்று தோன்றியது.

உற்சாகத்துடன் நான் கோர்ட்டுக்குக் கிளம்பினேன். பிற்பகலில் திரும்பி வந்தபோது சமையல்காரன் எனக்குப் பத்மநாபன் வீட்டிலிருந்து டெலிபோன் வந்ததாகச் சொன்னான். அன்றிரவு அவருடைய வீட்டில் நடக்கும் விருந்துக்கு வரச் சொல்லிப் பத்மநாபன் கூறச் சொன்னாரென்றும் கூறினான். அவனிடம் சென்னை புறப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யச் சொல்லி விட்டு நானும் விருந்துக்குப் புறப்பட்டேன். மேஜையின் மீதிருந்து பேனாவை எடுத்துக் கொண்டபோது ஒரு ரோஜா முள் என் கையைக் கீறியது. கீறிய இடத்திலிருந்து ரத்தம் வந்தது. ஒரு ரோஜாவைக் கிள்ளி என் சட்டையில் பொருத்திக் கொள்ள முயற்சித்தேன். அது நிற்கவில்லை. கடைசியில் பைக்குள் போட்டுக் கொண்டு கிளம்பினேன்.

சுலோசனா விருந்தினர்களை உபசரித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய முகமலர்ச்சியைப் பார்த்தபோது முதலில் எனக்கு வியப்பாக இருந்தது. காலையில் அப்படிக் கடிதம் எழுதிய சுலோசனா வென்றே தோன்றவில்லை. சிறிது நேரத்துக்கெல்லாம் அவளுடைய உபசாரப் பேச்சில் ஒரு அலட்சிய பாவம் தொனிப்பதும், அவளுடைய சிரிப்பின் ஒரு துயரச் சாயை படிந்திருப்பதும் எனக்குத் தெரிந்தன. எப்போதும் போலப் பகட்டாகவே தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தாள் சுலோசனா. ஆனால் முன்பிருந்த சிரத்தையுடன் செய்து கொள்ளவில்லை யென்று தோன்றியது. என்னைப் பார்த்து ஒரு புன்னகையுடன், வறண்ட குரலில், "மிஸ்டர்,

ராய்! உங்களுக்கு ஏதாவது வேண்டுமா?'' என்று கேட்டாள். அந்த உபசார வார்த்தைகள் என்னை முள்ளைப் போலக் குத்தின.

சற்று நேரத்துக்குப் பின் என்னைப் பார்த்து ஒரு மெல்லிய புன்னகையுடன் தன் தலையில் சூடியிருந்த ஒரு ரோஜாவை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டாள். தன்னுடைய கடிதத்தை நான் படித்தேனா என்று தெரிந்து கொள்ள அவள் விரும்புகிறாளென்பதை நான் புரிந்து கொண்டேன். சட்டைப் பையிலிருந்து நானும் ரோஜாவை எடுத்து ஒரு தடவை முகர்ந்து பார்த்து விட்டு மறுபடியும் பையில் போட்டுக் கொண்டேன். சுலோவின் மெல்லிய புன்னகை மலர்ந்த சிரிப்பாயிற்று. ஒரு கணம் தான். பிறகு மலரைத் தலையில் வைத்துக் கொண்டு சுலோ மற்றவர்களுடன் பேசத் தொடங்கினாள். விருந்து முடியும் வரை அவள் என்னைத் திரும்பிப் பார்க்கவே இல்லை.

நான் எல்லோரும் சென்ற பிறகு கிளம்பினேன். பத்மநாபனிடம் நான் மாற்றலாகிப் போவதைக் கூறி விட்டுப் போகவேண்டுமென்று காத்துக் கொண்டிருந்தேன். அதைக் கூறியபோது கூடச் சுலோசனாவின் முகத்தில் சிறிதும் சஞ்சலம் காணப்படவே இல்லை. அவளுடைய மனோ திடம் எனக்கு வியப்பை அளித்தது. ஆயினும் அப்படி அவள் திடீரென்று என்னை யாரோ அன்னியன் மாதிரி பாவித்தது, எனக்குப் பிடிக்கவில்லை. நான்தான் நண்பனாக இருப்பதாகக் கூறியிருக்கிறேனே. அதை ஏன் அவள் ஏற்றுக் கொள்ளக் கூடாது? எதற்காக இப்படி அலட்சிய பாவத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்று தோன்றியது.

பத்மநாபன் உண்மையாகவே கவலைப் பட்டார். நான் வெகு தூரத்துக்கப்பால் போய் விடுவதால் தம்முடைய நோக்கம் நிறைவேறாமலேயே போய் விடுமோ என்று அவர் பயந்திருக்க வேண்டும். அந்தக் கவலை அவர் பேச்சில் தொனித்தது. ரமேஷ் நிஜமாகவே வருத்தப்பட்டான். ''நீங்கள் இல்லாமல் எனக்குப் பொழுதே போகாது, மிஸ்டர் ராய்! என்று நாம் இனிமேல் ஒன்றாகச் சேருவோமென்று கவலையாக இருக்கிறது!'' என்றான். அவன் கூறிய மொழிகள் இதயத்திலிருந்து வந்தபடியால் எனக்கும் உண்மையிலேயே ஒரு அருமையான நண்பன் இருக்கிறான் என்ற உணர்ச்சி உண்டாயிற்று.

ஒரு வாரத்தில் நான் சென்னை புறப்பட்டு விட்டேன். ராஜாராமை உடனே வந்து என்னைப் பார்க்கும்படி சொல்லியனுப்பினேன்.

அன்று ராஜாராம் வந்ததும் அவரிடம் நான் இந்துவைப் பற்றி முழு விவரங்களும் விசாரித்துத் தெரிந்து கொண்டேன். நான் எதிர்பார்த்ததற்கு மேலாகவே அவர் பரிவோடு நடந்து கொண்டார். அன்று நான் சென்ற பிறகு இந்து எவ்வளவு வருந்தப் பட்டாளென்று கூறினார். சுலோசனாவுடன் என்னைச் சினிமா தியேட்டரில் பார்த்தது தான், இந்துவின் கோபத்துக்குக் காரணமென்று தெரிந்த போது என் மனத்தில் கொஞ்ச நஞ்சம் பாக்கியிருந்த சந்தேகமும் கோபமும் பறந்தோடிப் போய்விட்டன. இந்துவைப் பார்த்து அவளிடம் என் ஏக்கத்தைத்



தெரிவிக்க வேண்டுமென்ற ஆர்வம் மட்டுமே இருந்தது.

ராஜாராமிடம் இந்து வீட்டிலிருக்கும் நேரத்தைக் கேட்டேன். அவருடனேயே நான் போக வேண்டுமென்று முதலில் விரும்பினேன். பிறகு மறுநாள் பிற்பகல் போவதுதான் சிறந்ததென்று ராஜாராம் கூறவே அப்படியே வருவதாகக் கூறினேன்.

மறு நாள் இந்துவை நான் சந்தித்த பொழுதுதான் உண்மையில் இந்து அனுபவித்திருக்கும் தாங்க முடியாத வேதனையை என்னால் உணர முடிந்தது. நான் அவளுடைய கண்களை மூடியதும் அவள் உணர்ச்சி வசப்பட்டு, கைகள் நடுங்க என் கைகளைத் தொட்டுப் பார்த்தாளே, அதை நினைத்தாலே எனக்குத் தேகம் சிலிர்க்கிறது.

இந்துவை அப்படியே மலரைப் பாதுகாப்பது போல அன்பைப் பொழிந்து

ஜாக்கிரதையாகப் பாதுகாக்க வேண்டுமென்ற அவா எனக்கு உண்டாயிற்று. ஆனால் கடமை குறுக்கிட்டது. இந்துவைக் குங்குமத்துறைக்கு அனுப்பி வைத்து விட்டு நான் வேலையை ஒப்புக் கொள்ளச் சென்றேன்.

ஈசுவரமூர்த்தியைப் பற்றி எனக்கு மனம் உறுத்திக் கொண்டிருந்த போதிலும், அவரால் என்ன செய்து விட முடியுமென்று நான் தைரியமாக இருந்தேன். ஈசுவரமூர்த்தி விஷயமாக நான் ஒன்றும் செய்யாமல் இருப்பதே நல்லதென்று எனக்குப் பட்டது. இந்துவை நான் மணந்து கொண்டு விட்டால் பிறகு என்ன நேரிட முடியும்? யார் தான் என்னிடமிருந்து இந்துவைப் பிரிக்க முடியும் என்று நினைத்தேன்.

ஆனால் நான் வேலை ஒப்புக் கொண்ட ஐந்தாவது நாள் அந்தப் பயங்கரமான செய்தி வந்தது. "இந்து கைதியானாள். உடனே வரவும்" என்று ராஜாராம் தந்தியடித்திருந்தார்.

அதைப் பார்த்தவுடன் என் மனம் என்ன பாடு பட்டிருக்கும் என்பதை எழுத முடியுமா? இதயம் விரிந்தே போய் விட்டது. எனக்கு இறைவனுடைய கருணையிலேயே நம்பிக்கை போய் விட்டது. கடவுள் என்று ஒருவர் இருந்தால் இவ்வாறு அநீதிகள் உலகத்தில் நடைபெற முடியுமா? அதிலும் இந்துவைப் போன்ற மாசு மறுவில்லாத இதயம் படைத்த ஒரு பெண்ணுக்கு இத்தனை கஷ்டங்களைக் கொடுக்கும் கடவுள் ஒரு கடவுளா? என்று ஆத்திரப்பட்டேன்.

எனக்கு வேலையை அப்படியே விட்டு விட்டுப் போகவும் முடியாது. என்னுடைய சொந்த விஷயத்துக்காகக் கடமையில் தவறுவதா என்ற கேள்வி எழுந்தது. பிறகு, நான் உயிர் வாழ்வதே இந்துவுக்காகத்தானே? இந்துவை விட எனக்கு உலகில் எதுவும் பெரிய கடமை இல்லை என்று தீர்மானித்து, ஒரு ராஜினாமாக் கடிதம் எழுதி வைத்து விட்டுப் புறப்பட்டு விட்டேன்.

இரவெல்லாம் தூக்கமில்லாததாலும் என் நெஞ்சில் ஏற்பட்டிருந்த துயரத்தினாலும் திடீரென்று எனக்கு ரொம்ப வயதாகி விட்டது போன்ற உணர்ச்சி ஏற்பட்டிருந்தது.

நடுவில் ரயில் ஏதோ ஒரு ஸ்டேஷனில் நின்ற பொழுது ஒரு சிறுவன், "அமரதாரா கைதியானாள். அமரதாரா குற்ற



வாளி'' என்று கத்திக் கொண்டே போனான். அவனை இழுத்து நாலு அறை வைக்க வேண்டுமென்று எனக்கு அளவில்லாத ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது.

ஆனால் சிலர் பத்திரிகையை ஆவலுடன் வாங்குவதையும், அதில் வந்துள்ள செய்தியைப் படிப்பதையும் கண்டு நான் வேதனையடைந்த போதிலும், கோபத்தை அடக்கிக் கொண்டேன். அவர்களுடன் சண்டை போட்டு என்ன பயன்?

திருநந்திபுரம் போய்ச் சேரும் வரையில் எனக்கு மனம் ஒரு நிலையில் இல்லை. இந்துவை எப்படியும் காப்பாற்றி விடலாம் என்ற நம்பிக்கை இருந்தது. இருப்பினும் இந்துவுக்கு இப்படி ஒரு அவமானம் நேர்ந்து விட்டதே என்று நெஞ்சம் புழுங்கியது. திடீரென்று சந்திரமணியின் முகம் எதிரில் தோன்றி, ''உன்னை நம்பி என் குழந்தையை ஒப்புவித்தேனே! என் கண்மணியின் கதி இப்படியாகும்படி செய்து விட்டாயே!'' என்று கூறுவது போல் தோன்றும். நான் கண்களை மூடிக்கொள்வேன். ஆனால் காதுகளில் அந்த வார்த்தைகள் மட்டும் ஒலித்துக் கொண்டேயிருக்கும். அவருடைய புலம்பலினால் எனக்குச் சித்தப்பிரமை வந்து விடக்கூடாதே என்று அஞ்சினேன்.

திருநந்திபுரத்தை அடைந்த பிறகு இந்துவை லாக் - அப்பில் போய்ப் பார்க்கவே எனக்கு மனம் வரவில்லை. ராஜாராமும், முனிசாமி கவுண்டரும் என்னைப் பார்த்த உடனே கதறிக் கண்ணீர் விட்டார்கள்.

''குழந்தைக்கு வரக் கூடாத கதி வந்து விட்டதே!'' என்று வருந்தினார் முனுசாமி கவுண்டர்.

என்னை அவர்கள் தேற்ற வேண்டிய நிலையில் நான் இருந்தேன். ராஜாராமிடம் ''இந்துமதியை எந்த முகத்துடன் வந்து பார்ப்பேன்?'' என்று கண்ணீர் விட்டேன். ராஜாராம் என்னைத் தேற்றினார்.


''இந்து என்னைப் பற்றி என்ன நினைப்பாள் ராஜாராம்? கையாலாகாதவன் என்று எண்ண மாட்டாளா? என் துயரத்தை நான் எப்படி அவளிடம் காட்டிக் கொள்ள முடியும்? நான் இவ்வளவு படித்தும், பட்டம் பெற்றும் பயன் என்ன? என் இந்துவைப் பாதுகாக்க முடியாமல் போய் விட்டதே. அவள் தலைக்கு ஏதோ ஆபத்து வரும் என்று எண்ணினாள். நான்தான் அலட்சியமாக இருந்து விட்டேன். அன்றே நான் அவளைப் பதிவுத் திருமணமாவது செய்து கொண்டிருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் இப்படி நடப்பதை ஒரு வேளை தடுத்திருக்க முடியும்'' என்று புலம்பினேன்.

''நீங்கள் இப்படி நொந்து கொள்வதால் என்ன பயன் மிஸ்டர் ரங்கதுரை? எல்லாம் அந்தப் பாழாய்ப் போன சகுவரமூர்த்தியின் சூழ்ச்சியாகத்தான் இருக்க வேண்டும். இனிமேல் நீங்கள் இந்துவை நிரபராதி என்று நிரூபிக்கத்தான் முயற்சி செய்ய வேண்டும். தெய்வம் நம் பக்கத்தில் இருக்கும். அதில் சந்தேகமில்லை. இந்து நிரபராதி என்பது நமக்குத் தெரியும். ஆகவே கவலைப்படாதீர்கள்'' என்றார் ராஜாராம்.

என்னதான் மற்றவர்கள் சமாதானப் படுத்தினாலும் நமது மனம் சமாதானமடைந்து விடுகிறதா என்ன? கண்ணீரை வேண்டுமானால் அடக்கிக் கொள்ளலாம். துயரத்தை நமக்குத் தெரியாமலேயே ஒளித்து வைத்துக் கொள்ள முடியுமா?

இந்துவைக் கடைசியில் லாக்-அப்பில் போய்ச் சந்திக்கத்தான் செய்தேன்.

அவளைப்பார்த்து நான் கலங்கிப் போனேன். தைரியம் சொல்லக் கூட முடியவில்லை.



என்னுடைய வாழ்க்கையில் சம்பந்தப்பட்டவர்களுக்கும் சிறைக்கும் ஏதோ தொடர்பு இருந்து வருகிறது போலும் என்று எண்ணினேன். என் தந்தை சிறையிலிருந்து தப்பிச் செல்ல முயற்சி செய்து அதனால் இறந்து போனது நினைவுக்கு வந்து என்னை நிலைகுலையச் செய்து விட்டது.

இந்து என்னைத் தேற்றினாள். அவளுடைய குரலில் நான் முன்பெல்லாம் அனுபவித்து ஆனந்தித்த கனிவு இல்லை. வறட்சிதான் இருந்தது. முதலில் ஏமாற்றத்தினால் அப்படி இருக்கிறாளென்று நினைத்தேன். நாட்கள் செல்லச் செல்ல அவள் சுபாவமே எனக்குப் புரியாத புதிராக இருந்தது.

என்னிடம் மனம் விட்டுப் பேச மறுத்தாள். அதுதான் எனக்குப் புரியவில்லை. தனக்கு முடிவு வந்து விட்டதாகத் தானே நிர்மாணித்துக் கொண்டாள். 'நான் மரண தண்டனையடையவே விரும்புகிறேன்' என்று கூறி என் மனம் பதறும்படி செய்தாள். வக்கீல் வைத்து வாதாடக் கூடாதென்று பிடிவாதம் பிடித்தாள்.

ஜாமீனில் விடுதலை செய்து அழைத்து வந்த பிறகு அவளுடைய பிடிவாதம் அதிகமாயிற்று.

இந்துவின் நிலையைப் பார்த்து எனக்குப் பச்சாத்தாப உணர்ச்சி பொங்கியது. ஆனால் அவள் எங்களுடன் வழக்கு நடத்த ஒத்துழைக்காமலிருந்ததை நினைத்தால் இன்னும் கோபம் வருகிறது. அவள் அவ்வளவு விரக்தி மனப்பான்மை அடையாமல் கொஞ்சம் நாங்கள் சொன்னபடி கேட்டிருந்தால் இந்த வரலாற்றை நான் எழுத வேண்டியே நேர்ந்திருக்காது.

அவளுடைய பச்சோந்தி சுபாவம் எனக்கு விளங்கவே இல்லை. சில சமயங்களில் பேசத் தொடங்குவாள். உடனே 'கப்'பென்று வாயை மூடிக் கொண்டு விடுவாள். பேசினாலும் பதில் சொல்ல மாட்டாள். சில சமயம் அழுது கொண்டிருப்பாள். சமாதானப் படுத்தினால் எரிந்து விழுவாள். சில அபூர்வமான சந்தர்ப்பங்களில்தான் எனக்காக அவள் எவ்வளவு தூரம் ஏங்கினாள் என்பது தெரிய வரும். இரண்டு நிமிஷங்களில் அவள் இதயம் பனிக்கட்டியாக உறைந்து விட்டதோ என்று தோன்றும்படி பேசுவாள். ஏதோ உறுதி செய்து கொண்டவள் போல வாயே திறக்க மாட்டாள். அப்படித் திறந்தால் பனிக்கட்டியிலிருந்து நெருப்புக்கூட வருமோ என்று தோன்றும் வண்ணம் ஒவ்வொரு வார்த்தையும் நெஞ்சைச் சுடும்.

தாங்க முடியாத துக்கங்கள் அனுபவித்து அவளுக்கு உண்மையிலேயே சித்தம் கலங்கி விட்டதோ? 'ஹிஸ்டீரியா' என்பது போன்ற கோளாறு அவளுக்கு ஏற்பட்டு விட்டதோ என்று கூட நான் கவலைப் பட்டேன்.

அளவுக்கு மீறி அவள் பிடிவாதம் பிடித்த சமயங்களில், பிடிவாதம் செய்யும் குழந்தையை அடித்துச் சொன்னதைக் கேட்கச் செய்வது போல, செய்தால் என்ன என்றுகூட எனக்குத் தோன்றி விடும்.

மிகுந்த செலவில் சென்னையிலிருந்து வக்கீல் நீலகண்டனை வரவழைத்து வழக்கை நடத்தினேன். அவர் இந்துவிடம் தந்தப் பிள்ளையாரைப் பற்றிக் கேட்டால் தனக்கு ஒன்றும் தெரியாதென்று கூறச் சொன்னார். ஆனால் விசாரணையின்போது இந்து உண்மையை ஒளிக்காமல் கூறி விட்டாள். அவளிடம் அந்தச் சமயத்தில் தாங்க முடியாத கோபம் வந்த போதிலும் பிறகு, அவளுடைய தீரத்தைப் பற்றி நினைத்து நான் வியந்தேன்.

இந்து சிறைப்பட்ட செய்தி தெரிந்ததும் சுலோசனா எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தாள்:

"நான் செய்ய இருந்த தவற்றை நினைத்தாலே எனக்குக் கலங்குகிறது. இதுவரையில் நாங்கள் இந்துமதிக்கு இழைத்த அநீதிகள் போதாதென்று நானும் பெரிய குற்றம் செய்ய இருந்தேன். இறைவன் தான் என்னை அதிலிருந்து காப்பாற்றினார். இப்போது உங்களைப் பற்றி நான் கொண்டிருந்த மதிப்பும் மரியாதையும் இன்னும் பல மடங்கு அதிகமாகி விட்டன.

எனக்கு உங்களோடு வந்திருந்து வழக்கை நடத்த ஆவலாக இருக்கிறது. உங்கள் இருவருக்கும் உதவி செய்ய வேண்டுமென்று எனக்கு மனம் துடிக்கிறது. ரமேஷ் அப்படி நான் செய்வது ரொம்பத் தவறென்றும், அதனால் பல கோளாறுகள் விளையலாம் என்றும் கூறுகிறான். என் தந்தைக்கு உங்கள் மீது இன்னும் அதிகமாகப் பகை ஏற்படுமென்கிறான். அதனால் தான் நான் பொறுமையோடு சகித்துக் கொண்டிருக்கிறேன். இந்துவிடம் நான் மன்னிப்புக் கேட்டதாகக் கூறுங்கள். அவளுக்கு எழுத எனக்குத் துணிவு வரவில்லை."

—சுலோசனா

இந்துவைப் பற்றி யார் போலீஸுக்குத் தகவல் சொன்னார்களென்ற விஷயம் வெளியில் வரவே இல்லை. அது சகுவர மூர்த்தியாகத்தான் இருக்க வேண்டுமென்று நான் ஊகித்தேன்.

வழக்கு திருநெல்வேலியில் உள்ள ஸெஷன்ஸ் கோர்ட்டுக்குப் போயிற்று. இந்துமதியின் கார்டியனான பத்மநாபன் அவர்கள் சாட்சியாக அழைக்கப்பட்டார். அவர் என்னைத் தனியாகப் பார்த்தபோது என்ன சொன்னார் தெரியுமா? "மிஸ்டர் ராய்! அந்தப் பெண்ணுடைய பெயர் அநியாயமாகக் கெட்டுப் போய் விட்டது. நீங்கள் சுலோசனாவை மணந்து கொண்டு சந்தோஷமாக இருக்கலாம். எதற்காக உங்கள் வாழ்க்கையை இந்துமதியின் வாழ்க்கையோடு சேர்த்துக் கெடுத்துக் கொள்கிறீர்கள்?" என்றார்.

"நான் நினைத்த சமயங்களிலெல்லாம் என் மனத்தை மாற்றிக் கொள்ளும் வழக்கம் இல்லை, மிஸ்டர் பத்மநாபன்!" என்றேன் கடுமையாக.

"அப்படியா? நானும் மாற்றிக் கொள்வதில்லை. நீங்கள் என்னுடைய விருப்பப்படி சுலோசனாவை மணந்து கொண்டால் இப்போது கூட இந்துமதியை எப்படியாவது நான் காப்பாற்றி விடுகிறேன்" என்றார்.



"சகோதரர்............அவர்கள் இப்போது குடிசைத் தொழில் பற்றிப் பேசுவார்........."


என் மனத்தில் ஒரு பைத்தியக்கார எண்ணம் உண்டாயிற்று. இந்துவைக் காப்பதற்காக அவர் கூறுவது போலச் செய்தாலென்ன என்று தோன்றியது. அடுத்த கணத்தில் 'அதை விட இந்து இறந்து போவதே நல்லது. நான் சுலோசனாவை மணந்து கொண்ட பிறகு இந்து உயிர் வாழ்ந்து என்ன பயன்?' என்ற எண்ணம் உதித்தது. உடனே, "உங்கள் யோசனைக்கு மிகுந்த நன்றி. ஆனால் அதை நான் ஏற்றுக் கொள்ள முடியாதவனாக இருக்கிறேன்" என்று கூறி விட்டு வந்து விட்டேன். அதன் பிறகு நானும் அவருடன் பேசுவதில்லை. அவரும் விட்டு விட்டார்.

வழக்கு நடந்தபோது இந்துமதியைக் கேட்கக் கூடாத கேள்விகளையெல்லாம் கேட்டுத் துன்புறுத்தினார் பிராஸிக்யூஷன் வக்கீல். இந்துவின் பொறுமையை ஒவ்வொரு கேள்வியும் சோதித்தது. கோர்ட்டுக்கும், விசாரணைகளுக்கும் எவ்வளவோ நாட்களாக வழக்கப்பட்டிருந்த எனக்கே கோபம் கோபமாய் வந்தது. ஆனால் நான் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் இருந்தேன்.

தங்க பாண்டியனையும் சாட்சியாக வரவழைத்தார்கள். தங்கபாண்டியனைப் பார்த்ததும் நான் என் தாபங்களையெல்லாம் கூறிக் கண்ணீர் விட்டேன். அவற்றை அவன் அனுதாபத்துடன் கேட்டான். ஆனால் அவனால் எனக்கு எந்த உதவியும் செய்ய முடியவில்லை. எங்களுக்கு எதிராக அவன் ஒன்றும் கூறாமல் இருந்தான். அதையே நான் பெரிய உதவியாகக் கருதினேன்.

சொக்கையாவுக்கும் தங்கபாண்டியனுக்கும் எப்போதும் விரோதம் தான். ஆனாலும் அவன் மாமாவின் கட்சியில் சாட்சி கூற அவனை அழைத்தார்கள். அந்த விநோதத்தைப் பார்த்து நான் வியந்தேன்.

இந்துமதிக்கு விரோதமாகவே எல்லாச் சாட்சியங்களும் இருந்தன. எனக்கே அது நன்றாகத் தெரிந்தது. சாட்சிகள் எவ்வளவு விரோதமாக இருந்தாலும் இந்து நிரபராதி என்று தெரிந்து சொல்வதில் என்ன சிரமம்? இந்துவின் பொன் முகத்தைப் பார்த்தாலே அவள் எந்த விதமான குற்றத்தையும் மனத்தினால்கூடச் செய்யமாட்டாள் என்பது தெரிந்து விடுமே. நான் என் வேலையை ராஜினாமாச் செய்ததற்கு என்னையே வாழ்த்திக் கொண்டேன். சில சமயம் சாட்சிகளை வைத்துக் கொண்டு நிரபராதியைக் கூடத் தண்டிக்கும்படி நேர்ந்து விடுமே? அதற்கு வேண்டிய கல் மனம் எனக்கு இல்லை. அதை விரும்பவும் இல்லை.



இந்துவிடம் கடிதம் கொண்டு வந்து கொடுத்த ஒரு ஆள் சாட்சி சொன்னான். அவன் தானே இந்துவிடம் கடிதத்தைக் கொடுத்ததாகவும், அதைப் படித்ததும் இந்துமதி பாதிரித் தோட்டத்துக்கு ஓடியதைப் பார்த்ததாகவும் கூறினான். அதில் என்ன எழுதியிருந்ததென்று தனக்குத் தெரியாதென்றும், சொக்கையா அந்தக் கடிதத்தை இந்துவிடம் கொடுக்கச் சொன்னதாகவும், மறுநாள் காலையில்தான் அவர் இறந்து போன விவரம் தனக்குத் தெரியும் என்றும் அவன் கூறினான். அவன் கூறியது உண்மை என்பது எங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரிந்திருந்தது.

தங்கபாண்டியன் சாட்சி கூறிய பொழுது, தான் அன்று முழுவதும் திருநந்திபுரத்தில் இருந்ததாகவும் இரவு பத்து மணிக்கு மேல் வீடு திரும்பியதாகவும், காலையில்தான் தனக்குச் சொக்கையா கொலை செய்யப்பட்ட விவரம் தெரியுமென்றும் கூறினான். தங்கபாண்டியன் கூறியதில் சிறிது பொய் இருந்தாலும், அவன் எனக்குச் செய்துள்ள எத்தனையோ உதவிகளை நினைத்து நான் பேசாமலிருக்க வேண்டியதாயிற்று.

பிறகு பத்மநாபன் சாட்சி சொன்னார். இந்துமதியைத் தன்னிடம் ஒப்படைத்து விட்டு அவளுடைய வளர்ப்புத் தந்தை மந்திரமூர்த்தி காலஞ் சென்றதாகவும், அவளைத் தான் எவ்வளவோ நன்றாகக் கவனித்துக் கொண்டிருந்த போதிலும் ஓடிப் போய் விட்டதாகவும், அவள் இருக்குமிடம் தமக்கு அது வரையில் தெரியாதென்றும் கூறினார்.

இந்துமதியிடம் அவள் ஏன் பெயரை மாற்றி வைத்துக் கொண்டாள் என்று கேட்டதற்கு அவள் பதில் கூற மறுத்து விட்டாள். ஒரு தடவை தன் பெயரை விமலா என்றும், இன்னொரு தடவை அமரதாரா என்றும் அவள் மாற்றி வைத்துக் கொண்டதற்கு அவளுடைய குற்றவாளி மனப்பான்மைதான் காரணம் என்றும் சாதுர்யமாக வாதாடினார் எதிர்க் கட்சி வக்கீல்.

ராஜாராம் என்ற அய்யாக் குட்டியுடன் இந்துமதி ஏன் வசித்து வந்தாள் என்று எதிர்க் கட்சி வக்கீல் கேட்டதும் கோர்ட்டில் சிரிப்பொலி உண்டாயிற்று. என் நெஞ்சில் அக்னித் திராவகத்தை ஊற்றிய மாதிரி அது எரிச்சலை உண்டாக்கியது. இந்துவின் நிலை மிகவும் பரிதாபகரமாகி விட்டது. அவளுக்கு எந்தக் கேள்விக்குப் பதில் சொல்கிறோம், என்ன சொல்கிறோம் என்ற பிரக்ஞையே போய் விட்டது.

இந்துவிடம் நான் பத்மநாபனைப் பற்றி அவளுக்குத் தெரிந்ததையெல்லாம் எழுதித் தரும்படி கேட்டேன். புதுச்சேரியிலிருந்து வைரம் வரவழைத்ததும், இந்துவுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தை அவர் கொடுக்கவில்லை என்பதும் கோர்ட்டாருக்குத் தெரிந்தால் பத்மநாபனுடைய சாட்சியத்துக்கு வலிவு இருக்காதென்று நான் எண்ணினேன். இந்து அதற்கு உடன்படவில்லை. "கைலாசனுவின் தந்தையைக் காட்டிக் கொடுக்க நான் ஒரு நாளும் சம்மதிக்க மாட்டேன்" என்று பிடிவாதமாகச் சொல்லி விட்டாள்.

"பத்மநாபன் நமக்கு விரோதமாகச் சாட்சி சொல்லும் போது நாம் எப்படி அதைப் பொறுத்துக் கொள்வது?"

"எப்படியாவது என் உயிரைக் காப்பாற்றிக் கொண்டுதான் ஆகவேண்டும் என்கிற ஆவல் எனக்கு இல்லை" என்றாள் இந்துமதி.

"எனக்கு நீ துரோகம் செய்கிறாய்!" என்று கூறினேன்.


"அது வேறு விஷயம். நான் அடுத்த ஜன்மத்தில் உங்களைப் பதியாக அடைவேன். நான் என் அம்மாவிடம் போக வேண்டும். எனக்கு இந்த வாழ்க்கை அலுத்து விட்டது" என்றாள் இந்து.

அவளுடைய விவாதத்தைக் கண்டு அழுவதா? பெருமைப் படுவதா என்று எனக்குப் புரியவில்லை.

கடைசியில் இந்துமதிக்கு மரண தண்டனை என்று தீர்ப்புக் கூறி விட்டார்கள். என் மனம் சுக்கல் சுக்கலாகச் சிதறியது.

(தொடரும்)


❋முயற்சியின்றி விற்பனையின் உச்ச நிலையை எட்ட முடியாது. இதற்கு பண வசதி, தொழிலில் ஆர்வம், மற்றும் தரமான சரக்கு அவசியமானது. ஹிந்த் சைக்கிளின் மேம்பட்டதரமே லக்ஷக் கணக்கான அதன் விற்பனையின் வெற்றிக்குக் காரணமாகிறது!
மற்ற எந்த சைக்கிளைக்காட்டிலும் 4 மடங்கு அதிகப்படியான ஹிந்த் சைக்கிள்கள் ரஸ்தாவில் செல்லுகின்றன.
இப்பொழுது!
பத்துலக்ஷம் ஹிந்த்
சைக்கிள்கள் ரஸ்தாவில் செல்லுகின்றன
மழமழப்பாயும் அழகாயுமுள்ள ஹிந்த் சைக்கிள் நமது ரஸ்தாக்களில் செல்லுவதிலும் ஏற்படும் இன்னல்களை சமாளித்து நீடித்த உழைப்பை அளிக்குமாறு தயாரிக்கப்பட்டது. இதனாலேயே நாடு முழுவதும் அதிகப்படியான ஜனங்கள் "ஹிந்த்" சைக்கிளில் சவாரி செய்கிறார்கள்.
ஹிந்த்
லக்ஷத்திலோர் சைக்கிள்.
ஹிந்த் சைக்கிள்ஸ் லிமிடெட், 250, வொர்லி, பம்பாய் 8.



தொட்டில்-கிளி

கோசி நதியின் தீரத்திலே, அந்த வனாந்தரப் பிரதேசத்தில் உதவி இன்ஜினியர் கோபாலனின் கூடாரத்திலிருந்து நள்ளிரவு நேரத்தின் அமைதியைக் கலைத்துக் கொண்டு கேட்டது, பச்சிளம் குழந்தை யொன்றின் அழுகுரல்!

போர்வையை அப்படியே உதறிவிட்டு எழுந்த கோபாலன் மேஜை விளிம்பிலிருந்த மின்சார விசையை அமுக்கி விளக்கைப் பொருத்தினான். 'நியான்' விளக்கின் மங்கிய பிரகாசம் கூடாரத்துக்குள் நிலவியது. குழந்தை வீறிட்டு அழும்போது தொட்டில் ஆடிய ஆட்டமும் எழுந்த பிரலாப ஒலியும் அவன் நெஞ்சைக் கசக்கிப் பிழிந்து விட்டன.

பரபரப்புடன் பாலைக் கலக்கிப் புகட்டும்-குப்பியில் ஊற்றி எடுத்துக் கொண்டு அவன் வருவதற்குள் பசி தாளாமல் கத்தியது குழந்தை. பூப்போல அதை எடுத்து மடியில் கிடத்திய வண்ணம் குப்பியை அதன் வாய் அருகே கொண்டு போனான். கையையும் காலையும் உதைத்துக் கொண்டு அழுத குழந்தை இப்போது ஆவலுடன் பாலை உறிஞ்ச ஆரம்பித்தது. ஆடாமல் அசையாமல் அந்தப் பசலையின் முகத்தையும் அதன் குமுத உதட்டின் அசைவையும் பார்த்துக் கொண்டே தன்னை மறந்தான் கோபாலன்.

இன்னும் மூன்று மாதங்கள். தொண்ணூறு நாட்கள்! அதன் பிறகு கோபாலன் எதிர்பார்த்து நிற்கும் அந்த நாள் வந்து விடும்! அதுதான் அணையின் திறப்பு விழா! அவன் திறமை உலகுக்கு அறிவிக்கப்படும் மகத்தான நாள் அது!



இந்த நினைவுகள் வந்து கோபாலன் நெஞ்சில் மோதிய பொழுது அவன் மனக் கண்முன் என்ன வெல்லாமோ காட்சிகள் தெரிந்தன. அப்படித் தெரிந்த ஒவ்வொரு காட்சியின் நடுவேயும் பவானியின் முகம் சோகச் சித்திரமாக மின்னிக் கொண்டேயிருந்தது.

கோபாலன் கண்களில் நீர் முட்டியது. பவானிக்கு ஏதோ தீங்கு இழைத்து விட்டதைப் போல அவன் உள்ளம் குமுறியது.

கோபாலனை அவன் தாயார் தன் சகோதரனை ரங்கநாதனிடம் ஒப்புவித்து விட்டுக் கண்களை மூடும் பொழுது ரங்கநாதன் சாதாரண நிலையில் தான் இருந்தார். கல்யாணமான புதிது; குழந்தை குட்டிகள் ஒன்றும் இல்லாத சமயம். நன்றாகப் படித்திருந்தும் அரசாங்க உத்தியோகத்தை நாடிப் போகாமல் கையிலிருந்த சொத்துத் தொகையை முதலீடு செய்து ஒரு மரக்கடை ஆரம்பித்திருந்தார். வியாபாரமும் சுமாராக ஓடிக் கொண்டிருந்தது.

அப்போது கோபாலனுக்கு ஆறு வயது இருக்கும். ராஜ அம்சத்துடன் பார்ப்பதற்கு மிகவும் லக்ஷணமாக இருப்பான் குழந்தை.

"இதோ பார் மங்களம், சமர்த்தி பெண் பெற்றாள் என்று சொல்வார்கள். எப்படியும் ஒரு பெண்ணைப் பெற்றுக் கொடுத்துவிடு. நம்ம கோபிக்குக் கட்டி வைத்து விடலாம்" என்று







மருதை :— அண்ணே ! குத்துச் சண்டைக்கு வறயா ?

முனியன் :— ஏன்டா சோனிப் பயலே, உனக்கு அவ்வளவு திமிரா ? என்னையா சண்டைக்குக் கூப்பிடறே ? உன்னைச் சட்னி பண்ணி விடுவேறன் பார் !

மருதை :— ஐயையோ ! என்னுடன் சண்டை போட இல்லேண்ணே ! 'ஸ்டேடியத்திலே' இன்னைக்கு 'ரோஷமான குத்துச் சண்டை' நடக்குது பாரு; அதைப் பார்க்கலாம் வறயான்னு கூப்பிட்டேன் !

மனைவியைப் பரிகாசம் செய்வார் ரங்கநாதன். அப்போது கன்னம்சிவக்க, "போங்கோன்னு!" என்று வெட்கத்துடன் சுழித்துக் கொண்டவள் மறு வருஷமே சந்திரபிம்பம் போல் பவானியைப் பெற்றெடுத்தாள்.

அதில் தம்பதிகள் இருவருக்கும் ஏற்பட்ட மகிழ்ச்சி கொஞ்ச நஞ்சமல்ல. அன்றிலிருந்து அதிர்ஷ்டச் சக்கரம் சுழல ஆரம்பித்தது. சென்னையிலேயே ரங்கநாதனது கடை பெரிய 'டிம்பர் கன்ஸர்ன்' ஆக வளர்ந்து வியாபாரம் பெருகி, இரண்டு மூன்று வருஷங்களுக்குள் அவருடைய பொருளாதார நிலை வளர்ந்து விட்டது.

இத்தகைய நிலை மாற்றத்திலும் முக்கிய விஷயம் என்னவென்றால் ரங்கநாதன் தம்பதிகளின் குணநலன்கள் அப்படியே மாறாமல் இருந்தன. தங்கள் சொந்தப் பிள்ளையை விட மேலாக அன்பு காட்டிக் கோபாலனை வளர்த்து வந்தனர். கோபாலனும் படிப்பில் ஒளி விளக்காக இருந்தான். பவானியிடம் அவனுக்கு உயிர். 'பாப்பா, பாப்பா!' என்று அவன் தொட்டிலைச் சுற்றிச் சுற்றி வருவான்.

சிறு சிறு வென்று வளர்ந்து வந்த பவானியைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கும் பொழுது வீட்டில் அவளுக்கு ஒரு தங்கை—கமலா—பிறந்தாள். கோபிக்கும் பவானிக்கும் ரொம்ப சந்தோஷமாக இருந்தது. வருஷங்கள் ஒன்று, இரண்டு என்று ஓடிக் கொண்டிருந்தன. கோபி ஸ்கூல் பைனல் தேறி விட்டுக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தான். பவானிக்குப் பத்தாவது போதும் என்று படிப்பை நிறுத்தி விட்டார் ரங்கநாதன்.

கணிதத்தில் கோபாலனுக்கு இருந்த திறமையை உணர்ந்த அவன் கல்லூரிப் பேராசிரியர்கள் சிலர் ரங்கநாதனைக் கண்ட பொழுது, "பையனை 'எஞ்ஜினியரிங்' படிக்க வைத்தால் வெகுவாகச் சோபிப்பான்" என்று சொல்லி வந்தனர். ரங்கநாதனும் கோபாலன் விஷயத்தில் ஏற்கனவே ஒரு திட்டம் வைத்திருந்தார். எப்படியாவது கோபியை வெளி நாட்டுக்கு அனுப்பிப் பொறி இயல் துறையில் கெட்டிக்காரனாக்க வேண்டும் என்று விரும்பினார் அவர். அதற்கேற்ப அந்த வருஷம் இன்டரில் மாகாணத்திலேயே முதன்மையாகத் தேறினான் கோபாலன். அவனை அமெரிக்காவுக்கு அனுப்ப ஏற்பாடுகள் மும்முரமாக நடந்தன.

"அப்பா கோபாலா ! உன் மாமியை நான் சமாதானப்படுத்தி விட்டேன். பவானியைச் சரிக்கட்ட வேண்டியது உன் பாடு!" என்று கூறிவிட்டார் அவர். பவானியோ அத்தானோடு முகங் கொடுத்துப் பேசி ஒரு வாரத்துக்கு மேலாயிற்று.

பவானியைப் பார்க்க மாடிக்கு ஓடோடியும் சென்றான் கோபாலன். பவானி கையிலே 'எம்பிராய்டரி வளையத்தை' வைத்துத் தைத்துக் கொண்டிருந்தாள்.

"பவானி! உனக்கு எத்தனை சொன்னாலும் தெரியமாட்டேன் என்கிறதே! ஏன் முகத்தை 'உம்' என்று வைத்துக் கொண்டிருக்கிறாய்! மூனே மூணு வருஷத்திலே ஓடி வந்து விடுவேன். வரும்பொழுது என் பவானிக்கு......"

"போதும், அத்தான்! உங்கள் பிரதாபம்! நான் ஒன்றும் போகிறதைப் பற்றி வருத்தப் படவில்லே! ஜோராக உங்கள் பாட்டுக்குப் போயிட்டு வாருங்கள். ஒரு வேளை அந்த ஊரு உங்களுக்குப் பிடிச்சா அங்கேயே இருந்துக்குங்கோ."

"அசடு மாதிரி பேசாதே, பவானி! நான் எங்கே இருந்தாலும் பவானி என் உள்ளத்துக்குள்ளேயே இருப்பாள்" என்று சொல்லிய வண்ணம் அவன் கண்ணின் கடையோரத்தில் துளித்து நின்ற கண்ணீர்த் திவலையைத் தன் கைக்குட்டையால் மெல்ல ஒற்றித் துடைத்தான் கோபாலன்.

'களுக்' என்று வாய் விட்டே சிரித்து விட்டாள் பவானி.

கோபாலன் பொறி இயல் துறையில் பட்டம் பெற்று அமெரிக்காவிலிருந்து மீண்டும் சென்னைக்கு வந்தவுடன், பவானி அவனை எப்படியெல்லாம் உருவத்தில் கற்பனை பண்ணி வைத்திருந்தாளோ அதே மாதிரிதான் காட்சியளித்தான்.

பாரத அரசாங்கத்திலிருந்து அந்தச் சமயத்தில் கோபாலனுக்கு அழைப்பு வந்திருந்தது. அரசாங்கத்தாரால் கோசி நதியின் குறுக்கே

கட்டப்படும் பெரிய அணைத் திட்டத்தை உருவாக்கும் கர்த்தாக்களில் ஒருவனாக அவனையும் நியமனம் செய்திருந்தனர். ரங்கநாதன் முதலில் அசந்து போய் விட்டார். பின்பு ஆற அமர யோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்தார்.

"கோபாலா! இப்பொழுது உன் படிப்புக்கு ஏற்ற உத்தியோகம் தேடி வந்திருக்கிறது. தேச நிர்மாண வேலையில் உன்னைப் போன்றவர்களின் சேவை மிகவும் இன்றியமையாதது. ஆனால் பவானியை நினைத்தாலோ, இனியும் அவளால் உன்னைப் பிரிந்திருக்க முடியாது என்பது போல் தோன்றுகிறது. ஆகவே உன் மனத்துக்கு எது சரியென்று படுகிறதோ அப்படியே செய்" என்றார்.

கோபாலனுக்கும் நிலையில்லா உள்ளம்தான் இருந்தது. படித்த படிப்பை நாட்டின் நல்வாழ்வுக்குப் பயன்படுத்த ஒரு சந்தர்ப்பம், பவானியின் கண்ணீர் மல்கிய முகம்—இரண்டும் மாறி மாறி அவன் உள்ளத்தில் தயக்கம் காட்டின. கடைசியில் இது விஷயமாகப் பவானியையே ஒரு வார்த்தை கேட்டு விடுவதென்ற முடிவுக்கு வந்தான்.

"அத்தான்! என்றைக்கு உங்களை 'அத்தான்' என்று கூப்பிட ஆரம்பித்தேனோ அன்றே உங்களுடையவளாகி விட்டேன். என் சுயநலத்துக்காக மகத்தான ஒரு பணியிலிருந்து உங்களைத் தடுத்து நிறுத்த என் மனம் ஒப்பவில்லை. உங்களுக்காகக் காத்துக் கொண்டு நிற்பேன். எத்தனை வருஷமானாலும் சரி!"

மகிழ்ச்சியும் ஆவேசமும் தாங்காமல் அவள் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான் கோபாலன். அதிலே ஆயிரமாயிரம் உணர்ச்சிக் குமிழிகள் பொங்கிக் கொண்டிருந்தன.

திடீரென்று குழந்தை விழித்துக் கொண்டு அழுதது. கோபாலன் ஓடிக் குழந்தையைக் கையில் எடுத்துக் கொண்டான்.

குழந்தையைக் கையில் ஏந்தியதும் கோபாலனுக்குப் பவானி முன்பு எழுதிய கடிதத்தின் வாசகங்கள்தான் நினைவுக்கு வந்தன.

"அன்புள்ள அத்தான்!

என் பெயருக்குக் கடிதம் எழுதி எத்தனையோ மாதங்கள்—எனக்கு யுகங்கள் ஆகி விட்டன. நான் எழுதாவிட்டால் என்னையே மறந்து விடுவீர்கள் போல் இருக்கிறதே!

இன்னொரு விஷயம்: நேற்று கமலா தெருவில் விற்றுக்கொண்டு போனவனிடம் அழகான தொட்டில் கிளி யொன்றை வாங்கி விட்டாள். பாவம், பொம்மைக் கிளி என்ன சொல்லிக் கொடுத்தாலும் 'உம்' என்று வாயை மூடிக் கொண்டிருக்கிறது. வெறுந் தொட்டில் அதற்குப் பிடிக்கவில்லையோ என்னவோ!"

அசைந்தாடும் தொட்டிலுக்கும் அதை உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கும் கிளிக்கும் ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் கையில் குழந்தையுடன் நின்றுகொண்டு ஒரு பெருமூச்சு விட்டான் கோபாலன்.

ஐந்து வருஷங்களுக்குப் பின்பு போகிறவன் கையில் ஒரு குழந்தையுடன் பவானியின் முன் சென்றால் ......!

கோபாலனுக்குத் தலை கிறங்கியது. உண்மையிலேயே செல்லமுத்து—அஞ்சலை இவர்கள் மேல் அவனுக்கு அடங்காத கோபம் பிறந்தது. யாருடைய நட்பால் ஓரளவு நிம்மதி கிடைத்தது என்று முன்பு நினைத்தானோ, அவன் ஏன் தன் வாழ்வில் குறுக்கிட்டிருக்க வேண்டும் என்று நினைத்தான் இப்போது. கடவுள் மேலேயே ஒரு வெறுப்பு! அவர் அந்தத் தம்பதிகளை மண்ணிலே உலவ விட்டுச் சட்டென்று அழைத்துக் கொண்டு விட்டாரோ!

* * *

மூன்று வருஷங்களுக்கு முன்பு ஒருநாள். இரவு பத்து மணிக்கு மேல், கோபாலன் படுக்கைக்குப் போனபிறகு கூடாரத்துக்கு வெளியிலிருந்து "ஐயா!" என்ற தமிழ்க் குரல் கேட்டது. கோபாலன் ஆச்சரியத்துடன் வெளியே வந்து பார்த்தான்.

"என்னப்பா வேணும்!" — கோபாலன் வாயிலிருந்து நீண்ட நாட்களுக்குப் பிறகு தமிழ் ஒலித்தது.

"ஒன்றுமில்லே எசமான்! சும்மா உங்களைக் கண்டுக்கிட்டுப் போவலாம்னுதான் வந்தேன்" என்று சொன்னான் வந்தவன். கோபாலனும் அவனை உள்ளுக்குக் கூப்பிட்டு உட்கார வைத்துப் பேசினான். பெயர் செல்லமுத்து என்றும், அன்றுதான் கோபாலனைத் தமிழனென்று இனங் கண்டதாகவும் சொன்னான் அவன்.

அவன் நட்புக் கிடைத்த பொழுது கோபாலனுக்கும் எவ்வளவோ ஆறுதலாகத்தான் இருந்தது. உத்தியோக ஹோதாவில் சக-அதிகாரிகளுடன் ஆங்கிலத்தில் பேசிப் பேசிச் சலித்துப் போன அவனுக்கு இப்போது தமிழில் மனம்விட்டுப் பேச ஒரு துணை கிடைத்து விட்டதல்லவா!

இப்படி இருக்கையில் ஒரு நாள் திடீரென்று கண்ணீரும் கம்பலையுமாகக் கையில் ஒரு தந்தியுடன் வந்து நின்றான் செல்லமுத்து. தஞ்சாவூர் ஜில்லாவில் ஒரு கிராமத்திலிருந்து வந்திருந்தது தந்தி. அவன் தாயார் மரணப் படுக்கையில் இருப்பதாகவும் உடனே புறப்படும் படியும் அதில் கண்டிருந்தது.

செல்லமுத்து உடனே ஊருக்குப் புறப்படத் துடிதுடித்தான். கோபாலனுக்கு நிலைமை தர்மசங்கடமாகப் போய்விட்டது. தலைமை அதிகாரி இல்லாத சமயம். ஒப்பந்தக் காலம் முடியும்வரையில் எந்தக் காரணத்தை முன்னிட்டும் வேலையாட்களை அனுப்பக் கூடாது என்று சட்டம் இருந்தது. ஆனால் கோபாலனுக்கு மனம் கேட்கவில்லை. வந்தது வரட்டும் என்று தன் கையிலிருந்த பணத்தையும் கொடுத்து அவனை ஊருக்கு அனுப்பி வைத்தான். பதினைந்து நாட்களுக்குள் எப்படியும் திரும்பி விடுவதாகக் கூறிவிட்டு விடை பெற்றுக் கொண்டான் செல்லமுத்து.

அப்படி விடைபெற்றுக் கொண்டவன் ஒரே போக்காக வராமல் போயிருக்கலாம். அல்லது சட்டத்தைக் காட்டி அவனைப் போக விடாமல் தடுத்திருக்கலாம். இருவரில் ஒருவராவது அப்படிச் செய்திருந்தால் கோபாலன் இன்று கையில் குழந்தையுடன் மயங்க வேண்டிய நிலை வந்திருக்காது!

பனிக்கால ஆரம்பத்தில் திடீரென்று அந்தப் பிராந்தியத்தில் மலேரியா ஜுரம் பரவலாயிற்று. தொழிலாளிகளில் எத்தனையோ பேர் அதற்கு இரையாயினர்.

கோபாலனையும் தாக்கியது நோய். படுத்த படுக்கையாகி விட்டான். அவன் மனம் பலவாறு சஞ்சலப்பட்டது. செல்லமுத்து இந்தச் சமயத்திலா போக வேண்டும் என்று அவன் வருத்தப்பட்டான்.

குறித்த கெடு தவறாமல் செல்லமுத்து வரத்தான் செய்தான். ஆனால் கூட ஒரு இளம் பெண்ணையும் கூட்டிக் கொண்டு வந்திருந்தான். கோபாலனுக்குக் கோபம் கோபமாக வந்தது. 'உலைக்களத்தில் உல்லாச வாழ்வா!' என்று பொருமியது அவன் உள்ளம். காரணமில்லாமல் அவனைக் கடிந்து பேசினான்.

"என்ன ஐயா பண்ணறது! நான் போறதுக்குள்ளே அம்மா போயிட்டா. அவள் போனப்புறம் அஞ்சலையை எப்படி நான் அநாதரவாக விட்டுட்டு வர முடியும்! என்னையே மனசிலே நினைச்சிக்கிட்டு இருந்தவள்; என் கூடத்தானே இருக்கணும்! அதுதான் கல்யாணத்தைப் பண்ணி அழைச்சுக்கிட்டே வந்துட்டேன்!" என்றான் செல்லமுத்து.

கோபாலனால் பதில் பேச முடிய வில்லை!

நாளும் பொழுதும் கழிந்து கொண்டேயிருந்தன. வந்ததும் வராததுமாக வெறுக்க வெறுக்கப் பேசியும் அஞ்சலை அவனிடம் எவ்வளவு அன்போடு நடந்து கொண்டாள்! செல்லமுத்துகூடத் தன் மனைவி இரவெல்லாம் கண் விழித்து நோயால் வாடிக் கொண்டிருக்கும் கோபாலனுக்குப் பணிவிடை செய்வதில் எவ்வித விகல்பமும் எண்ண வில்லையே! கோபாலன் பிழைத்து எழுந்தான்.

ஒரு வருடம் ஓடி மறைந்தது. எங்கிருந்தோ வந்த கொடிய மலேரியா செல்லமுத்துவையும் அஞ்சலையையும் அள்ளிக் கொண்டு போய் விட்டது! ஆனால் அவர்கள் இன்பத்தின் எதிரொலியாகச் சின்னஞ் சிறு மதலை ஒன்று தனித்து நின்றது.

"தாயின் சாவிலே மலர்ந்த அந்தப் பசலைக்கு இனி யார் புகல்!...... ஏன் நானும் இந்த நிலையில்தானே பிறந்தேன்! என்னை ஒரு பரமாத்மா ஆளாக்கி அன்பு செலுத்தவில்லையா!"

மறுகணமே உள் ஒளி பெற்றவனைப் போல குழந்தையை வாரி எடுத்து அணைத்துக் கொண்டான் கோபாலன்.

எங்கு பார்த்தாலும் ஒரே கோலாகல மயமாக இருந்தது. சந்தோஷ ஆரவாரத்துக் கிடையில் தலைவர் அணையைத் திறந்து வைத்தார். தண்ணீர் நுங்கும் நுரையுமாகச் சுழித்துப் புரண்டது. எங்கும் ஒரே மகிழ்ச்சி வெள்ளம்.

கோபாலன் ஒரு மூலையில் நின்று கொண்டு ஆனந்தக் கண்ணீர் உகுத்தான்.

விழா இனிது முடிந்தது.

அன்று இரவே மாமா ரங்கநாதனுக்குக் குழந்தையைப் பற்றிய பூரா விவரத்தோடு ஒரு நீண்ட கடிதம் எழுதிவிட்டு மறுநாள் காலையில் புறப்பட்டான் கோபாலன்!

கோபாலன் சென்னையை நோக்கி எவ்வளவு ஆவலுடன் வந்து கொண்டிருந்தான் என்று சொல்லத் தேவை இல்லை. எண்ணத்திலே ஒரே நோக்கம்; இதயத்திலே ஒரே துடிப்பு—எல்லாம் 'பவானி, பவானி' என்று!

மூன்றும் நாள் காலையில் சென்னையில் வந்து இறங்கியபொழுது விவரிக்க வொண்ணாத சோகத்துடன் அவனை எதிர் கொண்டழைக்க வந்திருந்தார் ரங்கநாதன்! மருமகனைக் கண்டதும் புன்முறுவல் பூக்க முயன்றார்; ஆனால் அழுகைதான் பீறிட்டுக் கொண்டு வந்தது.

கோபாலனுக்கு ஆகாயமே உருண்டு தலையில் பெய்வது போல் இருந்தது. "எங்கே மாமா, பவானி!" என்று ஆவலுடன் அவரைத் தழுவிய வண்ணம் கேட்டான். ரங்கநாதன் தழுதழுத்தார். கோபாலனோ கணப் பொழுதுக்குள் பவானியைப் பற்றி ஆயிரம் கேள்விகளை அள்ளி வீசிவிட்டான். ஒன்றுக்காவது பதில்வரவில்லை.

வீட்டுக்குள் வந்ததும் அடக்க முடியாமல், "எங்கே மாமா, பவானி! ஏன் பேசாமல் என்னைக் கொல்கிறீர்கள்!" என்றவன் பயங்கரமாக அவர் முகம் மாறுவதைக் கண்டதும் 'ஐயோ, பவானி!' என்று வெறிகொண்டவனைப் போலக் கூச்சலிட்டு விட்டான்.

"அத்...தான்!.......அத்தான்!......."—சன்னல் வரத்தில் மாடியிலிருந்து அவனை அழைத்தது பவானியின் குரல்! நெஞ்சு துடிதுடிக்க மாடிக்கு ஓடினான்.

"அற்புதம், அற்புதம்!" என்று வருணிப்பானே அந்த அழகி, அவன் பவானி காச நோயால் கருகி, உருமாறிப் படுக்கையில் பிதற்றிக் கொண்டிருந்தாள்!

"ஐயோ பவானி!.......என்ன கொடுமைக்கு ஆளாகி விட்டேன்! இந்தப் பாவியின் பராமுகமல்லவா உன்னை இந்தக் கதிக்குக் கொண்டு வந்து விட்டது!" என்று கதறினான்.

கண்களில் ஒரு புதிய ஒளியுடன் அத்தானை மிரள மிரளப் பார்த்த பவானி, "எங்கே...... அத்தான் .... நீங்கள் கொண்டு வந்த...... குழந்தை!" என்று தேம்பினாள்.

"இதோ அக்கா! இந்தா குழந்தை!" என்ற வண்ணம் கிட்ட வந்தாள் தங்கை கமலா.

"என்ன வேணும் பவானி!... சொல்லு இந்தப் பாவியிடம்..." என்று கண்ணீர் பெருகக் கேட்டான் கோபாலன்.

பவானி பேச வில்லை. அவன் முகத்தையே ஆவலுடன் கொஞ்ச நேரம் பார்த்துப் பருகி விட்டு, தூரத்திலிருந்த தொட்டிலைக் கையால் சுட்டிக் காண்பித்தாள். எல்லோருடைய பார்வையும் ஏககாலத்தில் தொட்டிலின் மேல் பாய்ந்து சென்றது. ஆனால் கோபாலன் கண்களில், அதற்கு மேலே தூசியடைந்து மெருகு மங்கிய பொம்மைக் கிளி ஒன்று காற்றில் ஊசலாடுவது பட்டது.


பவானியின் விருப்பப்படி குழந்தையைத் தொட்டிலில் இட்டு ஆட்டினார்கள். அத்தானின் கைகளை இறுகப் பற்றியவண்ணம் "பார்த்தீர்களா அத்தான், அந்தக் கிளி எவ்வளவு சந்தோஷத்துடன் ஆடுகிறது!" என்றவள் "இனிமேல்..." என்று இழுத்தாள்.

"இனிமே...... !"

"இனிமே...அந்தக் கிளிதான்...சந்தோஷமா பறந்து போயிடலாம்; இல்லையா அத்தான்!"

அவ்வளவுதான்! பவானியின் தலை கீழே சாய்ந்தது. இதயத்தில் தாபத்துடன் காத்துக் கொண்டிருந்த அந்தப் பெண் கிளி, நிம்மதியுடன் வான வெளியில் இன்ப கீதம் பாடிக் கொண்டே எம்பிப் பறந்து சென்றது!


நாடும் நேரமும்



. . . தொழிற்சாலைகளில்

வினாடிவரை நேரத்தில் கவனிப்பு வைக்க வேண்டியது அத்தியாவசியம்

இயற்கைச் செல்வத்தால் முன்னேறிச் செல்லும் நம் நாடு தொழிலைப் பெருக்குவதிலும், அபிவிருத்தி செய்வதிலும் ஈடுபட்டிருக்கிறது. இதன் நோக்கம் வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குவதற்கு மட்டுமல்ல. மேலும் நம் நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதற்கும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குமே யாகும்.



பட்டறை, மில் அல்லது தொழிற்சாலை இவைகளில் நேரக் கண்காணிப்பு மிகவும் அவசியம். ஏனெனில் தொழிற்சாலை ஸ்தாபனங்களின் வெற்றி கடுமையான நேரக் கண்காணிப்பில்தான் இருக்கிறது. இதற்கு ஸ்விஸ் ஜீவல்ட்-லீவர் கடிகாரம் ஒரு சிறந்த வழிகாட்டியாகும்.

ஸ்விஸ் ஜுவல்ட்-லீவர் கடிகாரம் தான் நீங்கள் செலவு செய்யும் பணத்திற்குச் சரியான பெறுமானம்

ஸ்விட்ஸர்லாந்து கடிகாரத்தயாரிப்பாளர்கள்



காலக் கூடு

மித்ரா

தெருவிலிருந்து பார்த்துள்ள அந்த மாடி வீடு பார்வைக்கு அழகாகத் தான் இருந்தது. வாசலில் 'வீடு வாடகைக்கு விடப்படும்' என்றும் பலகை தொங்கியது.

அதில் ஏறியிருந்த புழுதி அது வெகு காலமாகத் தொங்கிக் கொண்டிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டியது. எழுத்துக்கள் மங்கலாகத் தெரிந்தாலும் கறுப்புப் பலகையாக இருந்ததால் எழுத்துக்கள் அந்தப் புழுதிப் படலத்தினிடையே ஓரளவு அதில் தெரியத்தான் செய்தன.

"இந்த வீட்டில் வருஷக்கணக்காக யாரும் குடியில்லே போலிருக்கே!" என்றாள் பத்மினி.

"வீடு உனக்குப் பிடித்திருக்கிறதல்லவா!"

"பட்சிகள் சம்சாரம் வேறு நடக்கிறது!" என்றாள் பத்மினி, அந்த வீட்டில் கட்டியிருக்கும் காலைந்து சிட்டுக் குருவிக் கூடுகளைப் பார்த்து விட்டு.

"ஒருவேளை இந்த வீட்டுக்காரர் அவைகளை வளர்க்கிறாரோ, என்னவோ!" என்றான் ராமகிருஷ்ணன்.

"வீடு நன்றாகத்தான் இருக்கிறது. இந்தக் குருவிக்கூடுகள் இல்லாமலிருந்தால் நன்றாக இருக்கும்" என்று தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்தாள் பத்மினி.

"வீட்டைச் சுத்தம் செய்து வெள்ளை யடிக்கும்போதே சிட்டுக் குருவிகளெல்லாம் போய் விடும். நாம் குடிவந்த பிறகு அவை இங்கே இருக்கவே இருக்காது, பார்!" என்றான் ராமகிருஷ்ணன்.

அந்தச் சதிபதிகளின் பேச்சில் குறுக்கிடாமல் மௌனமாக இருந்தார் வீட்டுச் சொந்தக்காரரான அந்தப் பெரியவர். வீடு முழுவதும் வாசலிலிருந்து தோட்டம் வரையில் பார்த்துவிட்டு அந்தத் தம்பதிகள் மாடியில் அவருடைய அறைக்கு வந்தனர்.

"வீடு பிடித்திருக்கிறது எங்களுக்கு. வீட்டைச் சுத்தம் செய்து வெள்ளையடித்துக் கொடுத்து விடுங்கள். நாளைய மறுநாள் குடி வந்துவிடுகிறோம். அன்றுதான் நாள் நன்றாக இருக்கிறது" என்றான் ராமகிருஷ்ணன்.

"ஒரு மாச வாடகையை முன்பணமாகக் கொடுத்தால் போதும். மாடியில் உள்ள இந்த ஒரு அறை தவிர மற்றவைகளையெல்லாம் நீங்கள் புழங்கலாம். வாடகை ரொம்பக் குறைவாகவே சொல்லுகிறேன். மாதம் ஒன்றுக்கு முப்பது ரூபாய்தான்" என்றார் கிழவர்.

"முப்பது ரூபாய்தான்" என்று கிழவர் கூறியதைக் கேட்டு ராமகிருஷ்ணனும் பத்மினியும் ஆச்சரியமடைந்தனர்.

"உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறதல்லவா! இதுவே அதிக வாடகை என்பது என்னுடைய எண்ணம். ஒரு காலத்தில் நானும் பண ஆசை பிடித்துத் திரிந்திருக்கிறேன். நிறையச் சொத்தும், பணமும் சேர்க்க வேண்டுமென்று கல் நெஞ்சனாக இருந்தேன்!..." என்று இன்னும் ஏதோ சொல்ல வாயெடுத்தார் கிழவர். ஆனால் சட்டென்று அடக்கிக் கொண்டு விட்டார்.

அவர்தான் அடக்கிக் கொண்டாரோ, அல்லது துக்கம்தான் அவர் தொண்டையை அடைத்ததோ, தெரியவில்லை. கண்கள் மட்டும் இரண்டு சொட்டுக் கண்ணீரைச் சிந்தின.

ராமகிருஷ்ணன் மூன்று பத்து ரூபாய் நோட்டுகளை எடுத்து அவரிடம் கொடுத்தான். கிழவர் அந்த நோட்டுகளை வாங்கிக் கொண்டு, "நாளை சாயந்திரம் வந்து பாருங்கள், வீடு பளபளவென்று மின்னுகிறதா இல்லையா என்று தெரியும்" என்று கூறி அவர்களுக்குக் கை கூப்பி விடையளித்தார்.

* * *

அன்று நல்ல வேளை பார்த்து விடியற்காலையில் அந்த இளம் தம்பதிகள் இருவரும் அந்த மாடி வீட்டில் குடி வந்தனர். கிழவர் குறிப்பிட்டபடி காலை ஐந்தரை மணிக்கெல்லாம் பால் காய்ச்சிச் சாப்பிட்டனர்.

ராமகிருஷ்ணன் வருமான வரி ஆபீசராகச் சம்பத்தில்தான் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்தான். அவன் முதன் முதலாகப் பதவியேற்றுக் கொள்ளுவது அந்த ஊரில்தான்.

அந்த இளைஞனுக்கு ஏற்ற இளம் மனைவி தான் பத்மினி. அவர்கள் இருவரும் இன்ப வாழ்க்கை நடத்துவதை மாடியிலிருந்தே பார்த்துப் பரவசமடைவார் அந்தக் கிழவர்.

அப்பொழுதெல்லாம் ஆழ்ந்த பெருமூச்சு ஒன்று அவரை யறியாமலே வெளிப்படும். "பாவி நான். என் மக்கள் இம்மாதிரி வாழ்வு வாழ்வதைப் பார்க்கக் கொடுத்து வைக்காமல் போய்விட்டதே. இருக்க வேண்டியவர்கள் போய், போகவேண்டிய நான் இன்னும் இவ்வுலகில் இருக்கிறேனே!" என்றெல்லாம் எண்ணி வருத்தமடைவார்.

அதனால்தானோ என்னவோ அந்தப் பெரியவருக்கு ராமகிருஷ்ணனிடமும் பத்மினியிடமும் அவரை யறியாமலே ஒரு அலாதி அன்பு ஏற்பட்டுவிட்டது.

ஒருநாள் நடு ஹாலில் ஒரு சோபாவில் உட்கார்ந்து அன்றையக் காலைப் பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தான் ராமகிருஷ்ணன். அவனுக்கு அருகில் தரையில் உட்கார்ந்து கொண்டு, பின்னல் நூலால் பிறக்கப்போகும் தனது குமாரனுக்குக் குல்லாய் பின்னிக் கொண்டிருந்தாள் பத்மினி.

அப்பொழுது 'விர்'ரென்று ஒரு சிட்டுக்குருவி பறந்து வந்து பத்மினியின் பக்கத்தில் இருந்த சிறிய நூல் கண்டைத் தன் மூக்கால் கொத்தி எடுத்துக்கொண்டு தன் கூட்டுக்குப் பறந்து சென்று விட்டது.

அதைப் பார்த்தவுடன் பத்மினிக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது. "இந்தக் குருவிகளின் தொல்லை சகிக்க முடியவில்லை. வாடகை குறைவாக இருக்கிறதென்று இந்தப் பாழும் வீடுதானே நமக்கு அகப்பட்டது! இந்தக் குருவிகள் செய்யும் அசுத்தத்தைப் பெருக்கத்தான் ஒரு ஆளுக்குப் பொழுது சரியாக இருக்கிறது. வேறு வீடு பார்த்து வீட்டு மறு வேலை பாருங்கள்" என்று தன் கணவனைக் கடிந்து கொண்டாள்.

பத்மினியின் கோபத்தைப் பார்த்து ராமகிருஷ்ணன் கலகலவென்று சிரித்தான். "அடி அசடே! நீ வரப் போகும் உன் பயலுக்குக் குல்லாய் தைப்பதைப் பார்த்துவிட்டு அதுவும் அப்படிச் செய்ய ஆசைப்பட்டு விட்டதுபோலும்" என்றான்.

"முதலில் அந்தக் கூடுகளையெல்லாம் ஒரு கோலால் கலையுங்கள். அந்தச் சனியனெல்லாம் இதைவிட்டு ஒழியட்டும்" என்று ஆத்திரத்துடன் கத்தினாள்.

"அற்ப விஷயத்துக்கெல்லாம் ஆத்திரப் படாதே! வேறு நூல் கண்டு வாங்கி வரச் சொல்லேன். அந்தக் குருவிகளைப் பார். ஜோடி ஜோடியாக எப்படிக் கவலையின்றிக் குடும்பம் நடத்துகின்றன! கல்யாணம் ஆன புதிதில் நாம் எப்படி எப்படியெல்லாம் இருந்தோம்!" என்று சொல்லி அவள் கோபத்தைத் தணித்தான் ராமகிருஷ்ணன்.

ராமகிருஷ்ணனின் வார்த்தைகளினால் பத்மினி ஆத்திரம் அடங்கி, கல்யாணம் ஆன புதிதில் தானும் தன் கணவனும் சிறகில்லாப் பறவைகளைப்போல் கனவு உலகில் சஞ்சரித்ததை நினைத்துக் கொண்டாள். அப்பொழுது அவள் மனம் எல்லையில்லாத மகிழ்ச்சியடையத் தொடங்கியது.

* * *

இதுவரையில் அந்த வீட்டில் எத்தனையோ பேர் குடியிருந்திருக்கிறார்கள். ஆனால் ஒருவராவது பத்துநாட்களுக்குமேல் இருந்தது கிடையாது. ஆனால் ராமகிருஷ்ணன் தம்பதிகளோ அந்த வீட்டில் பல மாதங்களாகக் குடியிருந்து வருகிறார்கள்.

ஒருநாள் பத்மினியும் அவள் கணவனும் ஆங்கிலப் படம் பார்ப்பதற்காக அருகில் இருந்த தியேட்டருக்குக் காலை ஆட்டத்துக்குப் போயிருந்தார்கள். படம் பார்த்து விட்டு அவர்கள் திரும்பி வரும் பொழுது வீட்டுக்காரக் கிழவர் வீட்டின் நடு ஹாலில் சிட்டுக் குருவிகளுக்கெல்லாம் உணவளித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்.

ஒரு தட்டில் சாதம் வைத்துத் தரையில்



வைத்திருந்தார். அதன் பக்கத்தில் ஒரு கோப்பையில் தண்ணீர் வைத்திருந்தார். தட்டைச் சுற்றிலும் சிட்டுக் குருவிகள் உட்கார்ந்து கொண்டு ஆனந்தமாக உணவு அருந்திக் கொண்டிருந்தன.

இரண்டொன்று கோப்பையில் உள்ள தண்ணீரைத் தங்களுடைய சின்னஞ்சிறு அலகினால் உறிஞ்சிக் குடித்துக் கொண்டிருந்தன. இன்னும் சில கூடுகளிலுள்ள தங்கள் குஞ்சுகளுக்கும் உணவு எடுத்துக் கொண்டு போய்க் கொடுத்துவிட்டு வந்து கொண்டிருந்தன.

இவைகளை யெல்லாம் அருகில் உள்ள சோபாவில் அமர்ந்தவாறு கிழவர் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தார். வாசற்படியில் நின்றவாறு இளம் தம்பதிகளும் அந்தக் காட்சியைக் கண்டு களித்துக் கொண்டிருந்தனர்.

"பேஷ்! டீ பார்ட்டி நடக்கிறாப் போல இருக்கு!" என்று சொல்லிப் பலமாகச் சிரித்தான் ராமகிருஷ்ணன்.

"தாத்தாவுக்காகவே இந்தப் பட்சிக் குடும்பங்கள் வாழ்கிறாப்போல இருக்கு!" என்று பத்மினியும் சிரித்துக் கொண்டே கூறினாள்.

"ஆமாம், அம்மா! நான் செய்த பாவங்களுக்கும், தவறுகளுக்கும் இப்படிப் பிராயச்சித்தம் செய்து கொள்ளுகிறேன்" என்றார் கிழவர்.

அதற்கு மறுநாள் பத்மினி தன் தாய் வீட்டுக்குப் போய்விட்டாள், பிள்ளைப் பேறுக்காக. அடுத்து இரண்டு மூன்று மாதங்கள் கிழவர் அவ்வளவு பெரிய வீட்டில் தம்முடைய பட்சி சம்சாரங்களுடன் தான் வாழ்க்கை நடத்திக் கொண்டு வந்தார்.

ராமகிருஷ்ணன் காலையில் ஆபீசுக்குப் போய் விட்டால், விளக்கு வைத்துத்தான் வீடு திரும்புவான். அதனால் கிழவர் சிட்டுக் குருவிகளின் குடும்பத்துக்குத் தினந்தோறும் இடையூறு இல்லாமல் உணவளிக்க முடிந்தது.

தாய் வீட்டுக்குச் சென்ற பத்மினி மூன்று மாதங்களுக்குப் பிறகு சொர்ண விக்கிரகம் போன்ற ஒரு குழந்தையைப் பெற்றெடுத்துக்கொண்டு வந்து சேர்ந்தாள். அவள் திரும்பி வந்ததும் வராததுமாகப் பட்சிகளின் சம்சாரமும் பெருகியிருப்பதைக் கண்டாள்.



ஒவ்வொரு கூட்டிலிருந்தும் குஞ்சுக் குருவிகளின் 'குளு குளு' சத்தம் வெகு இனிமையாகக் கேட்டது. அதைக் காது கொடுத்துக் கவனித்து விட்டுப் பத்மினி தன் மடியிலுள்ள குழந்தையை ஆசையுடன் முத்தமிட்டாள். "போக்கிரிப் பயலே! நீ வரும்போதே விளையாடுவதற்கு என்று குருவிக் குஞ்சுகளையும் அழைத்து வந்து விட்டாயா!" என்றாள்.

ஒருநாள் கூடத்து ஹாலில் வெல்வெட்டு மெத்தையில் குழந்தையைக் கொண்டு வந்து படுக்க வைத்தாள். கையோடு சின்னஞ் சிறிய வெள்ளி மைக்கூடும் குழந்தைக்கு மையிடுவதற்காகக் கொண்டு வந்திருந்தாள். அதைப் பக்கத்தில் வைத்து விட்டுக் குழந்தைக்குப் பவுடர் பூசப் பவுடர் டப்பாவை எடுத்து வருவதற்காக உள்ளே சென்றாள்.

அவள் திரும்பி வந்து பார்க்கும்போது மைக்கூட்டைக் காணவில்லை. அவளுக்குக் கோபம் கோபமாக வந்தது. அந்தக் குருவிக் கூடுகளை யெல்லாம் பிய்த்தெறிந்து விட வேண்டும் என்கிற ஆத்திரம்கூட அவளுக்கு உண்டாயிற்று.

அவளுடைய ஆசைக் குமாரனின் மைக்கூட்டை எடுத்துச் சென்றால் அவளுக்கு ஆத்திரம் வராமல் இருக்குமா! அன்று மாலை ஆபீஸ் சேவகனை



அழைத்து அந்தக் குருவிக் கூடுகளை யெல்லாம் பிய்த்து எறியும்படி உத்தரவு இட்டுவிட்டாள்.

எஜமானரின் மனைவி எஜமானியாயிற்றே. அவளுடைய உத்தரவை அவனால் எப்படித் தட்ட முடியும்! அதனால் சேவகன் ஒரு உயரமான ஏணி கொண்டு வந்து சுவரில் சாத்தி உயரவும் ஏறிவிட்டான்.

சொல்லிவைத்தாற்போல் அந்த நேரத்தில் வெளியே போயிருந்த அந்தக் கிழவரும், ராமகிருஷ்ணனும் ஒன்றாக உள்ளே நுழைந்தார்கள். அதைப் பார்த்துவிட்டு இருவரும் ஏககாலத்தில், "அடேடே! குருவிக் கூட்டைக் கலைக்காதே, பாவம்!" என்று கூவினார்கள்.

தங்கள் கூடுகளை நோக்கி ஒருவன் வருவதைப் பார்த்துவிட்டுக் குருவிகள் எல்லாம் 'கிரீச், கிரீச்' என்று பயத்தினால் அலறித் துடித்தன. அந்த ஹால் முழுவதும் ஒரே வேதனைக் குரலும் அபயக் குரலும்தான் கேட்டன. அதைக் கேட்டு அந்தக் கிழவர் தம் காதுகளைப் பொத்திக் கொண்டார்.

உயரே ஏறினவன் ஒரு கூண்டினுள் பத்திரமாக வைக்கப்பட்டிருந்த வெள்ளி மைக் கூட்டை மட்டும் எடுத்துக் கொண்டு கீழே இறங்கி வந்தான். "ஒரே முட்டைகளும் குஞ்சுகளுமாக இருக்கு அம்மா. எப்படியம்மா கூட்டைக் கலைக்கிறது!" என்று கேட்டான் அவன் அனுதாபத்துடன்.

"மிஸ்டர் ராமகிருஷ்ணன்! விவரந் தெரியாத நாளில் ஒரு குருவிக் கூட்டையும் அதுவும் போதாதென்று வினைத் தெரிந்து ஒரு வாழ்க்கைக் கூண்டையும் கலைத்த பாவி நான். அதன் பலனை நான் கைமேல் அனுபவித்து விட்டேன்" என்று ஆரம்பித்தார் கிழவர்.

"அது என்ன விவரம் சொல்லுங்கள். இக் குருவிகளின்மேல் பத்மினிக்கு உள்ள கோபமாவது மாறட்டும்" என்றான் ராமகிருஷ்ணன்.

கிழவர் அந்தக் கதையைச் சொல்லலானார்:

"நான் சிறுவனாக இருந்து வேடிக்கையும் விஷமமுமாக விளையாடும்போது எங்கள் வீட்டுத் தோட்டத்தில் ஒரு கொய்யாச் செடியில் ஒரு சிட்டுக் குருவி அழகிய கூடு ஒன்று கட்டியிருந்தது.

கூட்டின் பின் பக்கமாக நுழைந்து வருவதற்கும் முன் பக்கமாகத் தலையை மட்டும் நீட்டி வெளியே பார்ப்பதற்கும் வசதியாக அது கூடு கட்டியிருந்தது. காற்றில் கொய்யாக் கிளை அசைந்தாடும்பொழுது சிட்டுக் குருவியின் அந்தச் சிங்காரக் கூடும் ஒய்யாரமாக ஊஞ்சலாடுவது போல் ஆடும். ஆகா! அதுதான் எவ்வளவு அழகாக இருக்கும், தெரியுமா!

காற்றில் ஊசலாடும் அந்தக் கிளை முறிந்து விழுந்தால் அந்தக் கூடு என்ன ஆவது! விஷமக்காரச் சிறுவர்கள் அந்தக் கூட்டைப் பிய்த்து எறிந்து விட்டால் அதன் கதி என்ன! சிட்டுக் குருவி அதைப் பற்றிச் சிறிதுகூடக் கவலைப் பட்டதாகவே தெரியவில்லை.

ஒருநாள் அந்தக் கூட்டினுள் என்ன இருக்கிறது என்று பார்ப்பதற்காகக் கொய்யாச் செடியண்டை சென்றேன். என்னைக் கண்டதும் குருவி ஓடியே போய் விட்டது! கூட்டினுள் ஐந்தாறு முட்டைகள் வெள்ளை வெளேரென்று அழகாக இருந்தன.

விஷமமே நிறைந்த நான் பாவ புண்ணியங்களைப் பற்றிச் சிறிதும் சிந்தித்துப் பார்க்காமல் கொய்யாக்கிளையிலிருந்த அந்தக் கூட்டைப் பிய்த்து எறிந்தேன். அதனுள்ளிருந்த அந்த முட்டைகளெல்லாம் கீழே விழுந்து உடைந்தன. அதைப் பார்த்து வேடிக்கையாகச் சிரித்தேன் நான்.

ஆனால் சிட்டுக்குருவியோ நாசமாக்கப்பட்ட தன் முட்டைகளைச் சுற்றிச் சுற்றி வந்து அலறித் துடித்தது. அதைப் பார்த்துச் சிரித்து மகிழ்ந்தேன்! காலதேவன் என்னைப் பார்த்து மறைமுகமாகச் சிரிப்பதை அப்பொழுது நான் உணரவேயில்லை!

உங்களைப்போல் கணவனும் மனைவியுமாக இன்ப வாழ்க்கை நடத்துகையில் வீட்டின் கூரையில் கட்டியிருந்த சிட்டுக் குருவியின் கூட்டைக் கோலால் கலைத்துத் தள்ளி யிருக்கிறேன். என் மனைவி எவ்வளவோ தடுத்தும் கேளாமல் பிய்த்து எறிந்தேன்.

இதெல்லாம் முப்பது வருஷங்களுக்கு முன்பு நடந்த கதை. அதற்குப் பிறகு ஒரு இளம் தம்பதிகளின் வாழ்க்கைக் கூட்டையே கலைத்து விட்டேன். பணத்திமிரில், பணம் மேலும் மேலும் சேர்க்க வேண்டும் என்கிற ஆவலில் பாப மூட்டைகளைக் கட்டிச் சுமந்தேன்.

அது இன்றைக்குப் பதினெட்டு வருஷங்களுக்கு முன்பு நடந்தது. நானும் ராமநாதனும் நெருங்கிய நண்பர்கள். அவனுக்குக் கல்யாணமாகி ஒன்றரை வயதில் ஒரு பெண் குழந்தையும் இருந்தது.

ராமநாதனுக்குச் சுமாரான சொத்துக்கள் இருந்தன. என்னுடைய நிலங்களுக்குப் பக்கத்தில் நிலமும், ஒரு வீடும் இருந்தன. எனக்கு எப்பொழுதுமே அந்த நிலங்களின்மீது ஒரு கண் இருந்தது.

நான் எதிர்பார்த்தபடி ராமநாதன் என்னிடம் கடன் வாங்க ஆரம்பித்தான். ஏராளமான கடனையும் அதிக வட்டியையும் சேர்த்து ஒரே நாளில் அவன் சொத்துக்களைக் கைப்பற்றிக் கொண்டு விடவேண்டும் என்று தீர்மானித்தேன்.

அதற்கான தக்க சமயத்தையும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். திடீரென்று ஒருநாள் அசலையும் வட்டியையும் கொடுக்குமாறு வற்புறுத்தினேன். அவன் என்ன செய்வான்! பணம் கட்ட முடியாமல் திணறினான்.

நான் ராமநாதனைக் கூப்பிட்டனுப்பிக் கடன் முழுவதற்கும் அவன் சொத்து பூராவையும் ஒப்புக் கொடுக்கும்படி கேட்டேன். அப்பொழுது எங்கள் இருவருக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டது. ராமநாதன் நிலங்களை என்னிடம் ஒப்புக் கொடுக்க முடியாதென்று சொல்லி விட்டுப் போய் விட்டான்.

எனக்கு அனாவசியமாக அவன் மீது வன்மம் வளர்ந்தது. ஒருகுறிப்பிட்ட தொகைக்கு அவன் சொத்து முழுவதையும் ஜப்தி செய்து ஒப்புதல் செய்து கொண்டேன். மிச்சத் தொகைக்கு அவனை 'வாரண்டி'ல் பிடித்துக் கொண்டு போய் சிவில் ஜெயிலில் தள்ளினேன்.

ராமநாதன் தம்பதிகளின் வாழ்க்கைக் கூண்டைக் கலைத்து விட்டேன்! தாய் வீட்டுக்குச் சென்ற அவன் மனைவியும் குழந்தையும் என்ன ஆனார்களோ, தெரியாது!

நான் செய்த அக்கிரமத்துக்குக் கடவுள் வெகு காலத்துக்குப் பிறகுதான் என்னைத் தண்டித்தான். உங்களைப் போல் நாலைந்து மாப்



ஒருவர் :— இப்படியே இருந்து சொந்தமாக ஒரு வீட்டைக் கட்டி விட்டீர்களே !

மற்றவர் :—கட்டி விட்டேனா? அதுக்கு முன்னாலே எவ்வளவு கட்டுக் கட்டி இருக்கிறேன், தெரியுமா? வயிற்றைக் கட்டி, வாயைக் கட்டி, ஆபீஸுக்கு நடையைக் கட்டி, பாங்கில் பணத்தைக் கட்டிப் பிறகு அல்லவா இந்த வீட்டை நான் கட்டியிருக்கிறேன் !

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

பிள்ளைகளும், மருமகள்களுமாக இருக்க வேண்டிய இந்த வீட்டில் நான் ஒருவன்தான் இப்பொழுது இருக்கிறேன்'' என்று சொல்லி நிறுத்தினார். கிழவரின் கண்களில் கண்ணீர் நிறைந்திருந்தது.

"ஏன் ! உங்கள் பெண், பிள்ளைகள் எல்லாம் என்ன ஆனார்கள் !'' என்று கேட்டான் ராமகிருஷ்ணன்.

"அவர்களை யெல்லாம் பக்கத்து ஊரில் நடந்த எங்கள் உறவினர் வீட்டுக் கல்யாணத்துக்கு அனுப்பி யிருந்தேன். அவர்கள் ஏறிச் சென்ற பஸ் கவிழ்ந்து என் குடும்பம் பூராவும் அழிந்து விட்டது. யாருக்காக இவ்வளவு சொத்துக்களும் சேர்த்தேனோ அவர்கள் எல்லோரும் போயே போய் விட்டார்கள் ! இனி மேல் இந்தச் சொத்துக்கள் எல்லாம் எனக்கு எதற்காக ! அதுமுதல் இந்தக் குருவிக் குடும்பங்களைத்தான் என் குடும்பமாக நினைத்துக் காப்பாற்றி வருகிறேன்'' என்று சொல்லிக் கதையை முடித்தார்.

அப்பொழுது தன் மனைவியின் பக்கம் திரும்பின ராமகிருஷ்ணன், அவள் கண்களிலிருந்து கண்ணீர் வழிவதைப் பார்த்து விட்டு, "தாத்தாவின் கதை அவ்வளவு உருக்கமாக இருக்கிறதா !'' என்று கேட்டான்.

"தாத்தா சொன்ன கதை எங்கள் குடும்பக் கதைதான்'' என்றாள் பத்மினி.

"என்ன !'' என்று ஆச்சரியத்துடன் கேட்டனர் ராமகிருஷ்ணனும் அந்தக் கிழவரும்.

"நான்தான் ராமநாதனின் பெண்'' என்று கூறினாள் பத்மினி.

கிழவர் ஒரு கணம் பேரதிர்ச்சியினால் திகைத்துப் போய் நின்று விட்டார். பிறகு "பத்மினி, குழந்தை! உன் குடும்பத்துக்கு நான் செய்த கெடுதல்களை யெல்லாம் மறந்து என்னை மன்னித்து விடு, அம்மா. நெடு நாட்களாகவே உங்களுக்குச் செய்த தீமைகளுக்கெல்லாம் உங்களில் யாரையாவது நேரில் சந்தித்து மன்னிப்புக் கேட்பதென்றுதான் இருந்தேன். பத்மினி! கடவுள்தான் உன்னை என்னிடம் அனுப்பி யிருக்கிறார். சிட்டுக் குருவி கட்டிய சிங்காரக் கூட்டை ஒரு தரம் கலைத்தேன். காலதேவன் கட்டிய ஒரு இளம் தம்பதிகளின் வாழ்க்கைக் கூட்டையும் சின்னாபின்னப்படுத்தினேன். 'அவன்' — நம்மை யெல்லாம் மறைமுகமாக ஆட்டிப் படைக்கும் கடவுள் — என் குடும்பக் கூட்டையே பிய்த்து எறிந்து விட்டான். 'மன்னித்தேன்' என்று ஒரு தரம் உன் வாயால் சொல்லு, அம்மா. அப்பொழுது தான் என் மனம் சாந்தி யடையும்...பத்மினி ! இப்பொழுது உன்னுடைய தகப்பனார் எங்கே இருக்கிறார் !'' என்றார் கிழவர் துயரம் நிறைந்த முகத்துடன்.

"சிறையிலிருந்து வந்தபிறகு என் தகப்பனார் நெடுநாள் உயிரோடு இல்லை'' என்றாள் பத்மினி விம்மலினிடையே.

"குழந்தை ! நீ என் பெண்ணுக்குச் சமம். உன் தகப்பன் என் பிராண சிநேகிதனாக இருந்தும் பண ஆசையால் நான் அவனை உயிரோடு வதைத்து விட்டேன். ஒரு குருவிக் குடும்பத்தை அழித்ததற்காக இன்று பல குடும்பங்களை ஆதரித்து வருகிறேன். அதுபோல் ஒரு காலக் கூட்டை அழித்ததற்கும் பிராயச்சித்தம் செய்து கொண்டுவிடுகிறேன்'' என்றார் கிழவர் கண்ணீர் பெருக்கினிடையே.

*　　　*　　　*

அன்று மாலை வீட்டை விட்டு வெளியே போனவர்தான். ஒரு வாரம் வரையில் அவரைப் பற்றி எவ்விதத் தகவலும் தெரியவில்லை. ஒருவேளை தற்கொலை செய்து கொண்டு விட்டாரோ என்றுகூட ராமகிருஷ்ணனும் பத்மினியும் சந்தேகப்பட்டனர்.

ஒரு வாரத்துக்குப் பிறகு பத்மினியின் பெயருக்கு ஒரு கடிதம் வந்திருந்தது. காசியிலிருந்து கிழவர்தான் எழுதி யிருந்தார். தன் சொத்துக்களுக்கெல்லாம் பத்மினியையே வாரிசாக நியமித்து உயில் எழுதி ரிஜிஸ்தர் செய்து வக்கீலிடம் கொடுத்து விட்டு வந்திருப்பதாகவும் அதை வாங்கிக் கொண்டு சொத்துக்களைச் சந்தோஷமாக அனுபவிக்கும்படியும் எழுதியிருந்தார். 'குருவிக் கூடுகளை மட்டும் எப்பொழுதும் கலைக்காதீர்கள்' என்றும் அவர் எழுதியிருந்தார்.

கிழவர் சொன்ன வாழ்க்கைக் கதையைக் கேட்ட பிறகு குருவிக் கூடுகளைக் கலைக்கப் பத்மினிக்குப் பைத்தியமா, என்ன !

இப்பொழுதெல்லாம் பத்மினி தன் செல்வக் குமாரனை இடுப்பில் வைத்துக் கொண்டு சாதம் ஊட்டும்பொழுது அந்தச் சிட்டுக் குருவிகளுக்கும் போடுகிறாள். அவை ஆனந்தமாக உண்பதைக் காட்டிக் காட்டித் தன் குழந்தைக்கும் ஊட்டுகிறாள்.



அடைமொழிகளெல்லாம்
அற்றுப்போய்விட்டன
நிர்கதியாய் நாங்கள் திணறுகிறோம். சோப்பைப் பற்றிய நல்ல விஷயங்கள் எல்லாம் சொல்லியாகி விட்டது. நாங்கள் சொல்ல வேண்டியதற்கு பாக்கி ஒன்றும் இல்லை— இருப்பினும் ஹமாம் சோப் நேர்த்தியானது, உண்மையிலேயே நல்ல சோப் என்பதை நாங்கள் கூற முடியும். அழுக்கைப் போக்குவதில் முதன்மை பெற்றது. ஸ்னானத்திற்குப் பின் ஒரு புதிய புத்துணர்ச்சியைத் தருவது. வாசனை உள்ளதா? ஹும்! இருக்கிறது. நுரை? ஏராளம். விலை? எல்லோராலும் யோசிக்காமல் வாங்க முடிவது.
HAMAM
TATA PRODUCT
டாடாவின்
ஹமாம்
டாய்லட் சோப்
டாடா ஆயில் மில்ஸ்.
இந்திய மூலதனத்துடன், இந்திய நிர்வாகத்தில், இந்தியாவிலேயே தயாரிக்கப்படுவது.
SISTA'S TOM-&-TAM.



பொய்யும் மெய்யும்

ரா. வீழிநாதன்

இரவு சீட்டாட்டம் முடியும் பொழுது மணி பன்னிரண்டு அடித்து விட்டது. வீட்டுக்கு வந்தால் வாசற் கதவு தாளிடப்பட்டிருந்தது. நேற்றும் இதே மாதிரித்தான் சீட்டாட்டத்தை முடித்துக் கொண்டு ஒரு மணிக்கு வீடு வந்து சேர்ந்தேன். 'நாளையிலிருந்து எந்த ராஜா எந்தப் பட்டணம் போனாலும் நேரங் கழித்து வருவதில்லை' என்று நான் நேற்று வாக்களித்த பின்தான் என்னுடைய மனைவி வாசற் கதவைத் திறந்து என்னை வீட்டுக்குள் நுழைய விட்டிருந்தாள்.

இந்தக் காலத்தில்தான் ராஜாக்கள் கிடையாதே! அந்தத் தைரியத்தில்தானே நான் அவளுக்கு அவ்வளவு தைரியமாக வாக்களித்தேன்!

ஆனால் இந்தத் துப்புக் கெட்ட சீட்டாட்ட நேரம் வந்ததும், ராஜாக்கள் இருக்கிறார்களே என்ற நினைவு வந்தது. இஸ்பேட் ராஜாவும் கிளாவர் ராஜாவும் ராஜாக்கள் தானே! இந்த இரண்டு ராஜாக்களும் என் வாக்குறுதியைக் காற்றில் பறக்க 'விட்டு விட்டனர். நான் என்ன செய்வேன்! நான் அளித்த வாக்குறுதியை எல்லாம் மறந்து சீட்டாட்டத்தில் லயித்து விட்டேன். அப்புறம் என்ன! சீட்டாட்டத்தில் சூடு பிடித்தபின் எனக்கு நேரம், பொழுது இவற்றின் நினைவு இருந்தால் தானே! கடிகாரம் தனக்குக் கொடுத்த வேலையைச் சரியாகச் செய்து கொண்டிருந்தது. மணி பன்னிரண்டு அடித்தபின்தான், முதல் நாள் நிகழ்ந்த நிகழ்ச்சியே இன்றும் நிகழ்ந்தால் என்ன செய்வது என்ற யோசனை உண்டாயிற்று. இன்று போய்க் கதவை இடித்தால் நேற்றுப் போல் சும்மா விடமாட்டாள். நாலு பேர் பார்த்து நகைக்கும்படியான நிலைமையை உண்டுபண்ணி விட்டுத்தான் அவள் மறு காரியம் பார்ப்பாள். அதனால் இந்த இக்கட்டிலிருந்து தப்ப என்னடா வழியென்று யோசனை செய்தேன். வழி வேறு என்ன இருக்க முடியும்! வீட்டுக் கதவை இடிக்கக் கூடாது. அவ்வளவுதானே! கதவு இடுக்கு வழியாகத் தாழ்ப்பாளைத் திறந்து விட்டால் போயிற்று! ஆனால் கை நுழைந்தால்தானே! கதவைத் திறக்க நான் எடுத்துக் கொண்ட சிரமங்கள் எல்லாம் பலன் அளிக்காமற் போகவே, கதவைப் பெயர்த்து வைத்துவிட்டால் என்ன என்று ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. பெயர்த்து வைப்பதென்றாலும் அதற்கான ஆயுதங்கள் வேண்டாமா!

கடைசியில் விளக்கு வைக்கும் பிறையில் கால் ஊன்றிக் கூரையில் ஏறுவது, பிறகு காதும் காதும் வைத்தாற்போல் முற்றத்தில் குதித்து விடுவது என்று முயற்சி செய்தேன். என் துரதிருஷ்டத்தை என்ன வென்று சொல்வது! கால்கள் கொஞ்சம் குட்டையாக இருந்துவிட்டன. இருந்தாலும் முயற்சியைக் கைவிடாமல் தெருவில் சுற்றி அரைச் செங்கல் முக்கால் செங்கலாகப் பொறுக்கி அடுக்கினேன். ஒரு சிறிய மேடையே தயார் செய்து விட்டேன் என்றால் அதிகம் சொல்ல வேண்டுமா! கடைசியில் ஒரு விதமாக ஏறிக் குதித்து நான் என் அறையை அடைந்தேன். அப்பொழுது மணி ஒன்றாகி விட்டது என்பதை அறிவிப்பான் வேண்டி மணிக்கூண்டு கடிகாரம் முழங்கியது.

ஓசைப்படுத்தாமல் குதிகால்களைத் தூக்கித் தூக்கி வைத்துத் திருடனைப்போல் மெதுவாக நடந்து படுக்கையை அடைந்தேன். மனைவி கண் விழித்துத் தூக்கக் கலக்கத்தில் 'திருடன், திருடன்!' என்று கூவி ஊரைக் கூட்டாமல் இருக்க வேண்டுமே என்று என் மார்பு அடித்துக் கொண்டது. வீட்டில் இருக்கும் பொழுது ஒரு உடை, வெளியில் போகும் பொழுது ஒரு உடை. இதுதானே இந்தக் காலத்து நாகரிகம்! அதே நாகரிகத்தைத் தான் நானும் அனுஷ்டித்து வந்தேன். ஆனால் அன்று நான் அணிந்திருந்த ஆடைகளை அகற்றி மாற்றுடை கூடத் தரித்துக் கொள்ளாமல் பூனைபோல் சென்று படுக்கையில் படுத்து விட்டேன். அப்புறம்தான் என்னால் நிம்மதியாக மூச்சுவிட முடிந்தது.

நான் படுத்து விட்டேன் என்பது தூங்கிக் கொண்டிருந்த என் மனைவிக்கு எப்படித்தான் குருவிக்கு மூக்கில் வியர்த்த கதையாக விளங்கியதோ, தெரியவில்லை! தன் படுக்கையிலிருந்து மெதுவாகத் தலையைத் தூக்கி, "வந்தது தான் வந்தீர்களே! ஆடைகளைக் களைந்து மாற்றுடை உடுத்திக் கொண்டு படுத்துக் கொள்ளக் கூடாது!" என்று கேட்டாள்.

அதைக் கேட்டதும் எனக்கு இருதயமே பக்கென்று நின்று விட்டது. மூன்றும் மாடியிலிருந்து ஒருவன் தலைகுப்புறக் கீழே விழுந்தால், எப்படி உடலும் உள்ளமும் பதறிப்போவான்! அதே நிலைமையைத் தான் அப்பொழுது நான் அடைந்தேன். நாக்குத் தடுமாறியது; குழறியது. என்ன சொல்வதென்றே தோன்றவில்லை. கடைசியில் மிகுந்த பிரயாசையுடன், "உப்ப்....அப்பா! உப்ப்....அப்பா!" என்றேன்.

என் மனைவி இதைக் கேட்டதும் எழுந்து உட்கார்ந்து விட்டாள். "என்ன விஷயம்! உங்களுக்கு என்ன செய்கிறது!" என்று கேட்டுக் கொண்டே அறையில் எரிந்து கொண்டிருந்த விடி விளக்கைப் பெரிசாக்கினாள். நான் முகத்தைக் கோணிக் கொண்டு முன்போலவே முனகலானேன். என் முனகலைக் கேட்டுக் கலவரமுற்றுப் போன அவள் என் அருகி

லேயே வந்து விட்டாள். பிறகு என் முகத்தை ஊன்றிக் கவனித்தவாறு, "ஏன் இப்படி முனகுகிறீர்கள்! உங்களுக்கு உடம்பை என்ன செய்கிறது!" என்று கேட்டாள்.

நான் குரலை மிக மிகத் தாழ்த்திக் கொண்டு, "எனக்கு ஜுரம் வந்து விட்டது. தலைவலி மண்டையைப் பிளக்கிறது. ஐயோ! என்ன செய்வேன்! அப்பப்பா!" என்றேன்.

உடனே என் மனைவி நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள். அப்புறம்தான் எனக்கு நான் பண்ணிய பிசகு நினைவு வந்தது. 'பாசாங்கு செய்வதென்று நினைத்தோமே! செய்யும் பாசாங்கைச் சரியான முறையில் செய்திருக்கக் கூடாது!' என்று மனம் வருந்தினேன். ஏனெனில் என் நெற்றியை விட அவள் கை சூடாக இருந்தது. நெற்றியைத் தொட்டுப் பார்த்தவள் நெற்றியோடு நிறுத்திக் கொண்டிருக்கக் கூடாதா! கையைத் தொட்டுப் பார்த்தாள்; கழுத்தைத் தொட்டுப் பார்த்தாள். என்ன தொட்டுப் பார்த்து என்ன! எங்கேயாவது ஜுரம் இருப்பதற்கு அறிகுறி தோன்றினால்தானே! "உங்களுக்கு ஜுரம் இப்பொழுது துளிக்கூட இல்லை. முன்னாடியும் இருந்திருக்கச் சிறிதும் நியாயம் இல்லை. அப்படியே ஜுரம் இருந்தாலும் இரவு ஒரு மணி வரைக்கும் எந்த வைத்தியரிடம் போய் வைத்தியம் செய்து கொண்டிருந்தீர்களாம்!" என்று கேட்டாள்.

"ஜுரம் இப்பொழுதுதான் விட்டிருக்கிறது. இத்தனை நேரமும் நான் அண்ணாமலையின் வீட்டில் படுத்திருந்தேன். பாவம்! அவன் என் தலையைப் பிடித்து விட்டுக் கொண்டிருந்தான். எங்கெங்கெல்லாமோ ஓடியாடி மருந்து வாங்கி வந்து தந்தான்!" என்றேன்.




அதைக் கேட்டதும் என் மனைவி துணுக் குற்று, "என்ன சொன்னீர்கள்! அண்ணாமலையின் வீட்டில் இருந்தீர்களா! அண்ணாமலை இத்தனை நேரம் உங்களுக்காகக் காத்திருந்து விட்டு மணி பன்னிரண்டு அடித்த பின்தானே வீட்டுக்குப் போகிறார்! உங்களிடம் ஏதோ மிக முக்கியமான வேலையாக வந்தாராம்!" என்று கூறினாள்.

நான் வகையாக மாட்டிக் கொண்டு விட்டேன். இருந்தாலும் இந்த மூளையைப் படைத்தானே, அந்தப் பிரம்மன் மூளையுள்ளவனாகத் தானிருக்க வேண்டும். எனவே, பகவான் கொடுத்த புத்தியை உபயோகப் படுத்தி, "அண்ணாமலை என்று யார் சொன்னார்கள்! உண்ணாமலை என்றல்லவா சொன்னேன்! உனக்குக் காது கொஞ்சம் இடது காதோ! இல்லை, கார்த்திகை மாதம் பிறந்தாயோ! 'உ' 'அ' வாக உன் காதுகளில் விழுகிறதே! அது கிடக்கட்டும். போய் ஒரு தம்ளர் தண்ணீர் கொண்டு வா!" என்றேன்.

என் மனைவி எனக்குத் தண்ணீர் அவ்வளவு தேவை யில்லை யென்று தீர்மானித்து விட்டாள். எனவே இருந்த இடத்தை விட்டு அசைந்து கொடுக்காமல், "இதோ பாருங்கள்! நான் நூறுக்கு நூற்றொரு தடவையாக உங்களிடம் படித்துப் படித்துச் சொல்லி யிருக்கிறேன், என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள், பொய் மட்டும் சொல்லாதீர்கள் என்று! ஆனால் நீங்கள் கொஞ்சமாவது காது கொடுத்துக் கேட்டால் தானே! இந்தப் பொய் ரொம்ப ரொம்பப் பொல்லாதது. நூறு தீமைகளும் இந்த ஒரு பொய்யும் சரி. எதற்காக முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கப் பார்க்கிறீர்கள்! இப்பொழுது நீங்கள் அண்ணாமலை என்றுதான் சொன்னீர்கள். அண்ணாமலை இங்கே வந்திருந்தார் என்று நான் சொல்லிக் குட்டை உடைத்து விடவே, நீங்கள் உண்ணாமலை என்று மாற்றி விட்டீர்கள். உண்ணாமலையை அழைத்துக் கொண்டுதான் அண்ணாமலை இங்கே வந்திருந்தார். இரண்டு பேரும் இப்பொழுதுதான் சேர்ந்தாற்போல் இங்கிருந்து போயிருக்கிறார்கள். ரங்கசாமியின் வீட்டில் இத்தனை நேரமும் நீங்கள் சீட்டு ஆடிக் கொண்டிருந்திருக்கிறீர்கள். உண்மையை ஒப்புக் கொள்வதற்கு உங்களுக்கு என் வலிக்கிறதாம்!" என்று கேட்டு விட்டாள்.

அவள் வாயை அடக்குவதற்கு ஒரு வழி செய்தேன். கலகலவென்று நகைத்து, "இதோ பார், ஜானு. உண்மையைச் சொல்கிறேன். நீ ரொம்ப ரொம்பப் பொல்லாதவள். நான் சொல்கிற சாக்குப் போக்கையும் செய்



புதுவைத் தேர்தல் நீதிபதி திரு பி. ஆர். சக்கரவர்த்தி அவர்களின் குமாரி செல்வி மரகதத்துக்கும், சென்னை இந்தியா பிஸ்டன்ஸ் இன்ஜினியர் திரு வி. ஆர். ஆர். ராஜன் அவர்களுக்கும் ஏப்ரல் 15-ந் தேதி பாண்டிச்சேரியில் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. திருமணத்துக்குப் புதுவை பிரதம கமிஷனர் முதலிய உயர்தர அதிகாரிகளும், பிரமுகர்களும், நண்பர்களும், உறவினர்களும் திரளாக விஜயம் செய்து மணமக்களை வாழ்த்தினர்.

வாழ்க, மணமக்கள்!

கிற பாசாங்குகளையும் தவிடுபொடியாக்கி விடுகிறாய். அதனால் இன்றிலிருந்து உன்னிடம் உண்மையே பேசுவதென்று தீர்மானித்து விட்டேன்!'' என்றேன்.

''நீங்கள் உண்மை பேசுவதென்று உண்மையாகத் தீர்மானித்து விட்டால் அப்புறம் உங்களிடம் எனக்கு எந்த விதமான குறையும் இருக்காது. நீங்கள் எனக்குப் பயந்து பொய் பேசுகிறீர்கள். கடவுளுக்குப் பயந்து உண்மை பேச மாட்டேன் என்கிறீர்களே!'' என்றாள்.

அவள் ஒவ்வொரு சொல்லுக்கும், 'ஆமாம், ஆமாம்!' போட்டு எப்படியோ ஒருவாறாகத் தப்பித்துக் கொண்டேன்.

மறுநாள் காலையில் தூங்கி எழுந்து தெளிந்த மனத்துடன் சிந்தித்துப் பார்த்த பொழுதுதான், இரவில் சொன்னது எவ்வளவு தவறானது என்பது புலனாகியது. 'உண்மையாகவே நாம் உண்மை பேசவேண்டியிருக்குமா! உண்மை பேசி நாம் இந்த உலகத்தில் உயிர் வாழ முடியுமா!' என்று யோசித்த பொழுது எனக்குத் தலையைச் சுற்றியது.

இதுவரையில் நம் மனைவி நம்மைப்பொய்யன் என்றுதான் எண்ணி வருகிறாள். ஆனால் இப்பொழுது நாம் உண்மை பேசி நமது உண்மையான வண்டவாளங்களையெல்லாம் வெளியிட்டு விட்டால் அவள் என்ன எண்ணுவாள்! அவள் தன் கணவனை என்னைப் போன்ற பேயன் இந்த உலகத்திலேயே வேறு யாரும் இருக்கமாட்டான் என்று தீர்மானித்து விடமாட்டாளா! அவள் தன்னைக் காட்டிலும் பாக்கியமற்றவர்கள் வேறு யாருமே இந்த உலகத்தில் இருக்க முடியாது என்று எண்ணினால்!

இப்படி எண்ணியவனுக்கு இன்னொரு எண்ணமும் உண்டாயிற்று. உண்மை பேசுவதில் எத்தனையோ கஷ்டங்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் அதில் ஒரு பெரும் நன்மையும் இருக்கத்தான் செய்கிறது. நாம் பேசும் உண்மை காரணமாக நமது பாவங்களெல்லாம் ஒவ்வொன்றாக நீங்கிவிடக் கூடுமே!

நான் இம்மாதிரி யோசித்துக் கொண்டிருந்த பொழுது என் மனைவி அரக்குக்கரைப் புடவை உடுத்திக் கொண்டு என்னைத் தன் அழகில் மயக்கிச் சொக்க வைப்பதற்காக வந்து சேர்ந்தாள். அவள் தன் புடவைத் தலைப்பை இப்படியும் அப்படியும் இழுத்து விட்டுக் கொண்டிருந்து, நான் அவள் அழகையும் அவள் அழகுக்கு எடுப்பாக அமைந்துள்ள புடவையும் பற்றிப் புகழ வேண்டும் என்று எண்ணுகிறாள் என்பதைத் தெரிந்து கொண்டேன். ஆனால் நான் வாய் திறக்கவில்லை. ஆத்திரம் தாங்காத அவள், ''இந்தப் புடவை எனக்கு எப்படியிருக்கிறது!'' என்று என்னைப் பார்த்துக் கேட்டாள்.

நான் உண்மையே பேசுவது என்று சங்கல்பம் செய்து கொண்டு, ''புடவை ஒன்றும் மோசமில்லை. ஆனால் உன் உடலுக்குத் தான் ஏற்றதாகத் தோன்றவில்லை. சிவப்பான உடலுக்குத்தான் இந்தப் புடவை எடுப்பாயிருக்கும்!'' என்றேன்.

என் மனைவி தன் வாழ்நாளில் தன்னைப் பற்றி இவ்வளவு தெளிவான விஷயங்களைக் கேட்டறிந்தவள் அல்ல. அதனால் என்னை ஒரு முறை உன்னிப்பாகக் கவனித்துப் பார்த்து விட்டு, ''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்! எந்தப் புடவையைக் கட்டிக் கொண்டாலும் உனக்கு வெகு எடுப்பாயிருக்கிறது என்று சொல்வீர்களே! இன்று இப்படிச் சொல்கிறீர்களே!'' என்று கேட்டாள்.

''இதோ பார்! இதில் தவறாக நினைப்பதற்கு ஒன்றும் இல்லை. நான் நேற்றிலிருந்து பொய்யே பேசுவதில்லை என்று தீர்மானித்திருக்கிறேன் அல்லவா!'' என்றேன்.

என் கண்களோடு கண்களைப் பொருத்தி, ''உங்களைப் பொய் சொல்லுங்கள் என்று இங்கே யார் தூண்டுகிறார்கள்! நானே தான் 'உண்மை பேசுங்கள், உண்மை பேசுங்கள்' என்று சொல்கிறேனே!'' என்றாள் அவள்.

''ஆமாம். அதனால்தான் நான் உண்மையைச் சொல்கிறேன். புடவை நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் இப் புடவைக்குத்தகுந்த உடல் உனக்கு இல்லை. என்னைக் கேட்டால் இதே புடவையை உன் தோழி வாஸந்தி உடுத்திக் கொள்ள வேண்டும், பார்க்க வேண்டும். அழகுக்கு அழகு செய்தாற்போல் இருக்கும். பார்க்கப் பார்க்கப் பார்த்துக் கொண்டேயிருக்கலாம் என்று தோன்றும்!'' என்றேன்.

''யார்! வாஸந்தியா! நீங்கள்தான் அவள் நன்றாயில்லை, அழகாயில்லை என்று அடிக்கடி சொல்வீர்களே!'' என்றாள் வியப்புடன்.

''உண்மை. அம்மாதிரி நான் உன்னிடம் பல பொய்கள் சொன்னேன். அப்படிப் பொய் சொல்லும்படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டதற்காக மனம் வருந்துகிறேன். உண்மையைக் கேட்டால் நான் வாஸந்தியைப் போன்ற அழகியை இதுவரை என் கண்களால் கண்டதில்லை. அவளைப் பார்த்து விட்டால், அப்புறம் எனக்கு என் நினைவே இருப்பதில்லை. அழகென்றால் அப்படியல்லவா இருக்க வேண்டும்! அவளை உள்ளக் கோயிலில் வைத்துப் பூஜிக்கலாமா என்று கூட எனக்குத் தோன்றுகிறது!''

என் மனைவியின் குரல் ஒரேயடியாக இறங்கி விட்டது. ''அப்படியானால் அவளை உங்கள்

உன்னைக் கோயிலில் வைத்துப் பூஜிக்க ஏன் பயப்பட வேண்டும்! அப்படிச் செய்யக் கூடாது என்று உங்களை யார் தடுத்தார்கள்!'' என்று கேட்டாள்.

''பார்த்தாயா, பார்த்தாயா! நீ தவறாக எடுத்துக் கொண்டு விட்டாயே! உண்மை பேசினால் நீ சந்தோஷம் அல்லவா பட வேண்டும்! உண்மையைக் கேட்கப்போனால் ஒரு மனைவிக்கு இதைக் காட்டிலும் வேறு என்ன வேண்டும்! அவள் கணவன் அவளிடம் பொய் பேசுவதில்லை, அவளிடம் ரகசியம் என்று எதையும் ஒளித்து மறைப்பதில்லை, அவளை ஏமாற்றி மோசம் செய்வதில்லை என்றால் அவள் மனமகிழ்ச்சியல்லவா கொள்ள வேண்டும்! இப்படி உன்னைப்போல் வருத்தப்படலாமா!'' என்றேன்.

என் மனைவியின் கண்களில் நீர் நிறைந்து விட்டது. ''நான் தவறாக எடுத்துக் கொள்ளவில்லை. நான் காட்டும் அன்புக்கும் நான் செய்யும் பணிவிடைக்கும் இதுதான் தாங்கள் செய்யும் பிரதியுபகாரமா? இத்தனை காலமும் என்னிடம் பொய் பேசி ஏமாற்றித்தானே வந்திருக்கிறீர்கள்! என்னிடம் உயிரையே வைத்திருப்பதாகவும் அன்பை அப்படியே அள்ளிச் சொரிவதாகவும் சொல்லி என்னை இறுமாப்புறச் செய்தீர்கள். ஆனால் உள்ளுக்குள் என்னை வெறுத்தீர்கள். மேலுக்கு அன்பொழுகப் பேசினீர்கள். 'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்' என்பது எவ்வளவு உண்மையான விஷயம்!''

''நான் அப்படிச் செய்ததற்காக வருந்துகிறேன். அதையெல்லாம் மறந்து விடு. இனி பொய் பேசுவதில்லை. எந்த விஷயத்தையும் ஒளிவு மறைவின்றிச் சொல்லி விடுகிறேன். இதுவரை நடந்தது நடந்து விட்டது. அதை மறந்துவிடு!'' என்றேன்.

அதைக் கேட்ட அவள் அப்புறம் வாயைத் திறக்கவில்லை. அவள் கண்களிலிருந்து நீர் தாரையாகப் பெருகலாயிற்று. நான் சிறிது நேரம் அந்த வேடிக்கையைப் பார்த்துக் கொண்டிருந்தேன். கடைசியில் என் உள்ளமே கசிந்து விட்டது. ''நான் உண்மை பேசுவது உனக்குத் தவறாகப் பட்டால் சொல்லிவிடு. நான் பொய்க்காககூட உன் எதிரே உண்மை பேசுவதில்லை என்று வாக்களிக்கிறேன். நீ எப்படிச் சொல்கிறாயோ, அப்படி ஆணையிட்டுக் கூடச் சொல்கிறேன். நீ அழகி, உன் அழகைப் போன்ற அழகை நான் பார்த்ததில்லை. உன்னை என் உள்ளத்தில் வைத்துக் கும்பிடுகிறேன். நீ என் இதயத்து அரசி......!''

அவளுக்குக் கனகோபம் வந்து விட்டது. ''போதும், போதும்! நிறுத்துங்கள், உங்கள் பேச்சை. நான் அசடானேன்; நீங்கள் உங்களால் முடிந்த வரை என்னை அசடாக்கி விட்டீர்கள். இன்று வரை எனக்கு உண்மை சொரூபம் தெரியாமல் இருந்தது. இன்றுதான் எனக்கு உள்ள அந்தஸ்து என்ன என்பது வெட்ட வெளிச்சமாகியது. நீங்கள் வாஸந்தியை உங்கள் உள்ளத்தரசியாக்கிக் கொள்ளுங்கள்; வழிபடும் தெய்வமாய்ப் போற்றுங்கள். என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள். ஆனால் அபாக்கியவதியான என்னை என் நிலையில் இருக்க அனுமதியளியுங்கள். அதுவே எனக்குப் போதும்!'' என்று சொன்னவள் பிறியப் பிறிய அழ ஆரம்பித்து விட்டாள்.

அவள் விக்கல் அதிகமாகி விடவே, நான் உண்மையான மனத்துடன் இனி உண்மையே விளையாட்டுக்குக் கூடப் பேசுவதில்லை என்று தீர்மானித்தேன். அது மட்டுமா! ''நான் சொன்னது அவ்வளவும் வேடிக்கைக்காகச் சொன்னேன். துளிக்கூட இதில் உண்மைக் கலப்பு கிடையாது. உன்னைச் சோதிப்பதற்காக இந்த நாடகம் நடத்தினேன்!'' என்று அவளைச் சமாதானப் படுத்த முயன்றேன். அவளுக்கு நம்பிக்கை ஏற்படுவதற்காக நான் செய்த பிரயாசைகளைக் கேட்டால், பொய்யோ மெய்யோ என்றுகூட நீங்கள் ஐயமுறுவீர்கள். அதனால் நமக்கு எதற்கு இந்தப் பொய்யும் மெய்யும் என்று பேசாமல் இருந்து விடுகிறேன். என்ன, நான் சொல்வது நியாயந்தானே!



உதவி நாட்டியம்


புது தில்லியில் நாட்டிய கலாலயம் என்ற பெயரில் ஒரு கலைக் கழகம் தொண்டாற்றி வருகிறது. அது குழந்தைகளுக்கு உற்சாக மூட்டி நாட்டியம் கற்றுக் கொடுத்து வருகிறது. நாட்டியக் கலையை வெறும் பொழுதுபோக்குக்கு மட்டும் பயன்படுத்தாமல் பல பொதுக்காரியங்களுக்குப் பொருள் திரட்டுவதற்கும் பயன்படுத்தி வருகிறது. சென்ற மாதம் கடைசி வாரத்தில் தில்லிப் பெண்மணிகள் கழகத்தின் சார்பில் வைத்திய மோட்டார் வண்டி உதவி நிதிக்காக ரயில்வே மந்திரி திரு அளகேசனின் புதல்வியான குமாரி ஊர்மிளாவின் நாட்டியம் நடைபெற்றது. நாட்டிய கலாலயத்தில் நாட்டியம் பயின்ற குமாரி ஊர்மிளா பரத நாட்டியமாடிச் சபையோரை மகிழ்வித்தார். குறத்தி நடனத்தில் குமாரி ஊர்மிளாவின் தோற்றத்தைப் படத்தில் காணலாம்.

வேர்க்குரு விலிருந்து

துரிதமாக, நீடித்த நிவாரணம் பெற
சுலபமான இரு-வழி சிகிச்சை


1

ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் சோப் தேய்த்து ஸ்நானம் செய்வதால், அமிலங்களால் அடைபட்டு வேதனையூட்டும் சருமத் துவாரங்களுக்கு நிவாரணம் ஏற்படுகிறது. அதன் ஔஷத சக்தி வாய்ந்த நுரை உங்கள் சருமத்தினூடே எளிதில் புகுந்து, எரிச்சலை அதன் ஆரம்ப ஸ்தானத்திலேயே நிறுத்துகிறது.



2

ஸ்நானத்திற்குப் பின் உங்கள் சருமத்தை குளுமையுடனும், சுகமாயும் வைக்க ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர் உபயோகியுங்கள். இதமளிக்கும் இந்த கிருமிநாசினி பவுடர் வேர்க்குரு உபாதையிலிருந்து நீடித்த நிவாரணமளிக்கிறது.



Johnson's
TRADE MARK

ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் சோப் மற்றும் பவுடர்



புலியும் உதவும்

சூரசேனன் கோதாவரிக் கரையில் சந்தாபுரியில் அரசு புரிந்தான். மிக நல்ல ராஜா. அவன் காலத்தில் தபஸ்விகள் பல பேர் இருந்தார்கள். வனத்தில் வாசம் செய்து தவம் செய்து வந்தார்கள். அவர்கள் நினைத்ததெல்லாம் முடிவு பெறும்.

அந்த ரிஷிகளுக்குள் ஒருவருக்கு எப்போதும் பிறருடைய குற்றங்களைக் காண்பதுவே வழக்கம். இதை ராஜா கண்டு கொண்டு, "சுவாமி! தாங்கள் நாராயண மகா அரணியத்தில் தவம் செய்தால் நன்றாக இருக்கும்" என்று கேட்டுக் கொண்டான். அந்த அரண்யம் வெகு தூரத்தில் இருந்த ஒரு காடு.

அவரும் அப்படியே செய்தார். பக்கத்தில் ஜனசஞ்சாரம் அதிகமாக இல்லாத இடம். ஆனபடியால் அவருடைய கவனம் மக்களைப் பற்றிச் செல்லவில்லை. காட்டில் மிருகங்களைக் கவனித்து வந்தார்.

மிருகங்களின் நடவடிக்கையும் அவருக்குப் பிடிக்கவில்லை. ஒன்றை ஒன்று கொன்றும் தின்றும் வருவதைப் பார்த்தார். "இது என்ன தவறான வாழ்க்கை. இதை நிறுத்திவிட வேண்டும்" என்று தீர்மானித்தார். அதற்காக தவம் செய்தார்.



"மகாதேவா! இந்தப் பிராணிகள் ஒன்றையொன்று கொன்றும் தின்றும் இம்சை செய்வதைப் பார்த்து வருகிறாயே! இதை நீ நிறுத்திவிடக் கூடாதா!" என்று வேண்டிக் கொண்டு தவம் செய்தார்.

கடினமான நோன்புகளை மேற்கொண்டு தவம் செய்தார்.

"நான் இருக்கும் காட்டிலாவது இந்தப் பிராணிகளுக்கு நற்புத்தி கொடுப்பாயாக. ஜீவகாருணிய மார்க்கத்தில் வாழச் செய்வாயாக!" என்று கேட்டுக் கொண்டார்.

மகாதேவனும் இதற்கு இரங்கி, "அப்படியே!" என்று வரம் தந்தான்.

அதன் பிறகு அந்த நாராயண வனத்தில் புலி புல் தின்ன ஆரம்பித்தது. சிறுத்தை, ஓநாய், நரி முதலிய எல்லா மிருகங்களும் புல்லும் பழமும் ஆகாரமாகக் கொண்டு விட்டன. மான்களும் மற்ற சாந்த மிருகங்களும் ஆனந்தமாகப் பெருகின. பறவைகளும் புழுப் பூச்சிகளைத் தேடாமல் ஜீவகாருணியம் மேற்கொண்டு விட்டன.

மான்களும் பன்றிகளும் காடு நிறைந்து பக்கத்து கிராமங்களிலும் வயல்களிலும் வீடுகளிலும்கூடப் பிரவேசித்து வயல்களைப் பாழ் செய்தும் வீடுகளிலும் புழக்கடைகளிலும் சேகரித்திருக்கும் பண்டங்களைத் தின்னவும் ஆரம்பித்தன. குரங்குகள் லட்சக்கணக்காக நாடெல்லாம் பரவின. எங்கே பார்த்தாலும் நாய்கள் நரிகள்.

நாராயண அரணியப் பிரதேசத்தில் கிராமங்கள் எல்லாம் பாழாய்ப் போயின. குடிமக்கள் எல்லாரும் ஊர் ஊராகப் பரதேசிகளாகத் திரிந்தார்கள். சந்தாபுரி ராஜாவுக்குச் செய்தி வந்தது. அரசனைக் கண்டு சொல்லிக் கொள்ள ஒரு கூட்டமும் வந்து விட்டது.

அரசன் விசாரித்தான். நிலைமையை அறிந்து கொண்டான். எல்லாம் தன்னுடைய ஜீவகாருணிய ரிஷியின் வேலை' என்பதைத் தெரிந்து கொண்டான். அவரைக் காண நாராயண வனம் சென்றான்.


"சுவாமி, தயவுசெய்து நம்முடைய சந்தாபுரிக்கு எழுந்தருள வேண்டும். சர்வக்ஞஞன பிரமனுடைய ஏற்பாடுகளை நாம் சீர்திருத்தம் செய்ய இயலாது" என்று விண்ணப்பம் செய்து கொண்டான்.

அவரும் அடக்கத்துடன் நகரத்துக்கு வந்து விட்டார். அவரைக் கொண்டு அரசன் ஒரு வேள்வி நடத்தினான். புலியும் நரியும் பழையபடி தம்முடைய இயற்கை ஆகார முறைக்குத் திரும்ப வேண்டும் என்று வேள்வியில் பிரார்த்தனை நடந்தது.

மகா தேவனும் சம்மதித்து மிருகங்களுக்கு ஆக்ஞை இட்டான். "பழைய முறையில் உங்கள் பசியைத் தீர்த்துக் கொள்ளுங்கள்" என்று ஆணையிட்டான்.

அதன் பிறகு காட்டில் மிருகங்கள் வரம்புக்குள் பெருகியும் வாழ்ந்தும் வந்தன. கிராமவாசிகள் மறுபடி தத்தம் ஊர்களில் பயமின்றிக் குடியிருக்க ஆரம்பித்தார்கள்.

ஜீவகாருணிய முனிவர் பிறரிடம் குற்றம் கண்டு பிடிப்பதை விட்டு விட்டார்.



மாந்தோப்பு பங்களா

"விச்சு"


வேணுவும் அவன் தோழர்களும் கோடை விடுமுறையைக் கழிக்கத் தினந்தோறும் வயன்கரை மாந்தோப்புக்குப் போய் வருவது வழக்கம். அந்த ஊருக்கு அடுத்தாற் போல் கொஞ்ச தூரத்தில் ஒரு நீண்ட ரயில் பாதையும் அதை அடுத்தாற்போல் ஏழெட்டுப் பங்களாக்களும் உண்டு. பங்களாக்களைச் சுற்றிப் பெரிய பெரிய தோட்டங்கள். அந்தப் பங்களாக்களுக்குச் சொந்தக்காரர்கள் எல்லாரும் கதவைப் பூட்டிக் கொண்டு ஊட்டிக்கும், கோடைக்கானலுக்கும் போயிருந்தார்கள்.




அன்று சிறுவர்கள் பொழுது சாய்ந்து வெகு நேரம் வரை அங்கேயே விளையாடிக் கொண்டிருந்தனர். வழக்கமாகப் போகும் ஏழு மணி மெயில் ஒன்று 'கூ' வென்று கத்திக் கொண்டு ஓடியபோதுதான் நேரமாகி விட்ட தென்பதைச் சிறுவர்கள் உணர்ந்தனர். எல்லோரும் வீட்டுக்குத் திரும்பி வந்து கொண்டிருந்த போது ஒரு பங்களாவின் மீது அவர்கள் பார்வை விழுந்தது. அந்தப் பங்களாவின் காம்பவுண்டு சுவர் மீது இரண்டு முரட்டுத் திருடர்கள் ஏறி உள்ளே குதித்துக் கொண்டிருந்தனர். அதைக் கண்ட வேணு தன் தோழர்களை அழைத்து, "இன்று நமக்குச் சரியான அதிருஷ்டம் அடித்திருக்கிறது; நீங்கள் எல்லாரும் பயப்படாமல் அப் பங்களாவைச் சுற்றித் தைரியமாக நில்லுங்கள். அதோ, அங்கே வயன்கரையில் போலீஸ்காரன் இருப்பான். நான் ஓடிப்போய் அவனை அழைத்து வருகிறேன். பிறகு திருடர்களைப் பிடித்துக் கொண்டு போய்ப் போலீஸ் ஸ்டேஷனில் ஒப்படைத்தால் போலீஸ் இன்ஸ்பெக்டர் நம் எல்லோரையும் மெச்சிப் பரிசுகள் கொடுப்பார்" என்றான்.

"அதுதான் சரியான யோசனை" என்று தோழர்கள் ஆமோதித்தனர்.

உடனே வேணு வேகமாக வயன்கரைப் பக்கம் ஓடினான். தோழர்கள்










கறுப்பு நாய்:— பெயர்தான் நாய்க்குடை. ஆனால், நமக்கு மட்டும் இது உபயோகப் படுகிறதில்லை. மழைக்கு, வெய்யிலுக்கு நாம் இதைப் பிடித்துக் கொண்டு போக முடியுமா!

பங்களாவை முற்றுகை யிட்டனர். லயன்கரைக் காவல் போலீஸ்காரன் ஒரு மரத்தடியில் இருந்த பெஞ்சு மீது படுத்துக் கிடந்தான். அவன் பக்கத்தில் அவனுடைய போலீஸ் உடைகள் எல்லாம் மூட்டையாகக் கட்டி வைக்கப் பட்டிருந்தன.

திருடர்கள் இருவரும் அவன் மூக்கில் மயக்க மருந்தைத் தடவிவிட்டுப் போயிருந்தார்கள். இதனால் போலீஸ்காரன் நினைவின்றி மயக்கமாகக் கிடந்தான்.

வேணு போலீஸ்காரனைத் தட்டி எழுப்பினான். அவன் எழுந்திருக்கவில்லை. மேலும் பலமாகத் தட்டிப் பார்த்தான். போலீஸ்காரன் அசைவதாகக் காணோம். "ஐயையோ! இந்த நெருக்கடியான சமயத்தில் போலீஸ்காரன் இப்படிக் கிடக்கிறானே" என்று பதைபதைத்தான் வேணு. அவனுக்குச் சற்று நேரம் ஒன்றும் விளங்கவில்லை. எப்படியாவது ஒரு போலீஸ்காரனை அழைத்துச் சென்று திருடர்களைச் சட்டென்று பிடித்துவிட வேண்டுமென்று துடித்தான். பரபரப்புடன் அங்கும் இங்கும் பார்த்தான். அப்போது லயன்கரைப் பக்கமாக யாரோ ஓர் ஆசாமி வந்து கொண்டிருந்தான். அவன் வேணுவுக்குத் தெரிந்த ஒரு தோட்டக்காரன்.

"முனியாண்டி, இங்கே ஓடி வா, ஓடி வா" என்று கூவினான். முனியாண்டி ஓடி வந்தான். வேணு பங்களாவுக்குள் திருடர்கள் புகுந்திருக்கும் விஷயத்தைச் சொல்லி, "இந்தா, சீக்கிரம் இந்தப் போலீஸ்காரன் உடுப்பை நீ மாட்டிக் கொண்டு உடனே புறப்படு" என்றான்.



"என்னை எதற்கு இந்த உடுப்பை மாட்டிக்கொள்ளச் சொல்கிறாய்?" என்று சற்றுத் தயங்கினான் முனியாண்டி.

"நீ போலீஸ் உடையில் வந்தால் தான் திருடர்கள் பயப்படுவார்கள். இல்லா விட்டால் தப்பி ஓடிப்போய் விடுவார்கள், உம், சீக்கிரம்" என்று துரிதப்படுத்தினான் வேணு.

முனியாண்டி போலீஸ் உடுப்பை ஒவ்வொன்றாக மாட்டிக்கொண்டு குண்டாந்தடியுடன் கிளம்பினான்.

இருவரும் திருடர்கள் புகுந்திருந்த பங்களாவை அடைந்தார்கள். முனியாண்டி போலீஸ் விசிலை ஊதிக் கொண்டே கெடுபிடியோடு பங்களாவிலிருந்த திருடர்களைப் பிடித்து விட்டான். வேணுவும் தோழர்களும் திருடர்களைக் கையும் களவுமாகப் பிடித்துக் கொண்டு போலீஸ் ஸ்டேஷனை அடைந்தனர். முன்பின் அறிமுக மில்லாத போலீஸ்காரன் திருடர்களைப் பிடித்து வந்திருப்பதைக் கண்டு இன்ஸ்பெக்டர் வியப்படைந்தார்!


வேணு நடந்த விஷயம் எல்லாவற்றையும் விவரமாக இன்ஸ்பெக்டருக்குச் சொல்லி விட்டு, "இன்ஸ்பெக்டர் ஸார்! எப்படியோ நாங்கள் முனியாண்டியின் உதவியைக்கொண்டு திருடர்கள் இருவரையும் பிடித்து விட்டோம். இப்போது முதலில் நாம் எல்லோரும் சென்று லயன் கரையில் மயக்கமடைந்திருக்கும் போலீஸ்காரரைக் காப்பாற்ற வேண்டும்" என்று கூறினான். எல்லோரும் சென்று லயன்கரை போலீஸ்காரனுடைய மயக்கத்தைப் போக்கி அழைத்து வந்தார்கள்.

கடைசியில் இன்ஸ்பெக்டர், வேணுவையும் அவன் தோழர்களையும் முனியாண்டியையும் பாராட்டிப் பரிசுகள் வழங்கினார். பிறகு முனியாண்டி இன்ஸ்பெக்டரிடம் 'போய் வருகிறேன்' என்று கூறி விடை பெற்றுக்கொண்டான். இன்ஸ்பெக்டர் "சரி; போய் வா; ஆனால், போலீஸ் உடையைக் கழற்றி வைத்து விட்டுப் போய் வா" என்று சிரித்துக் கொண்டே கூறினார்.

டம் டம் டமாரம்

"கொழுந்து"


சித்திரைத் திருநாளுக்கு ஏராளமான கடைகள் வந்திருந்தன. அவற்றில் குழந்தைகள் விளையாட்டுச் சாமான்கள் கடையும் ஒன்று. ரப்பர் பந்து, தத்தும் தவளை, குதிக்கும் குரங்கு, டம் டம் டமாரம் எல்லாம் அந்தக் கடையில் பிள்ளைகளின் மனத்தைக் கொள்ளை கொள்ளும்படி அழகாக அடுக்கி வைக்கப் பட்டிருந்தன. பாலுவின் சிநேகிதர்களெல்லாம் ஆளுக்கொரு விளையாட்டுச் சாமான் வாங்கி வந்து கொட்டம் அடித்துக் கொண்டிருந்தனர்.



பாலுவுக்குத் தன் சிநேகிதர்கள் விளையாட்டுச் சாமான்களை வைத்துக் கொண்டு குதிப்பதைப் பார்க்கும்போது தனக்கும் ஒன்று இல்லையே என்று வருத்தமாயிருந்தது.

அவன் அப்பா ஆபிஸிலிருந்து வந்ததும் வராததும், "அப்பா, எனக்கு ஒரு டமாரம் வேண்டும்" என்று நச்சரித்தான். பாலுவின், தந்தைக்குச் 'சத்தம், கலாட்டா, கூச்சல்' என்றால் கட்டோடு பிடிக்கவே பிடிக்காது.

"பாலு; டமாரம் மட்டும் கேட்காதே; அதை வாங்கிக் கொடுத்தால் வீடே இரண்டு படும்" என்று சொன்னார்.



பாலு மேலும் சிணுங்கினான்.

பாலுவின் சிணுங்கலை அவன் அப்பாவால் தாங்கவே முடியவில்லை.

"டமாரம் விலையும் அதிகம். அதை வாங்கிக் கொடுத்தால் சத்தமும் அதிகமாக இருக்கும். ஆகையால் நீ டமாரம் கேட்கக் கூடாது. அப்படியானால் உனக்கு ஒரு ரூபாய் தருவேன்" என்று கூறினார்.

பாலு 'சரி' என்று கூறி அப்பா கொடுத்த ஒரு ரூபாயைச் சந்தோஷமாக வாங்கிக்கொண்டு பாட்டியிடம் ஓடினான்.

பாட்டியிடம் போய், "பாட்டி! அப்பாவை டமாரம் கேட்டேன். டமாரம் வாங்கிச் சத்தம் போடக் கூடாது என்பதற்காக அப்பா எனக்கு ஒரு ரூபாய் கொடுத்தார். நீ எவ்வளவு கொடுக்கப் போகிறாய்?" என்று கேட்டான். "டமாரமா? அந்தத் தலைவேதனை வேண்டாம். டமாரம் வாங்காம லிருப்பதற்கு உனக்கு நானும் ஒரு ரூபாய் தருகிறேன்" என்றாள் பாட்டி. பாட்டி கொடுத்த ரூபாயை வாங்கிக் கொண்டு பாலு அம்மாவிடம் ஓடினான்.

டமாரம் வாங்கிக் கலாட்டா செய்யாமல் இருப்பதற்காக அம்மாவும் ஒரு ரூபாய் கொடுத்தாள். பாலுவின் சிணுங்கல் ஓய்ந்தது.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் தெருவில் யாரோ டமாரம் அடித்துக் கொண்டு வரும் சத்தம் கேட்டுப் பாலுவின் அப்பா, அம்மா, பாட்டி மூவரும் வாசலில் போய் எட்டிப் பார்த்தார்கள்.



அங்கே, அவர்கள் கொடுத்த மூன்று ரூபாய்க்கு ஒரு டமாரத்தை வாங்கி டம் டம் என்று முழங்கிய வண்ணம் குதூகலமாக வந்து கொண்டிருந்தான் பாலு.


"அட, கஷ்டகாலமே!" என்று பாலுவின் அப்பா, அம்மா பாட்டி மூவரும் காதைப் பொத்திக் கொண்டார்கள்!



தாயார் — சீச்சீ, பாவம்; பூனையின் வாலைப் பிடித்து ஏண்டா இழுக்கிறாய்!......

குழந்தை :— நான் இழுக்கவில்லை. நான் பூனையின் வாலைப் பிடித்துக் கொண்டிருக்கேன், அதுதான் இழுக்கிறது!







யோசித்துப் பார்!

•


ஓடும், நிற்கும், நடக்காது. அது என்ன? சொல், பார்க்கலாம்!



விடை: கடிகாரம்



எல்லாம் ஒன்றைப் போலவே இருக்கும் இந்த ஐந்து யானைகளில் ஒரு யானை மட்டும் கொஞ்சம் வித்தியாசமாயிருக்கிறது! அது எந்த யானை? அது என்ன வித்தியாசம் என்பதைக் கண்டு பிடியுங்கள்.



"எங்கள் குடும்பத்தில் நாங்கள் மொத்தம் பத்து சகோதரர்கள். எங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு அருமைத் தங்கை இருக்கிறாள்."

"அடேயப்பா! பத்துப் பேருக்குப் பத்து தங்கைகள் என்றால் மொத்தம் இருபது பேர் ஆச்சே! அப்போ உங்க குடும்பம் ரொம்பப் பெரிசாக இருக்கணுமே!"

"இல்லையே. நாங்கள் பதினொரு பேர் தான். ஒரே தங்கை தான்! எங்கள் பத்துப் பேருக்கும் அவள் தங்கைதானே!"




வாய்நாற்றத் தொல்லைக்கு முற்றுப்புள்ளி!
ஆக்டிவ் க்ளோரோபில் சேர்ந்த
அற்புதமான பச்சை 'கோலினாஸ்'
★ வாய் நாற்றத்தை அகற்றுகிறது
★ பற்களை சொத்தையாக்கும் கிருமிகளை ஒழிக்கிறது
★ ஈறுகளுக்குப் பலமளிக்கிறது
★ பற்களைச் சுத்தமாயும் பிரகாசத்துடனும் வைக்கிறது
Kolynos
Chlorophyl
K
'கோலினாஸ்' நுரை
தனிச் சிறப்பு வாய்ந்தது
GK. 3026

ருஷ்ய நாட்டு நாடோடிக் கதை

இளவரசி மரியா

5

தீவையும் பொன் மாளிகையையும் பார்த்து வியந்து நின்ற வியாபாரிகள், "நாம் இந்தக் கடல் மார்க்கமாக எத்தனையோ தடவைகள் போயிருக்கிறோம். அப்போதெல்லாம் இங்கு நீல அலைகளைத் தவிர்த்து இப்படியொரு தீவையோ மாளிகையையோ பார்த்ததே இல்லையே! எப்படி இங்கு இந்தத் தீவு வந்தது?... எப்படியானால் என்ன? இந்தத் தீவைப் போய்ப் பார்ப்போம்!" என்று முடிவு செய்தார்கள்.

மூன்று கப்பல்களையும் அங்கேயே நடுக் கடலில் நங்கூரம் பாய்ச்சி நிறுத்தி விட்டு, ஒரு சிறு படகில் ஏறிக் கொண்டு தீவுக்கு வந்தார்கள். வல்லில் ஆண்டிரி அவர்களை அன்போடு, "வாருங்கள்! வாருங்கள்!" என்று வரவேற்று உபசரித்தான்.

வியாபாரிகள் அந்தத் தீவில் ஒவ்வொரு இடத்தையும் பார்த்தார்கள். பார்க்கப் பார்க்க அவர்களுக்கு வியப்பும் அதிசயமும் தான் அதிகரித்தன. ஆகா! அரண்மனையின் பொன் ஓடுகள் என்ன சுடர் விட்டுப் பிரகாசித்தன! அத்தீவிலுள்ள பறவை இனங்கள்தான் என்ன இனிய குரல்களில் பாடின. மானும் மயிலும் அங்கங்கே ஓடியும் ஆடியும் எத்தகைய இன்பச் சூழ்நிலையை யுண்டாக்கின!

"அன்பு மிக்க நண்பரே! உலக அதிசயங்களில் எல்லாம் வைத்துப் பேரதிசயமாகத் திகழும் இந்த மாளிகையைக் கட்டியவர்கள் யார்?" என்று கேட்டார்கள் வியாபாரிகள்.

"என் வேலைக்காரன் நோம் ஓர் இரவில் இதைக் கட்டி முடித்தான்" என்று கூறினான் ஆண்டிரி.

பிறகு அவர்களைச் சாப்பாட்டுக் கூடத்துக்கு அழைத்துச் சென்றான். "தம்பி நோம்! நாங்கள் சாப்பிட ஏதாகிலும் கொடேன்" என்றான் ஆண்டிரி.

அடுத்த கணம் எங்கிருந்தோ ஒரு மேஜை வந்தது. அதில் வகை வகையான பண்டங்கள் எல்லாம் பரிமாறப் பட்டிருந்தன. இவற்றைப் பார்த்து விட்டு அந்த வியாபாரிகள் அடைந்த வியப்பு கொஞ்ச நஞ்சமல்ல!

"ஐயா, நீர் ரொம்பவும் நல்லவராகக் காண்கிறீர்கள்! நாங்கள் சொல்லும் யோசனையை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள்



என்று நம்புகிறோம். நாம் பண்டமாற்று செய்து கொண்டால் என்ன என்று நினைக்கிறோம்!" என்றார்கள் வியாபாரிகள். பிறகு அவர்கள் தொடர்ந்து,

"உங்கள் வேலைக்காரன் சோமை எங்களுக்குக் கொடுத்துவிட்டு எங்களிடமுள்ள அதிசயப் பொருள்களில் எதையாகிலும் நீங்கள் எடுத்துக் கொள்ளலாம்! என்ன சொல்லுகிறீர்கள்?" என்றார்கள்.

"ரொம்ப சரி. உங்களிடம் என்னென்ன அதிசயப் பொருள்கள் உள்ளன சொல்லுங்கள், பார்க்கலாம்!" என்றான் ஆண்டிரி.

ஒரு வியாபாரி தான் அணிந்திருந்த 'கோட்'டின் உட்பக்கத்திலிருந்து ஒரு கத்தியை எடுத்தான். "இதைப் பார்த்து, 'கத்தியே நீ அந்த மனிதனின் எலும்புகளை நொறுக்கிவிட்டு வா!' என்று சொல்ல வேண்டியதுதான்; உடனே இந்தக் கத்தி புறப்பட்டு, தன் காரியத்தை முடித்துக் கொண்டு வெற்றியோடு தான் திரும்பி வரும். எவ்வளவு பலசாலி மனிதனை இருந்தாலும் பரவாயில்லை. அவனை முறியடித்து விடும்" என்றான்.

இன்னொரு வியாபாரி தன் உடையில் ஒளித்து வைத்திருந்த கோடாலியை எடுத்தான். அதன் கைப்பிடியைப் பிடித்து நேராக நிறுத்தி வைத்தான். உடனே கோடாலி 'டக்' 'டக்' என்று சத்தத்துடன் வெட்டியது. அப்படி வெட்ட வெட்டக் கடலில்




நம்பகமான 'கோடக்' காமிரா மூலம் நீங்கள்

எப்பொழுதும்



'கோடக்' காமிராக்களின்
சில ரகங்கள்



ப்ரௌனி 127 காமிரா
ரூ. 17/8



ஸிக்ஸ்-20 ப்ரௌனி 'ஸி'
காமிரா, மாடல் ஸி ரூ. 24/-



ப்ரௌனி ரிப்ளெக்ஸ்
காமிரா ரூ. 45/-



ஸிக்ஸ்-20 கோடக்
'ஜூனியர் II' காமிரா
(f/6.3 லென்ஸ்) ரூ. 115/-



கோடக் 'ரெடினெட்' காமிரா
(f/3.5 லென்ஸ்) ரூ. 250/-

விலைகளில் விற்பனைவரி
அடங்கவில்லை

எப்பொழுதும் நேர்த்தியான படங்களை எடுக்க முடியும்

புதுப் புது யுத்தக் கப்பல்கள் தோன்ற லாயின. பாய் மரங்கள், யுத்த பீரங்கி கள், போர் வீரர்கள் ஆகிய எல்லா அம்சங்களும் கொண்ட கப்பல்களாக இருந் தன. அந்த வீரர்கள், வியாபாரிகளிடம் 'என்ன செய்ய வேண்டும்? தங்கள் கட்டளை என்ன?' என்று கேட்கத் தொடங்கினர்.

இவ்வளவு பெரிய போர்ப்படை திரண்டு விட்டதே! இவர்களைப் போகச் சொல்ல வழி கிடையாதா என்று ஆண்டிரி நினைத் துக் கொண்டிருந்த போதே வியாபாரி கோடாலியைத் தலைகீழாகக் கவிழ்த்து வைத்தான் அவ்வளவுதான்; அந்தனை வீரர்களும் காணவில்லை; கப்பல்களும் மாயமாய் மறைந்து போய் விட்டன!

மூன்றாவது வியாபாரியின் முறை வந்தது. அவன் தன் சட்டையில் ஒளித்து வைத்திருந்த ஒரு ஊதுகுழலை எடுத்தான். தன் வாயில் வைத்து ஊதினான். என்ன ஆச்சரியம்! அடுத்த கணம் ஒரு பெரிய போர்ப் படை முரசுகள் முழுங்கத் திரண்டு வந்தது. அந்தப் படையில் குதிரை வீரர் கள் இருந்தார்கள். காலாட் படையினர் இருந்தார்கள். படையின் தலைவர்கள் வியாபாரியிடம் வந்து வணங்கி, "ஐயா! தங்கள் கட்டளை என்ன?" என்று பணி வோடு கேட்டார்கள்.

வியாபாரி என்ன கட்டளை விடுவான்? யார்மீது ஏவுவான்? என்று ஆண்டிரி வியந்து பார்த்துக் கொண்டிருந்த போதே வியாபாரி குழலைத் தலைகீழாக வைத்து ஊதினான். உடனே அந்தப் பட்டாளம் மாயமாய் மறைந்து விட்டது!

இந்த அதிசயங்களைப் பார்த்த ஆண்டிரி "நீங்கள் கொண்டு வந்துள்ள அதிசயப் பொருள்கள் எல்லாம் உண்மையிலேயே மிக அதிசயப் பொருள்கள்தாம். என்றா லும் என் பணியாளுக்கு இவை ஒன்று கூட இணையாக மாட்டாதே! ஒரு காரியம் வேண்டுமானால் செய்யலாம். உங்கள் மூன்று அதிசயப் பொருள்களையும் என் னிடம் கொடுத்தீர்களானால் என் தம்பி நோமைத் தருகிறேன்!" என்றான் ஆண்டிரி.

வியாபாரிகள், "ஐயோ! இது அடுக் காது. உங்கள் நோமுக்கு இவ்வளவு விலையா! எங்கள் மூன்று பொருள்களை யும் அல்லவா கேட்கிறீர்கள். இது ரொம்ப வும் அதிகம்!" என்றார்கள்.

"இல்லவே இல்லை. நோமின் உதவியும் மதிப்பும் உங்களுக்குச் சரியாகத் தெரிய வில்லை. தெரிந்தால் நான் உங்களுக்கு இலவசமாகவே நோமைத் தந்திருக் கிறேன் என்று எண்ணுவீர்கள்" என்று கூறினான் ஆண்டிரி.

ஆண்டிரியின் பிடிவாதத்தைப் பார்த்து வியாபாரிகள் தங்களுக்குள் யோசித்தார் கள். நாம் இந்தச் சுத்தி, கோடாலி, குழல் இவற்றை வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறோம்? இந்த மூன்றையும் கொடுத்து விட்டுத்தான் தம்பி நோமை வாங்கிக் கொள்வோமே! அவன் இருந் தால் சாப்பாட்டுக் கவலை கிடையாது. இரவும் பகலும் எந்த வேளையும் நமக்கு வேண்டியதைக் கேட்ட மாத்திரத்தில் கொண்டு வந்து கொடுத்து விடுவான். இதைத் தவிர வேறு என்ன வேண்டும்?

எனவே வியாபாரிகள் சுத்தி, கோடாலி, ஊது குழல் மூன்றையும் ஆண்டிரியிடம் கொடுத்து விட்டு, "தம்பி நோம்! இனி நீ எங்களுடன் வரவேண்டும். எங்களுக்கு வேலை செய்ய வேண்டும். என்ன எங்க ளுக்குப் பணிவாக வேலை செய்வாயா? விசுவாசமாக இருப்பாயா?" என்றார்கள்.

"ஏன் செய்ய மாட்டேன்? என் கடமை வேலை செய்ய வேண்டியதுதானே? எனக்கு யாரானால் என்ன?" என்று சொன்னான்.

இதைக் கேட்டு வியாபாரிகள் அளவு கடந்த திருப்தியடைந்தார்கள். ஆண்டிரி யிடம் சொல்லிக் கொண்டு தங்கள் கப்பல் களுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அங்கே போனதும் நோமிடம் 'இதைக் கொண்டு வா, அதைக் கொண்டுவா' என்று சொல்லி வேண்டியதை வரவழைத்து, வயிறு வெடிக்கச் சாப்பிட்டார்கள். உண்ட மயக் கத்தில் சுருண்டு கீழே விழுந்து தூங்கியும் போய் விட்டார்கள்.

* * *

ஆண்டிரியோ அந்தப் பெரிய அரண் மனையில் தன்னந் தனியாக உட்கார்ந்து கொண்டிருந்தான். அவனுக்கு ஒரே வருத்த மாக இருந்தது. "ஐயோ! இந்த நோம் எங்கே போனானோ தெரியவில்லையே!" என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

"ஏன் இதோ இருக்கிறேனே! உங்க ளுக்கு என்ன வேண்டும்?" என்றான்.

இந்தக் குரலைக் கேட்டதும் ஆண்டிரி அளவு கடந்த மகிழ்ச்சியடைந்தான்.

"தம்பி, நோம்! எவ்வளவு காலதாமத மாகி விட்டது! நான் வீட்டுக்குப் போக வேண்டாமா? என் இளம் மனைவி எனக் காக ஏங்கிக் கொண்டிருப்பாளே! என்னை உடனே வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போ!" என்றான்.

ஆண்டிரி சொல்லி முடிக்கு முன் ஒரு சுழற் காற்று எங்கிருந்தோ வந்தது. ஆண் டிரியை அப்படியே வான மண்டலத்துக் குத் தூக்கிக் கொண்டு போய் விட்டது. ஆண்டிரி வானில் மிதந்து சென்று கொண் டிருந்தான்.

இப்படி அதிக நேரம் செல்லவில்லை. ஒரு சில நிமிஷங்களிலேயே தம்பி நோம்


எழுப்பிய புயற் காற்று ஆண்டிரியை அவன் சொந்த நாட்டில் கொண்டு போய்ச் சேர்த்து விட்டது.

* * *

இங்கு கப்பலிலிருந்த வியாபாரிகள் மயக்கம் தெளிந்து எழுந்தார்கள். எழுந்திருக்கும்போதே அவர்களுக்குப் பசியும் தாகமுமாக இருந்தது. "தம்பி நோம்! எங்களுக்கு ஏதாகிலும் சாப்பிடக் கொண்டு வா!" என்று கட்டளை யிட்டார்கள்.

அவர்கள் கட்டளையைக் கேட்பதற்கு யாராகிலும் இருந்தால்தானே? மீண்டும் மீண்டும் கத்தினார்கள். அவர்கள் கத்தியது தான் மிச்சம். யாரும் ஏன் என்று கேட்பாரில்லை. வியாபாரிகள் 'நோம் மீண்டும் ஆண்டிரியிடம் போய் விட்டானோ' என்று ஆண்டிரி யிருந்த தீவை எட்டிப் பார்த்தார்கள். தீவைக் காணவில்லை! தீவிருந்த இடத்தில் பழையபடியே நீல அலைகள் மோதிக் கும்மாளம் அடித்துக் கொண்டிருந்தன!

வியாபாரிகளுக்கு அளவு கடந்த கோபம். "அயோக்கியன்! நம்மை இப்படி ஏமாற்றி விட்டான், பார்த்தாயா?" என்று ஆத்திரத்தோடு பேசிக் கொண்டனர்.



ஆத்திரப் பட்டு என்ன பிரயோசனம்? அவர்களால் இனி என்ன செய்யமுடியும்?

ஆகவே தங்கள் கப்பல்களின் பாய் மரங்களை அவிழ்த்து விட்டனர். காற்று அடித்துப் போன திசையில் அவர்களுடைய கப்பல்கள் சென்றன.

* * *

வான வீதியில் மிதந்து சென்ற ஆண்டிரி நேரே தன் வீட்டுக்குப் பக்கத்தில் போய் இறங்கினான். ஆனால் அங்கு அவன் வீடு இருந்த இடத்தில் வெறும் குட்டிச் சுவர்கள்தான் நின்றன. அவன் வீடு எரிந்து போய்க் கிடந்தது.

ஆண்டிரி இதைப் பார்த்ததும் திடுக்கிட்டான். வீடுமில்லை; ஆசை மனைவியுமில்லை என்றால், அவனுக்கு எவ்வளவு ஏமாற்றமும் வருத்தமுமாக இருக்கும்! அந்த வருத்தத்தில் தலை கவிழ்ந்து கொண்டு கடற்கரைக்குப் போனான். உள்ளத்தில் துயரக் கடல் கொந்தளிக்க, அவன் நீலக் கடல் ஓரமாக நடந்து சென்றான். அங்கே ஒரு பாறை தெரிந்தது. அந்தப் பாறையின் மீது உட்கார்ந்து கொண்டான். தன் துயர வாழ்க்கையை நினைத்து நினைத்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில் எங்கிருந்தோ ஒரு புறா பறந்துவந்து அவன் முன்னால் படீரென்று விழுந்தது. ஏதோ தரையில் விழுந்ததே என்று அவன் பார்வையைத் திருப்பிப் பார்த்தபோது அவன் கண்கள் அதிசயத்தினால் மலர்ந்தன. அவன் மனைவி மரியா நின்று கொண்டிருந்தாள். ஆம்! புறா இளவரசியாக மாறி யிருந்தது!

ஆண்டிரியும் மரியாவும் எத்தனையோ நாட்களுக்குப் பிறகு ஒருவரை யொருவர் பார்க்கிறார்கள்! பிரிந்தவர் கூடினால் அவர்கள் உள்ளத்தில் எத்தகைய ஆனந்தம் பொங்கி வழியும் என்பதை விவரித்துச் சொல்லவும் வேண்டுமா?

அவர்கள் இருவரும் வெகு நேரம் வரை பேசிக் கொண்டிருந்தார்கள். பிரிந்திருந்த இடைக்காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைப் பற்றி யெல்லாம் பேசிக் கொண்டார்கள். மரியா, ஆண்டிரி புறப்பட்டுப் போன பிறகு நிகழ்ந்ததைக் கூறினாள்:

"அன்பே, தாங்கள் என்னை விட்டுப் புறப்பட்டீர்கள். உடனே நானும், நீங்கள் வீட்டிலில்லாத வேளை அரசன் வந்து எங்கே என்னைத் தொந்தரவு செய்வானோ என்று பயந்து கொண்டு புறாவாக மாறி விட்டேன். இது அரசனுக்குத் தெரியாது. நான் நினைத்தாற் போலவே, என்னை அழைத்து வருமாறு மூன்று முறை ஆள் அனுப்பினான். மூன்று முறையும் நான் அகப்படவில்லை. அரசன் கோபமுற்று நம் வீட்டை எரித்து விடும்படி கட்டளையிட்டு விட்டான். அப்போதிலிருந்து நான் இப்படியே புறாவாகக் காட்டிலும் மேட்டிலும் தோப்பிலும் துரவிலும் சுற்றி அலைந்து வருகிறேன்" என்றாள்.

இந்தக் கதையைக் கேட்ட ஆண்டிரி மிகுந்த வருத்த முற்றான். ஆனால் சும்மாயிருந்து விடவில்லை. "தம்பி நோம்! இந்தச் சமுத்திரக் கரையில் ஒரு அழகிய மாளிகையை எழுப்பித் தருவாயா?" என்று கேட்டான்.

"இதோ எழுப்பித் தருகிறேன். ஒரு இமைப்பொழுதில் தருகிறேன்" என்றான்.

அவன் சொன்னபடியே அவர்கள் திரும்பிப் பார்க்குமுன் அங்கு ஜார் அரசனின் அரண்மனையைவிட அழகும் கம்பீரமும் துலங்கும் அரண்மனை எழும்பி யிருந்தது. அந்த அரண்மனையைச் சுற்றிப் பச்சைப் பசேர் என்று அழகிய நந்தவனம் காட்சியளித்தது. மரங்களிலிருந்து வண்ண வண்ணப் பறவைகள் இனிய குரலில் கான மழை பொழிந்தன. பலவகையான மிருகங்கள் தோட்டம் பூராவிலும் சுற்றிச் சுற்றி வந்தன.

ஆண்டிரியும் மரியாவும் அவர்கள் உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்தனர். புது அரண்மனையை நோக்கிச் சென்றனர். அந்த அரண்மனையில் எத்தனையோ அழகிய இடங்கள் இருக்க ஒரு ஜன்னலில் வந்து இருவரும் உட்கார்ந்து ஒருவரை யொருவர் விழுங்கி விடுவது போல் பார்த்துக் கொண்டே யிருந்தனர். சற்று நேரம் பொறுத்து இனிய காதல் சம்பாஷணையில் ஈடுபட்டனர்.

இப்படி அவர்கள் ஒருநாள், இரண்டு நாட்கள், மூன்று நாட்கள் ஆனந்தமாகப் பொழுதைக் கழித்தனர். அதற்கு மேல் அவர்கள் ஆனந்தம் நீடிப்பதாயில்லை!

நான்காவது நாள் ஸார் அந்தப் பக்கம் வேட்டையாட எதேச்சையாக வந்து சேர்ந்தான். கடற்கரையில் மாபெரும் அரண்மனையைப் பார்த்தவுடன் ஸார் திகைத்து நின்று விட்டான். "கடற்கரையில் இதுவரை ஒரு கட்டடம் இருந்தது கிடையாதே? இப்பொழுது எந்த அயோக்கியன் என் அனுமதியின்றி இங்கே இந்தக் கட்டடத்தைக் கட்டினான்? யார் இதில் வசிக்கிறார்கள்?" என்று கோபத்தில் இரைந்தான்.



உடனே அரச தூதர்கள் துப்பு விசாரித்து வரப் புறப்பட்டார்கள். அவர்கள் விரைவிலே திரும்பி வந்து வல்லில் ஆண்டிரியும் அவனுடைய மனைவியும் வசிக்கிறார்கள் என்று கூறினார்கள்.

இதைக் கேட்டதும் ஸாரின் கோபம் அதிகமாகியது. 'எங்கிருப்பது என்பதும் தெரியாது, என்ன பொருள் என்றும் தெரியாது' என்பதையும் கொண்டு வந்திருக்கிறானா என்று பார்த்து வரும்படி மீண்டும் ஆட்களை அனுப்பினான். அவர்கள் ஓடிப் போய்ப் பார்த்து விட்டு வந்து, ஆண்டிரி 'எங்கிருப்பது என்பதும் தெரியாது, என்ன பொருள் என்றும் தெரியாது' என்பதுடன் வந்திருப்பதாகக் கூறினார்கள்.

இதைக் கேட்டானோ இல்லையோ ஸாருக்கு அளவு கடந்த கோபம் பொத்துக் கொண்டு வந்து விட்டது.

அரசன் தன் படையைத் திரட்டச் சொன்னான். ஆண்டிரி வசிக்கும் அரண்மனையை மண்ணோடு மண்ணாக இடித்துத் தள்ளச் சொன்னான். ஆண்டிரியையும் அவன் மனைவி இளவரசி மரியாவையும் சிறைப்படுத்தி வந்து கொலைத் தண்டனை விதிக்கச் சொன்னான்.

அரசனின் கட்டளையைக் கேட்டதும் ஸாரின் படை புறப்பட்டது.

ஆண்டிரி தன்னை நோக்கிவரும் படையைப் பார்த்தான்! பெரும்படை. ஆனால் அவன் நிலை கலங்கவில்லை. தன் கோடாலியை எடுத்தான். அதன் கைப்பிடியைப் பிடித்து நேராக நிறுத்தினான். 'டப் டப்' என்று கோடாலி தன்னைத்தானே அடித்துக் கொண்டது. உடனே ஒரு கப்பல் தோன்றியது. இன்னொரு முறை 'டப் டப்' என்று அடித்தது. இன்னொரு கப்பற்படை வந்தது. இப்படி நூறு முறை அடித்துக் கொண்டதில் நூறு கப்பல்கள் தோன்றின அந்த நீலக் கடலில்.

ஆண்டிரி அடுத்தாற்போல் தான் வைத்திருந்த ஊது குழலை எடுத்து ஊதினான். கத்தி கேடயம் தாங்கிய பெரும் படை தோன்றியது. அந்தச் சைன்யத்தின் தலைவன் குதிரை மீது வந்து ஆண்டிரியிடம் "தாங்கள் எனக்கிடும் கட்டளை என்ன?" என்று கேட்டான்.

ஆண்டிரி ஸாரின் படையுடன் போர் செய்யும்படி கட்டளையிட்டான்.

அவ்வளவுதான். வானை பிடிக்கும்படியாகப் போர் முரசு முழங்கியது. வாத்தியங்கள் முழங்கின. படைவீரர்கள் முன்னேறித் தாக்கினார்கள். ஆண்டிரியின் படைவீரர்களின் தாக்குதலுக்கு ஸாரின் படைவீரர்களால் ஈடு கொடுக்க முடியவில்லை. கடலில் நின்ற பெரும் கப்பற் படை ஸாரின் தலைநகர் மீது குண்டுகள் பாய்ச்சித் தரை மட்டம் ஆக்கின.

ஸார் தன் படை வீரர்கள் புறமுதுகிட்டு ஓடுவதைப் பார்த்து, "நில்லுங்கள்! நில்லுங்கள்!" என்று சொல்லி நிறுத்தப் பார்த்தான்.

அப்போது ஆண்டிரி தன் சுத்தியை எடுத்தான். "சுத்தியே! இந்த ஸாரின் எலும்புகளைச் சுக்கு நூறாகப் பொடித்து விட்டு வா!" என்று அனுப்பினான்.

சுத்தி ஒரு குதி குதித்துக்கொண்டு முன்னே ஓடியது. அரசனை நெருங்கியதும் தரையில் இருந்து ஒரு எழும்பு எழும்பி ஸாரின் தலையில் பட்டென்று விழுந்தது. ஸார் அப்படியே மயக்கமுற்றுக் கீழே விழுந்தான். அடுத்த கணம் உயிர் நீத்தான்.

யுத்தம் நின்றது. நாட்டிலுள்ள மக்கள் எல்லாம் திரண்டு ஓடி வந்து ஆண்டிரியை அரசனாக இருக்கும்படி வேண்டிக் கொண்டார்கள். ஆண்டிரிக்கு என்ன ஆட்சேபம்? அவர்கள் விருப்பத்தை அங்கீகரித்தான். அவர்களுக்கெல்லாம் அற்புதமான விருந்து வைத்தான். அவன் இளவரசி மரியாவுடன் நீண்டகாலம் ராஜ்யத்தைச் சந்தோஷமாக ஆண்டு வந்தான். (முற்றும்)

Printed & Published by T. Sadasivam at the "Kalki" Press, No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras - 10. Editor: Mi. Pa. Somasundaram.

ராஜ சுலோசனா

லக்ஸ் டாய்லெட் சோப்

தேர்ந்தெடுக்கிறாள்

ஏனென்றால் அது தூய்மையானது, வெண்மையானது



இந்தியாவில் தயாரித்தது

LTS. 476-50 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

